V273:51587
N24
97383

வங்காளத் தலைவர்

# ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸ்

**Life and Speeches of C. R. DAS**

OCT 1921

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா

எழுதியது

PUBLISHED BY
THE CONGRESS PUBLICITY BUREAU
SOWCARPET, MADRAS

வங்காளத் தலைவரும்,
தேசமகா சபைத்தலைவருமான

# ஸ்ரீயுத
# சித்தரஞ்சன தாஸ்

ஜீவிய சரித்திரமும் உபந்யாசங்களும்

ஸ்ரீமான். கிருஷ்ணஸ்வாமி சர்மா
எழுதியது.

காங்கிரஸ் விளம்பர சபையாரால்
பிரசுரிக்கப்பெற்றது.

விலை அணா 12.

3254
3940
97883

PRINTED BY
P. R. RAMA IYAR AND CO.,
MADRAS

V275:51587
N21



1921-22ம் வருடத்திய
ஆமதாபாத் காங்கிரஸ் தலைவர்
ஸ்ரீயுத. சித்தரஞ்சன தாஸ்.

# ஸ்ரீயுத. சித்தரஞ்சன தாஸ்

## I

இம் பூமாதேவிக்கு எழில் முகமாய் நிற்பது நம் திருவளர்ந்தோங்கிய பாரதநாடு. இப்பாரத நாட்டிற்குப் பதுமராகம்போல் பொலிவுற்றிருப்பது வங்கநாடு. கங்காநதி பாயாநின்ற இவ்வங்கநாடு கல்வியிலும் ஒழுக்கத்திலும் பெரும்பெயர் பெற்றுள்ளது. தேனும் பாலும் ஈண்டு சொரியும். பண்டைகாலத்துப் புராணங்கள் பல இந்நாட்டைச் சிறப்புடன் வர்ணிக்கும். இந்நாட்டில் எங்கும் தண்ணென விளங்குஞ் சோலைகளும் வானளாவிய பர்வதங்களும், துண்ணிய மணற்றரைகளும் கண்டோர் வியக்கும் நீரோடைகளும் உண்டு. என்றும் வற்றாத பல அருவிகள் இவ்வங்கநாட்டில் உண்டு. மூங்கில்நெல் தனக்குத்தானே விளைந்து சாய்ந்து ஆடும். மரங்களும் கொடிகளும் பூத்துக் காய்த்துத் தொங்கும். குடிகள் பண்டையில் பசியும் பிணியும் பகையுமின்றிக் கல்வியும் செல்வமும் மிக்குடையராய் இன்புற்று வாழ்ந்து வந்தனர். இவ்வண்ணம் பொன்னாலும் மணியாலும் பொலிவுபெற்று பார்மகட்கு மணிமுடிபோல இவ்வங்கநாடு விளங்கியிருக்கும். இவ்வங்கநாடு ஒன்றே பாரதநாட்டில் நடுநாயகமாய் விளங்கும். பொன்

முடிதரித்த பூபாலர்கள் பலரும், நாற்கவிபடைத்த கவிவாணர்கள் பலரும், சரித்ராசிரியர்களெல்லோரும், சித்திரக்காரர்களும் வசனமொழி பொழியும் பிரசங்கிகளும், சாஸ்திர ஞானிகளும், பகவத் பக்தி முதிர்ந்த பாகவதர்களும், கற்புக்கரசி மங்கையர்களும், வைத்தியசாஸ்திர நிபுணர்களும் இந்நாட்டில் வாழ்வர். பாரதநாட்டின் நாகரீகத்திற்கு உறைவிடம் வங்கநாடு. இவ்வங்கநாட்டில் கடந்த இரண்டு நூற்றாண்டில் எண்ணிறந்த புருட சிரேஷ்டர்கள் தோன்றி உலகத்தை நல்வழிப்படுத்தலானார்கள். வெகுகாலமாக பாரதநாட்டில் புருடன் மாண்டபின் மனைவி உடன்கட்டையேறுதல் என்னும் கொடிய ஆசாரத்தை யொழிக்கப் பாடுபட்ட இராஜாராம் மோஹன்ராய் இவ்வங்கநாட்டவரே. இந்துமதத்தின் ஆசாரவழிகளில் அநாகரிகமாயும் இக்காலத்திற் கொவ்வாததாயு மிருப்பவைகளைக் களைந்து புதிய ஆசாரத்துடனும் கோட்பாடுகளுடனும் ஏற்பட்ட பிரம்ம சமாஜத்தை ஸ்தாபித்தவரும் இராஜாராம் மோஹன்ராய் அவர்களேயாவர். மகரிஷி தேவேந்தரநாத தாகூர், கேசவசந்திரசேனர், ஸஸிபாத பானர்ஜி முதலானோர் இப்பிரம்மசமாஜத்திற்கு வைரம்போன்றவர்கள். ஆசார சீர்திருத்தத்தில் தீவிர ஞானங்கொண்டு விதவா விவாகம் சாஸ்திர சம்மதம் என ஸ்தாபித்த ஈச்வர சந்திர வித்யா சாகரரும் இந்நாட்டவரே. விக்கிரஹாராதனைகொண்டு பக்திவலையிற் பட்டு பரமஞானியாய் விளங்கின பரமஹம்ஸ இராம கிருஷ்ணரும் இவ்வங்கநாட்டவரே. பாரதநாட்டின் தொன்மைவாய்ந்த வேதப்பொருளையும் உபநிடதப் பொருளையும் உலகத்திலுள்ள எல்லா மதத்தின[illegible]

களும் அறியும் பொருட்டு இந்துமதத்தின் மேலான சாராம்சத்தை எடுத்துக்கூறி திக்குவிஜயஞ் செய்த ஸ்வாமி விவேகாநந்தரும் வங்கநாட்டவரே. வசன மாரிபெய்யும் சுரேந்தரநாதபானர்ஜி, விபின சந்திரபாலர் முதலானோர் பிறந்ததும் இவ்வங்கநாடே. உலகத்திற்கே மகாகவியென விளங்கிவரும் ரவீந்தரநாத தாகூர் பிறந்த இடமும் வ[illegible]டே. ஜடதத்துவ சாஸ்திரத்தில் நுண்ணி[illegible]வைக்கொண்டு மேனாட்டார்களும் திடுக்கிடும்[illegible]தங்களைக் கண்டுபிடிக்கும் ஜகதீச சந்திரவஸுவும் வங்கநாட்டவரே யாவர். பாரதநாட்டு ரஸாயன முறையில் இணையற்ற பிரபல்ல சந்தரரேயும் வங்கத்தவரே யாவர். சட்ட நிபுணரெனப் பெயர்பெற்ற ராஷ்விகாரி கோஷும், பத்திரிகை நடத்துஞ் சாமர்த்தியம் பெற்ற மோதிலால் கோஷும் வங்கநாட்டைச் சேர்ந்தவர்கள். சிறந்த பக்திவாய்ந்து தேசத்திற்காக ஆவியிழந்த குதிராம்போஸ், பிரம்மபாந்த உபாத்யாயர் இவ்வங்கநாட்டைச் சேர்ந்தவர்கள். பரம தேசபக்தியும் ஆன்ம அறிவும் கொண்டு கலியுக மகாயோகி எனக்கொண்டாடப்பெற்று வரும் ஸ்ரீ அரவிந்த கோஷும் இப்புனித நாட்டைச் சேர்ந்தவர். வனிதா இரத்தினங்களிற் சிறந்த தோரளா தேவியும், ஸரோஜினிதேவியும், சாரளாதேவியும், ஸ்வர்ணகுமாரிதேவியும் இவ்வங்கநாட்டைச் சேர்ந்தவர்கள். விவாகத்திற்கு ஏற்பட்ட வரதட்சிணை விஷயத்தில் தன்பொருட்டுத் தகப்பனார் துக்காக்கிராந்தரா யிருக்கும் நிலைமை யறிந்து குடும்பத்தைக் காப்பாற்ற, ஒருவருமறியாத வண்ணம் உயிர் மாய்த்துக்கொண்ட ஸ்நேகலதாவும் இவ் வங்கநாட்டைச்

சேர்ந்தவள். சரித்திர ஆராய்ச்சியில் மிக்க பாண்டித்தியம் பெற்ற யதுநாதசிர்க்கார், ராதா கமால் முகர்ஜி முதலானோரும் வங்கநாட்டவர்கள். கல்விக்கும், தொழிலுக்கும் மற்ற தர்மங்களுக்கும் வரையாது கொடுத்த வள்ளல் தாரகநாத பலித் பிறந்ததும் இந் நாடே. இந் நாட்டில்தான் காங்கிரஸ் தலைவர் பலர் [illegible]னர். உமேஷசந்திர பானர்ஜி, மனமோகன் [illegible] ஆனந்தமோஹன் போஸ் முதலானோர் [illegible]தசசேவையில் ஈடுபட்டு மாண்டனர். அர்த்தசாஸ்திர நிபுணரெனவும் சரித்திரப் பண்டிதர் எனவும் கொண்டாடப் பெற்ற ரோமேஷ சந்திரதத்தரும், சித்திர நிபுணர்களென உலகப் பிரசித்தி பெற்ற அபநேந்திரநாத தாகூரும் ககனேந்திரநாத தாகூரும் வங்கநாட்டிற் பிறந்தவர்கள். வைத்தியத்தொழிலில் முக்கியமாக ஆயுர்வேத சாஸ்திரத்தில் கைதேர்ந்த வைத்தியரத்தின நாகேந்திரநாத சேனர் பிறந்ததும் வங்கநாடே. வங்கநாடு ஒன்றே பாரத நாகரிகத்திற்கும் மேனாட்டு நாகரிகத்திற்கும் முதன்மையானது. கீழ் நாட்டின் டாம்பீக மற்ற நாகரிகத்திலிடையே மேனாட்டின் பகட்டான நாகரிகம் வங்கநாட்டில் வாளாவளரும். வங்கநாட்டவர்களிற் சில[illegible]ன் முதலாக மேனாடுகளுக்குச் சென்று கல்வி பயின்று அரசாங்க உத்தியோகங்களிலும் தொழில் சாஸ்திரத் துறைகளிலும் இருந்து வருகின்றனர். வங்க நாட்டவர்கள் பொதுவாக மிக துணிகரமுள்ளவர்கள். தங்கள் நாட்டைப்பற்றிய அபிமானம் அவர்களுக்கு அதிகம் உண்டு. வங்காளிகள் வங்கதேசத்தை அபிமானிப்பது போல மற்ற மாகாணத்தவர்கள் தங்கள் மாகாணங்களை அவ்வளவு

அபிமானிப்ப தில்லை. இதனாற்றான் வங்காளிகள் அதிக சுயநலங் கொண்டவர்களெனப் படுவார்கள். வங்காளிகள் ஜாதீய மரியாதையிலும் தன் மதிப்பிலும் அதிக ஜாக்கிரதையுள்ளவர்கள். மிகப் பிடிவாதங் கொண்டவர்கள். முதிர்ந்த உணர்ச்சி கொண்டவர்கள். சுதந்தர இச்சை கொண்டவர்கள். இத்தகைய வகுப்பார்களிற் சிறந்த ஒரு ப[illegible]தன குடியில்தான் நம் சித்தரஞ்சன தாஸர் பிற[illegible]தாஸ் வம்சத்தார்கள் வெகுகாலமாகவே [illegible]ட்டில் நல்ல அந்தஸ்துள்ளவர்கள். பூர்வம், த[illegible]த்தார்கள் அரசுரிமை பெற்றிருந்தார்கள். நல்ல இரணவீரர்கள். க்ஷத்திரிய தர்மத்தை நன்கு காப்பாற்றினவர்கள். நல்ல இராஜதந்திரிகள். வங்க நாட்டில் பால் வம்சத்தார் இராஜ்யபரிபாலனஞ் செய்கையில் தாஸ் வம்சத்தார்கள் சிறந்த படை வீரர்களாகவும் தளபதிகளாகவும் இருந்தார்கள். கிறிஸ்து பிறந்த பத்தாவது நூற்றாண்டில் தாஸ் வம்சத்தார்கள் பிரம்மபுத்திரா நதிக்கரையிலும் அதைச்சுற்றிலுள்ள பிராஞ்சியங்களிலும் மணிமுடி புனைந்து பிரஜா பரிபாலனஞ் செய்து வந்தார்கள். கிழக்கு இந்திய கம்பெனியார் பதினேழாவது நூற்றாண்டிலும் பதினெட்டாவது நூற்றாண்டிலும் வங்க நாட்டில் வாணிகஞ் செய்து வரும் நாளில் அன்னவர்களுக்குச் சகாயமாகவும் தாஸ் வம்சத்தார்கள் இருந்தார்கள். தாஸ் வம்சத்தார்களிற் பலர் வீரமொடுங்கி வாணிகத் துறையில் இறங்கி மானஜீவனஞ் செய்யலானார்கள். இப்பொழுதும் தாஸ் வம்சத்தார்களிற் சிலர் பிரிட்டிஷ் துரைத்தனத்தில் உயர்ந்த உத்தியோகப் பதவி பெற்றவர்களாக யிருக்கின்றனர். தாஸ் வம்சத்தார்கள் பொது

வாக நல்ல தெய்வபக்தி வாய்ந்தவர்கள். சித்த
ரஞ்சன தாஸின் தகப்பனார் பாபு பூபன் மோஹன்
தாஸ் கல்கத்தா ஐக்கோர்ட்டில் அடர்னி (வக்கீல்)
யாக யிருந்தார். கல்கத்தாவிலுள்ள அக் காலத்திய
வக்கீல்களுக்குள் பூபன் தாஸும் சிறந்தவர். பூபன்
தாஸிடம் கட்சிக்காரர்கள் போனால் வெற்றி பெறு
வது நிச்சயம். கட்சிக்காரர்களுடைய வியாச்சியங்
களை நன்றாய் ஆராய்ச்சி செய்து நீதி மன்றத்தில்
அவர் நன்கு வாதாடுவார். ஏழைகளுக்கும் திக்கற்ற
வர்களுக்கும் பரம சஞ்சீவியாய் அவர் இருந்தார்.
அவரது மனைவியும் நல்ல பரிசுத்த ஹிருதயங்
கொண்டவள். கணவனுக்குரிய காதலி. மணமகனுக்
குகந்த மங்கை. கணவன் சொற்றவறாத பாவை.
அவ்விருவர்களுக்கும் பிறந்த இரண்டாவது புத்திரன்
சித்தரஞ்சன். சித்தரஞ்சனின் தகப்பனார் பூபன்
மோஹன் தாஸ் சிலகாலம் பத்திரிகைத் துறையில்
இறங்கி விஷயதானஞ்செய்துவந்தார். கொஞ்சகாலம்
கழிந்தபின்னர் பூபன் தாஸ் வங்காளப் பத்திரிகைகள்
சிலவற்றில் சம்பந்தப்பட்டுச் சிறந்த பத்திரிகாசிரிய
ராகவும் விளங்கினார். பிரம்ம சமாஜத்தைப் பற்றிய
‘பிரம்மோ பப்ளிக் ஒபினியன்’ என்னும் பத்திரிகைக்
குச் சிறந்த பத்திராதிபராகயிருந்து பிறகு ‘வங்கா
ள பப்ளிக் ஒபினியன்’ என்னும் பத்திரிகைக்குப் பத்
திரிகாசிரியராக யிருந்தார். வங்காளத்திலுள்ள பத்
திரிகாசிரியருக்குள் இவர் ஒருவர் சிறந்தவராக அக்
காலத்தில் விளங்கினார். பத்திரிகை நடத்துவதிலும்
பத்திரிகைக்கு விஷயங்களெழுதுவதிலும் பூபன் தாஸ்
மிக்க சாமர்த்தியமுள்ளவரெனப்பல வங்க நாட்டுப்
பத்திரிகாசிரியர்களே கூறியிருக்கின்றனர். பத்திரி



கையில் விஷயங்கள் உள்ளபடி எழுதுவதே அவரது
நோக்கம். பிழைதோன்றுமிடத்து வெகு கண்டிப்
பாய்க் கண்டிக்கும் குணத்தைக் கொண்டவர். அவர்
பத்திரிகை ஒரு சார்பாகவேயிராது. தற்காலத்தில்
சிற்சில பத்திரிகாசிரியர்கள் ஒருசார்பாக எழுது
வதும் தன்னையும் தன்னைச்சேர்ந்தவர்களையும் பற்றி
அதிகமாகத் துதித்து எழுதுவதும், தங்கள் குற்றங்
களைக் களையாது புகழ்ந்து எழுவதுமாக யிருப்பது
போல அக்காலத்தில் பூபன்மோஹன் இருந்ததில்லை.
ஹிந்து சமூகத்தின் சிற்சில துராசாரங்களையும் சாஸ்
திரம் சாஸ்திரம் என்னும் பெயரால் வைதிகர்கள்
செய்யும் அக்கிரமங்களையும், சம்பிரதாயம் என்னும்
குரூரவழக்கங்களைக்கொண்டு மூர்க்கமாய் ஸ்திரீபுரு
டர்கள் செய்யும் அநீதிகளையும் பூபன் தாஸ் தனது
பத்திரிகையில் எடுத்துக் கூறி அவைகளை யொழிக்கப்
பல பரிகாரங்களையுஞ் செய்துவந்தார். காளிக்குப்
பூதபலி, விக்கிராராதனை முதலிய ஆசாரங்களை வெகு
கண்டிப்பாய் அவர் கண்டித்துவந்தார். பூதபலி
சாஸ்திர சம்மதமல்லவென்று அடிக்கடி அவர் தர்க்
கித்துவந்ததுடன் அவ்விஷயமாகத் தனது பத்திரி
கையில் விடாது பல வியாசங்கள் எழுதினார். பூபன்
பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர். பிரம்ம சமாஜத்
திற்கு அவர் அக்காலத்தில் நடுநாயகமாய் விளங்கி
னார். மஹரிஷி தேவேந்தரநாத தாகூர், கேசவ சந்
திரசேனர் அவர்களிடத்தில் பூபனுக்கு அதிகமரி
யாதை யிருந்ததுபோலவே அவர்களும் பூபனிடத்
தில் மிக்க மரியாதை பாராட்டி வந்தனர். பூபன்
மோஹன் நல்ல தேசாபிமானி. தேசம் க்ஷேமமடை
வதில் அதிதீவிர உணர்ச்சி அவருக்கு உண்டு. அவர்

வெகு உதாரி. பணத்தை ஓட்டாஞ்சில்லிபோல அவர் செலவிடுவார். தானதர்மஞ் செய்வதில் மிக்க பேர்போனவர். தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர் சதா உதவி புரிந்துவந்தார். அவர், தன் பந்துக்களுக்குப் பேருதவிசெய்தும், பந்துக்களில் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் படிப்புப் புகட்டியும் வந்தார். சுருங்கச் சொல்லின் பூபன் மோஹன் தன் பந்துக்களுக்குச் சஞ்சீவியாயிருந்தார். பணவருவாயிலறிந்து அதற்குத்தக்கபடி செலவு செய்யாமல் மிதமிஞ்சின செலவுசெய்யவே பூபன் கடனாளியானார். கடன்காரர்கள் அவரை நாற்புறமும் சூழ்ந்து கொண்டார்கள். 'கடன் பட்டார் நெஞ்சம் போல' என்றபடி பூபன் வெருவாய்க் கலங்கினார். எண்ணாத தெல்லாம் எண்ணினார். தன்னைத்தான் வெறுத்துக்கொண்டார். பிரபஞ்சம் இவ்வளவுதானா வென்ற வைராக்யம் புதிதாகத் தோன்றிற்று. கடன் தீர்க்க நிர்வாகமில்லாமல் கடைசியாக அவர் கோர்ட்டில் அடைக்கலம் புகுந்தார்! அவர் கடனாளியாய் விட்டாரென்று பலர் வருத்தமடைந்தனர். அப்புரர்தன குடும்பத்திற்கு இப்படியும் நேர்ந்ததேயென்று சிலர் துக்கித்தனர். என் செய்வது? விதி யாரைவிடும். மன்னாதி மன்னரெல்லாம் விதியென்னும் நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கவில்லையா? தவசிரேஷ்டர்கள் இவ்விதியென்னும் மாயைக்குள் அகப்பட்டுத் திக்குதிசை தெரியாது தயங்கவில்லையா? பூபன் மோஹன் தனக்குவந்த கஷ்டத்தை நினைத்து நினைத்துச் சாலவும் மனமுருகிக் கிடந்தார். மனோவியாதிகொண்டு அவர் நடமாடவே தேகம் இளைத்து நோய்கொண்டார். எல்லாவியாதிக்கும் மருந்துண்டு;



ஆனால் மனோ வியாதிக்கு மருந்து கிடையாதல்லவா? பூபன் மோஹன் கடைசியாக வியாதியால் வருந்தி மண்ணுலகைவிட்டு விண்ணுலகடைந்தார். அவர் பெரிய குடும்பி. அவருக்கு நான்கு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. அப்பெண்ணிடத்தில் தாய் தகப்பன்மார்களுக்கு அதிக பிரியமுண்டு. அப்பெண் தகப்பன் செல்வியாகவே யிருந்தாள். அப்பெண் நல்ல கல்வியுடையவள். சங்கீதத்தில் நல்ல ஞானங் கொண்டவள். 1917-ம் வருஷத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மஹாசபையில் சித்தரஞ்சனரின் சகோதரியும் சாளாதேவியுமே தேசகீதங்களைப் பாடினார்கள். சித்தரஞ்சனின் சகோதரர்களில் ஒருவர் பாட்னாவில் ஜட்ஜியாகயிருக்கிறார். ஒருவர் பர்மாவிலும் மற்றொருவர் கல்கத்தாவிலுமாக யிருக்கிறார்கள். அவர்களுள் சித்தரஞ்சனே சிறந்தவர்.

---

## II

சித்தரஞ்சன் சிறு பிராயத்தில் பவானிபூரிலுள்ள லண்டன் மிஷனரி கலாசாலையில் கல்வி பயின்றார். பவானிபூர் என்பது கல்கத்தா மாநகரில் ஒரு பேட்டை. காளிகட்[illegible]திற் [illegible]மீபத்தே யுள்ளது. சென்[illegible]க்கு மயிலை யெப்[illegible]ப்படி கல்கத்தாவுக்கு பவானிபூர். இந்த பவானிபூரில் இன்னும் சித்தரஞ்சன் வசிக்கிறார். லண்டன் மிஷனரி கலாசாலையில் சித்தரஞ்சன் பயின்ற காலத்தில் வேறு ஹிந்து [illegible]லே அங்கே கிடையாது. சின்னஞ் சிறு வயதில் வங்காள பாஷை கற்பிக்கும் சாதாரண பள்ளிக்கூடத்தில் வித்தியாரம்பஞ் செய்து, சின்னாட்

கழித்து மிஷனரி காலசாலையில் பிரவேசப் பரீட்சை வரை இவர் கல்வி பயின்று வந்தார். கல்விச்சாலையில் இவர் உன்னத ஸ்தானத்தை வகிக்கா விட்டாலும் கூடியவரையில் பாடங்களைக் கற்று பரிட்சையில் தேறியே வந்தார். ஆரம்பத்திலேயே சரித்திரத்தில் இவருக்கு அதிக ஆவல் உண்டு. ஆங்கிலம் பேசுவதில் மிக்க அவா கொண்டவர். பிரவேசப் பரீட்சை மிஷன் கலாசாலையில் தேறினதும் இராஜதானி கல்லூரியில் உயர்தர படிப்புக்குப் போய்ச் சேர்ந்தார். இராஜதானி கல்லூரியில் படித்துவரும் நாளில் இவர் கல்லூரியைச் சேர்ந்த சங்கங்களுக்குக் காரியதரிசியாகவும் இருந்து அடிக்கடி உபந்யாசஞ் செய்வார். அந்நாளிலேயே இவர் நல்ல பேச்சுக்காரர் என்ற பெயர் உண்டாயிற்று. போதகாசிரியர்களும் மற்றவர்களும் சித்தரஞ்சனிடம் அதிக அன்பு பாராட்டுவார்கள். சித்தரஞ்சனருக்கு எல்லோரையும் மகிழ்விக்குங் குணம் இயல்பாகவே யுண்டு. இவர் மாணவனாயிருக்கையிலேயே இராப்பள்ளிக் கூடங்களமைப்பது, அநாதைகளுக் குதவுவது முதலிய சமுதாய ஊழியத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தார். மகாகவி ஷேக்ஸ்பியர் நாடகங்கள், மில்டன், பர்க்முதலியவர்களின் கிரந்தங்களை இவர் இடைவிடாது படித்துக் கொண்டே யிருப்பார். எட்மண்ட் பர்க் அவர்களின் உபந்யாசங்களை ஒரு எழுத்து கூட விடாமல் இவர் பாடம் பண்ணுவார். இதாலியா தேசத்து தேசாபிமானியான ஜோஸெப் மாஜினி அவர்களின் ஜீவிய சரிதையையும் உபந்யாசங்களையும் சதா சர்வகாலம் படித்துவருவர். இங்ஙனம் இடைவிடாது ஆங்கில பாஷா ஞானத்தை விர்த்தி செய்யக்கூடிய நூல்களைப்



படித்தது போலவே, தாய் பாஷையாகிய வங்காளி பாஷையை விர்த்திபண்ணும் நூல்களையும் படித்து வந்தார். சித்தரஞ்சன் இராஜதானி கலாசாலையில் பயின்று எப். ஏ. பரீட்சையுந்தேறி கடைசியாக பி. ஏ. பரீட்சையுந்தேறி பட்டமும் பெற்றார். பி. ஏ. பட்டம் பெற்றவுடன் சிலர் சர்க்கார் உத்தியோகத்துக்குப் போகும்படி தூண்டினார்கள். ஆனால் சித்தரஞ்சனருக்கு சர்க்கார் உத்தியோகம் சிறிதும் பிடிக்கவில்லை. என்றாலும், பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த சிலர் ஏற்கனவே இங்கிலாந்துக்குப் போகுதல் நலம் எனப்பன்முறை கூறியிருக்கவே, சித்தரஞ்சனர் இதுவே சமயமெனக் கண்டு, ஒரே பிடிவாதமாக சீமைக்குப் போக முயன்றார். சீமைக்குப் போய் கலெக்டர் பரீட்சை (I.C.S) க்குப் படித்து சிறந்த உத்தியோகத்தில் திரும்பிவர வேண்டுமென்கிற அவா முதன் முதலில் சித்தரஞ்சனருக்கு இருந்தது. ஆனால் அவ்வெண்ணம் இவர் சீமைக்குப் போனதும் நீங்கிற்று. நம் பாரதநாட்டில் சீமைக்குப் போகும் எண்ணம் வெகுவாய் வங்காளிகளுக்குத்தான் உண்டாயிற்று. பம்பாயிலுள்ள பார்ஸீ குலத்தாருக்குள்ளும் அவ்வெண்ணம் அதிகமாயிருந்த போதிலும் வங்காளிகளைப்போல அவ்வளவு முதிர்ந்த உணர்ச்சி மற்றவர்களுக்கு ஏற்படவில்லை. தவிர, வங்கநாட்டிலிருந்து சென்ற ஒரு நூற்றாண்டாக ஆயிரக்கணக்கான வங்காளிகள் மேனாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா, கனடா, இதாலியா, ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, ஜப்பான் முதலிய பல நவநாகரிகம் பெற்ற நாடுகளில் நூற்றுக்கணக்கான வங்காளிகள் இன்றும் வசித்து வருகின்றனர்.

வங்காளிகளுட் சிறந்த மேதாவிகள் மேனாடுகளுக்குச் சென்றால் அவர்களுடன் வங்காள வாலிபர் பலர் போவதுண்டு. ஜகதீச சந்திரவஸு அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் போயிருக்கையில் அவருடன் சில வங்கச் சிறுவர்கள் போனார்கள். மகாகவி ரவீந்திர நாதர் உலகயாத்திரை போகையில் அவருடன் சில வங்கச் சிறுவர்கள் போனார்கள். இம்மாதிரி பல வாலிபர்கள் மேனாடுகளுக்குப் போவதை வெகு சகஜமாகக் கொண்டார்கள். என்றாலும், முப்பது வருடங்களுக்கு முன்னர் வங்காளத்திலும் சீமைக்குப்போதல் கூடாதென்னுங் கூக்குரல் ஒருவாறு இருந்தது. அது வர வர ஒழிந்தது. சித்தரஞ்சனதாஸ் சீமைக்குப்போகப் பிரயத்தனஞ் செய்யாமலிருக்கப் பந்துக்கள் பலர் தடுத்தார்கள். என்றாலும், சித்தரஞ்சனதாஸ் அதைப் பொருட் படுத்தாது பிடிவாதமாகவே நின்றார்.

சித்தரஞ்சனதாஸ் கடைசியாக பாரத நாட்டை விட்டு கடல் கடந்த கண்டமாகிய இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். இங்கிலாந்துக்குப்போய்ச் சேர்ந்ததும் இந்தியன் ஸிவில் சர்விஸ் பரீட்சைக்குப் போக வேண்டுமென்கிற ஞாபகமே இவருக்குப்போய் விட்டது. இந்தியன் ஸிவில் உத்தியோகத்தில் ஒரு அருவெறுப்பும், சர்க்கார் உத்தியோகத்தில் ஒரு விரோதமும் சித்தரஞ்சனருக்கு உண்டாயிற்று. சுதந்தரத்துடன் இருக்க எத்தனிக்கும் ஒருவனுக்கு இப்பரீட்சை முட்டுக்கட்டை போலிருக்கு மென்பது இவரது துணிபு. லண்டன்மா நகரிலுள்ள சுதந்தர வாழ்க்கையும் ஜனங்களின் சுயேச்சையையும் அவர்களின் உரிமைகளையுங் கண்டு இந்தியாவிலும் இத்



தகைய தோற்றம் எக்காலத்தில் உண்டாகுமோ என்னும் எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. லண்டன் மாநகரிலுள்ள ஜனங்களைப் பாரத நாட்டிலுள்ள ஜனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப் பார்க்க சித்தரஞ்சனருக்குச் சொல்லொணாத் துயரமுண்டாயிற்று. இந்தியாவின் துர்ப்பாக்கிய நிலையை நினைத்து நினைத்து இவர் மனங்கசிவர். இந்தியர்களின் அவிவேக ஸ்திதியை எண்ணி எண்ணி ஆறாத்துயர் கொள்வர். இந்தியர்களின் திக்கற்ற நிலைமையைப் பற்றி சதா சர்வகாலமும் தன்னை யொத்த பாரதநாட்டுச் சிறுவர்களுடன் சொல்லி இவர் மனத்தேறுத லடைவர். இங்ஙனம் இரவு பகலாக இந்தியாவைப்பற்றிய ஞாபகம் இவர் மனதைவிட்டு நீங்காமலேயிருந்தது. கடைசியாகத் தன்னைத் தான் தேற்றிக்கொண்டு பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கலானார். பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்தாரே யொழிய ஞாபகமெல்லாம் இந்தியாவைப்பற்றியே தான் இவருக்கு இருந்தது. இங்கிலாந்தில் இருக்குங்காலத்தில் இவர் அங்குள்ள இந்தியச் சிறுவர்களுக்கும் மற்றைய ஆங்கில நண்பர்களுக்கும் இந்தியாவின் வறுமையைப்பற்றியும் தாழ்ந்த நிலைமையைப்பற்றியும் அடிக்கடி உபந்யாசஞ் செய்வார். இந்தியாவைப்பற்றி சிறிதளவு அக்கறை கொண்டிருந்த ஆங்கிலேயர்களுடன் பிரிட்டிஷ் ஆட்சி முறையைப்பற்றி வாதாடுவார். இந்தியாவைப்பற்றிய விஷயங்களை ஆராய்ச்சிசெய்ய சங்கமொன்றை இவர் இங்கிலாந்தில் ஸ்தாபித்தார். ஒவ்வொரு வாரமும் சபை கூடும். வியாசங்கள் படிக்கப்படும். இவ்விதம் சித்தரஞ்சன் தன் தாய் நாட்டிற்காக வேண்டிய வழிகளில் பொழுது போக்கினார்.

இப்படியிருக்கையில், காலஞ்சென்ற அரும் பெருங் கிழவனாரான தாதாபாய் நௌரோஜி இங்கிலாந்திலேயேயிருந்துகொண்டு பார்லிமெண்ட் சபைக்குப் பிரதிநிதியாகப் போகவேண்டுமென்று முயற்சித்து வந்தார். பார்லிமெண்ட் சபைக்குச் சாதாரணமாக இந்தியர்கள் போவது கிடையாது. ஏனெனில், இங்கிலாந்தில் சில வருடகாலம் வசித்து ஆங்கிலேயர்களுடன் நன்குபழகி அவர்களுக்காக உழைக்க முன்வருவதானால் வெகு யோசனையுடன் எலக்ஷனில் (தேர்தல்) தெரிந்தெடுப்பார்கள். இந்தியன் என்ற சாதிவேற்றுமை வந்துவிடும். இத்தகைய கஷ்டங்கள் உண்டு. அதனாற்றான் இங்கிலாந்தில் வெகு காலமளவு வசிக்கும் இந்தியர்கள் இந்த எலக்ஷனுக்கு நிற்பது கிடையாது. ஆனால் தாதாபாயோ அப்படியல்ல! 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து எலக்ஷனுக்கு நின்றார்: முதல் தடவையில் இவர் தோல்வியடைந்தார். மறுமுறை இவர் நின்றார். இங்கிலாந்திலுள்ள பின்ஸ்பரி என்னும் பிரதேசத்திற்குப் பிரதிநிதியாக இவர் நின்றார். ஆங்கிலேயர்களிற் சிலர் இவருக்குத் துணையாகநின்று உழைத்தனர். அப்பொழுது தாதாபாயிக்குச் சகாயமாக நம் சித்தரஞ்சனதாஸ் பல இடங்களில் மகாநாடு கூட்டி உழைத்தார். சித்தரஞ்சனதாஸ் தன் சகாக்களுடன் இடைவிடாது தாதாபாயிக்கு எப்படியாகிலும் பார்லிமெண்ட் பிரதிநிதிஸ்தானம் கிடைக்க வேண்டுமென்று இரவும் பகலும் உழைத்து வந்தார். இவருடைய உபந்யாசங்கள் சில இங்கிலாந்திலுள்ள ஆங்கில பத்திரிகைகளிலும் இந்தியாவிலுள்ள இந்திய பத்திரிகைகளிலும்



வெளிவந்தன—சித்தரஞ்சனரும் அவரது தோழர்களும் உழைத்த உழைப்புக்காக கடவுள் மனமிரங்கினாற்போல தாதாபாயிக்கு பின்ஸ்பரி பிரதேசத்தின் பிரதிநிதிஸ்தானம் கிடைத்தது. இந்தியன் ஒருவன் பார்லிமெண்ட் சபையில் பிரதிநிதிஸ்தானம் பெற்றது இந்தியாவுக்கு ஒரு பெருமையையளித்தது. தாதாபாய், சித்தரஞ்சனைத் தழுவி, முகமன் கூறி ஆசிர்வதித்தார். சிறு வயதிலேயே சித்தரஞ்சனருக்குப் பரமதேசபக்தரின் ஆசிர்வாதம் கிடைத்தது. சித்தரஞ்சனர் அளவிலா ஆநந்தங்கொண்டார்.

இங்ஙனம் சித்தரஞ்சனர் இங்கிலாந்தில் சில வருடகாலம் தங்கி பாரிஸ்டர் பரீட்சையிலுந்தேறி இந்தியாவுக்குத் திரும்பினார். சித்தரஞ்சன் இந்தியாவுக்குத்திரும்பி கல்கத்தாவுக்கு வந்தவுடன் காலஞ்சென்ற லால்மோஹன்கோஷ், சுரேந்தரநாத்பானர்ஜி முதலிய காங்கிரஸ்தலைவர்கள் தாதாபாயிக்கு உழைத்த காரணத்தால் இவரைக் கொண்டாடினார்கள்.

---

## III

சித்தரஞ்சன் கல்கத்தாவுக்கு வந்து சில மாதம் வரை சும்மாயிருந்தார். பிறகு, கல்கத்தா ஹைகோர்ட்டில் பாரிஸ்டர் வேலைபார்ப்பதற்காக இவர் ஆரம்பஞ்செய்தார். பாரிஸ்டர் வேலைபார்ப்பதற்குக் கோர்ட்டுக்குப் போவாரே தவிர, இவருக்குச் சந்துஷ்டிமட்டும் இல்லாமற் போயிற்று. தகப்பனார் பூபன் கடனாளியானாரென்னும் பெயர் குடும்பத்தின் கௌரவத்தையே கெடுத்துவிட்டதென்பதை நினைத்து நினைத்து சித்தரஞ்சன் மனமுருகினார். அப்

பெயர் நீங்குவதற்குத் தக்க முயற்சி செய்யவேண்டுமென்கிற அவா இவரைத் தூண்டிற்று. 'மானம் பெரிதேயன்றி பணம் பெரிதல்ல' என்று உறுதி கொண்டார். மனிதன் பொதுவாக தன்மதிப்பையும் தன் மானத்தையுங் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மதிப்பும் மானமும் அழிந்து பூமியில் வாழ்தல் கூடாது. மானத்திற்காகப் பண்டைகாலத்தில் தவசிகள், மன்னர்கள், ஸ்திரீகள் முதலானோர் ஆவிதுறந் திருக்கிறார்கள்.

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து"

என்னும் மேலோர் வாக்கியப்படி மானமழிய வந்தபோது உடலைக் காப்பாற்றும் வாழ்வானது இறவாமைக்கு மருந்தாகும். மானமே சகல காரியத்திற்கும் நல்வழியாம். மானத்தினால் நற்பெயரும், நற்பெயரால் கீர்த்தியும், கீர்த்தியினால் தனமும், தனத்தினால் தர்மமும், தர்மத்தினால் மோட்சமும் உண்டாகும். மானத்தை எவ்வாற்றாலும் இரட்சிக்கக்கடவது என்பது கட்டுரை. ஆகவே, இதையெல்லாமறிந்து சித்தரஞ்சன் தாதைக்குவந்த மானக்கேட்டை யொழிக்க அவர்பட்ட கடனையெல்லாம் கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்தார். மகன் தந்தைக்குக் காட்டும் கடமை இஃதன்றோ? மகனாய்ப் பிறந்ததின் பெரும்பாக்கியம் தந்தைக்கடன் முடித்தலன்றோ? எத்தனை புத்திரர்கள் தங்கள் தாய் தகப்பன்மார்களுக்குத் தொண்டு புரிந்திருப்பர்? உள்ளகாலமெல்லாம் தகப்பன்மார்கள் பிள்ளைகளுக்கு உழைத்தும் கடைசியாக அப்பிள்ளைகள் தகப்பன்மார்களுக்குச் சோறிடாமல் தெருவிலோட்டுவதை நாம் கண்டதில்லையா? தகப்பன்மார்களைச் சோறில்லாமல் துரத்தி அவர்கள் இறந்த பிறகு பலர் மெச்சும்படி பிண்டக்கிரியை செய்யும் பேதைப் புதல்வர்கள் நம் நாட்டில் எண்ணிறந்தவர்களில்லையா? தாய்க்கடன், தாதைக்கடன், ஆசாரியர்கடன், அதிதிகடன் முதலியவைகளைச் செய்வதே நம் நாட்டு சநாதன தர்மம்.



மேனாட்டு நாகரிகம் வளர வளர, நம் பாரதநாட்டில் தாய்க்கும் பிள்ளைக்கும் தகப்பனுக்கும் பெண்ணுக்கும், புருடனுக்கும் ஸ்திரீக்கும் ஒருவித சம்பந்தமின்றித் தனிமரம் நிற்பதுபோல் நம் குடும்பங்கள் இருக்கின்றன. தனிமரம் தோப்பாகாதென்னும் பழமொழியை நம் நவநாகரிகமுள்ளவர்கள் அறியாமற்போனதென்னே? மேனாடுகளில் தாய்க்கும் பிள்ளைக்கும் போக்குவரத்துகூட கிடையாதென்பர். தகப்பன் பிள்ளை வீட்டுக்கு உண்ண வந்தால் பணங்கொடுத்துவிட்டுத்தான் சாப்பிடவேண்டுமாம். பிள்ளை தகப்பன் வீட்டுக்கு வந்தாலும் அப்படியேதான். தாயும் தகப்பனும், பிள்ளையும் பெண்ணும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வெவ்வேறுதான் என்பது மேனாட்டின் நாகரிகம். இந்நாகரிகம் நம் நாட்டிற்கு வந்தது முதல் குடும்பங்கள் குலைந்தன. அனாதிகாலமாகவந்த கூட்டுக்குடும்பங்கள் யாவும் மேனாட்டு நாகரிகத்தின் முன் நிற்கமுடியாமல் மணிக்கயிற்றினின்றும் விடுபட்ட முத்துகள் போல் மூலைக்குமூலை சிதறின. தாயின் கண்ணீரும் தகப்பனின் கம்பலையும் நம் நாட்டின் உன்னத ஸ்திதியை யழித்தது. நிற்க, நம் சித்தரஞ்சனர் மேனாட்டு நாகரிகத்திலாழ்ந்திருந்த போதிலும் பாரதநாட்டின் சநாதன தர்மமாகிய பிதுர்க்கடனை அழிக்காமல் தகப்பனுடைய மானத்தையும்

குடும்பத்தின் மதிப்பையுங் காப்பாற்ற முன்வந்தது எவ்வளவு பெருந்தன்மை யென்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

சித்தரஞ்சனர் அக்காரணங்கொண்டே பொது விஷயங்களில் தலையிடாமல் தனியே தயங்கி நின்றார். பொது விஷயங்களிலும் தேசத்தைப்பற்றிய காரியங்களிலும் தலையிடுபவர்கள் மாசற்ற தன்மையைக் கொண்டவர்களாக யிருக்கவேண்டும். குற்றங்களுடன் ஒருவன் பொது விஷயங்களில் ஈடுபட்டால் உலகம் அவனை யிகழும். தற்காலத்தில் தேசசேவைக்கென்று முன் வருபவர்களிற் பலர் குற்றமுள்ளவர்களாகவே யிருக்கின்றனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் இயல்பினைக்கொண்டவர்களாகவே யிவர்கள் இருக்கின்றனர். நம் தமிழகத்தில் பொதுவாக இராஜீய வாழ்க்கையும் மற்ற பொது நல வாழ்க்கையும் மதிப்பின்றிப்போனதற்குக் காரணம் குற்றமுள்ளவர்களும் தோஷகுணத்தை இயற்கையாகக்கொண்டவர்களும் முதன்மையாக நிற்பதேயாம். பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்குச் சிறந்த ஆஸ்திகபுத்தியும், இன்மொழியும், ஜீவகாருண்யமும், சகோதர வாஞ்சையும் அவசியம் வேண்டும். இக்குணங்களில்லாதவர்கள் பொது வாழ்க்கைக்கு வருதல் சரியல்ல. நிற்க, சித்தரஞ்சனருக்குத் தோஷங்கள் ஒன்றும் இல்லாமலிருந்தும் தகப்பனருக்குண்டான தோஷமே தன் தோஷமெனக்கொண்டு பொதுக்காரியங்களில் ஈடுபடாமல் ஒதுங்கியேயிருந்தார். அப்படி யிருந்ததினாலேயே சித்தரஞ்சனருக்குப் பாரிஸ்டர் வேலையில் போதுமான பணம் வரவில்லை. பொதுக்காரியங்களுக்கு முன்



வந்து பொது ஜனங்கள் அறிந்தாலல்லாது வக்கீல்மார்களுக்குத்தக்க பணம் வராது. இது காரணம் பற்றியே பல வக்கீல்மார்கள் ஆரம்பத்தில் பொதுக் காரியங்களில் தலை தெரியாது திரிவதும், இராஜீயக் கூட்டங்களில் பலர் மெச்சும்படி தீவிரமாகப் பேசுவதுமாக யிருந்து, தங்கள் பெயர் நன்கு வெளிவந்தவுடன் கட்சிக்காரர்கள் பலர் வருவதும் போவதுமாக யிருக்கையில், சகல பொதுக்காரியங்களையும் விட்டுவிட்டுப் பணமே பிரதானமெனக்கொண்டு பணவருவாயினை நாடி அலைகின்றனர். பெயர் வெளிவருவதற்கும் கட்சிக்காரர்களின் கூட்டம் வீடுநோக்கி வருவதற்கும் பணவருவாயில் அதிகரிப்பதற்கும் இவ் வக்கீல் கூட்டங்கள் இராஜீய வாழ்க்கையில் ஈடுபடுகின்றனவேயன்றி வேறு காரணத்திற்கல்ல. இந்த மர்மத்தையறியாத சித்தரஞ்சனர் வெகுவாய்க் கஷ்டப்பட்டார். சித்தரஞ்சனருக்கிருந்த தீவிர தேசபக்திக்கும், முதிர்ந்த இராஜீய ஞானத்திற்கும், அருங்குணத்திற்கும், அபார யோக்கியத்தைக்கும் அக்காலத்திலேயே சிறந்த தலைவராக முன்வந்திருக்கலாம். ஆனால் சித்தரஞ்சனர் தன் நிலைமையை நன்கு அறிந்தவராகையால் அவசரப்பட்டுப் பொதுக்காரியங்களில் தலையிடாமல் முதல் முதல் ஜனங்களின் மதிப்பைப் பெற எண்ணினார். ஜனங்களின் மதிப்பைப் பெறுவதற்குத் தகப்பனார் பட்ட கடனைக் கொடுத்துவிட வேண்டுமென்கிற எண்ணமுண்டாகி அதற்குப் பாடுபடலானார். ஐக்கோர்ட்டில் பாரிஸ்டர் வேலையிலிருந்தும் தக்க பணவருவாயின்றி இவர் கஷ்டப்பட்டார். முதிர்ந்த சட்ட ஞானமும், நல்ல யோக்கியதையுமுள்ள வக்கீல்மார்கள் பணவருவாயின்றி அவ

திப்படுவதையும், சட்டஞானமும் அனுபவஞானமும் யோக்கியதையுமற்ற வக்கீல் மார்கள் மாதம் பதினாயிரக்கணக்காக சம்பாதிப்பதையும் நாம் நம் முன்பாகக் காண்கின்றோம். சித்தரஞ்சனர் ஐக்கோர்ட்டில் அதிகமாக வரும்படி வாராததைக்கண்டு வெளியூர்களுக்குப் போகலானார். ஆரம்ப பாரிஸ்டர் ஒருவருக்கு வெளியூர் கோர்ட்டுவேலைகளே சிறந்ததென்பது பலர் அபிப்பிராயம். எப்படியிருப்பினும், கல்கத்தா ஐக்கோர்ட்டுக்கு அதிகமாகப் போகாமல் சித்தரஞ்சனர் வெளியூர் கோர்ட்டுக்கே அதிகமாகப் போய்க் கொண்டிருந்தார். என்றாலும் இவருக்கு வரப்போகும் கீர்த்தியை யார் தடுக்க முடியும்? அபாரயோக்கியதையுள்ள இவரை இங்ஙனம் உலகறியாமல் இருத்தல் தகாதென நினைத்தே, பகவான் ஒரு வழியை யுண்டு பண்ணினார். மகாயோகியென விளங்கும் ஸ்ரீ அரவிந்தர்மீது வெடி குண்டு கலகக் கேசுகள் உண்டாயின. ஸ்ரீ அரவிந்தர் ஒரு பெரிய மகான். இவரைப்போல ஆங்கிலம் எழுதுவதிலும் பத்திரிகை நடத்துவதிலும் இந்தியாவில் வேறெவருங் கிடையாது. சிறு வயதிலேயே சீமையில் கல்வி கற்று, பரோடா சமஸ்தானத்தில் ஆங்கில போதகாசிரியராக யிருந்து 1906-ம் வருஷத்தில் தேசசேவை செய்ய கல்கத்தாவுக்கு வந்தார். 'வந்தேமாதரம்' 'கர்மயோகி' முதலிய பத்திரிகையை நடத்தின மகான் இவரே யாவர். பழுத்த தேசாபிமானி. இவர் வங்காளத்திற்குப் புதிய உயிரைக் கொடுத்தவர்.

1908-ம் வருடம் ஏப்ரல் மாதம் 30-ந்தேதி முஜபர்பூரில் முதல் முதல் வெடிகுண்டொன்று வெடித்தது. அதனால் நிரபராதிகளான இரண்டு ஐரோப்பி



யர்கள் இறந்தனர். அவ்வெடிகுண்டை எறிந்தவர்களில் ஒருவன் தினேசசந்திரராய். அவன் ஒரு குண்டால் தன்னைத்தானே கொன்றுக் கொண்டான். மற்றவன் குதிராம்போஸ் என்னுஞ் சிறுவன். இவன் தூக்கிலிடப்பட்டான். இது நடந்த இரண்டு தினங்களுக்குப்பிறகு மேமாதம் 2-ந்தேதி விடியற்காலையில் போலீஸ் படைகள் ஸ்ரீ அரவிந்தருடைய இருப்பிடத்தை முற்றுகையிட்டன. ஜில்லா சூப்பிரண்டெண்ட் க்ரீகனும் இன்ஸ்பெக்டர் வினோத விகாரி குப்தாவும் அரவிந்தர் எழுந்திரா முன்னமே சோதனைபோட உள்ளே போலீஸ்காரர்களுடன் புகுந்தனர். அவர்கள் ஸ்ரீ அரவிந்தரது உடன் பிறந்தாளான ஸ்ரீமதி ஸரோஜனிகோஷின் மார்புக்குச் சரியாக ஒரு குழல் துப்பாக்கியைப் பிடித்தார்கள். அரவிந்தருடைய கையில் பலமான விலங்குகள் மாட்டி மணிக்கயிற்றால் மடலோடுமடல் இறுகக்கட்டி இடுப்பில் கயிறுமாட்டி கல்கத்தா ஸெண்ட்ரல் போலீஸ் ஆபீசுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். திங்கட்கிழமை கல்கத்தா போலீஸ் மாஜிஸ்ட்ரேட்டான மிஸ்டர் தாரன்ஹில் முன்பாக அரவிந்தரை ஆஜர்ப்படுத்திப் பிறகு அலிப்பூர் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டான மிஸ்டர் பிர்லிமுன் கொண்டுவந்தார்கள். மேமீ 18-ந்தேதி ஆரம்ப விசாரணை தொடங்கிற்று. அதற்குள் இவருடன் குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் தொகை 39-ஆகிவிட்டது. இராஜ சக்கரவர்த்தியுடன் போர்புரிந்து இராஜ்யத்தைப் பிடுங்கிக் கொள்ள எத்தனித்துத் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் (ரிவால்வர்) வெடிகுண்டுகள் முதலான ஆயுதங்களை மாணிக் தோலா தோட்டத்தில்

சேர்த்து வைத்ததாக அவர்கள் குற்றஞ் சாட்டப்
பட்டனர். கவர்ன்மெண்டு தரப்பில் கவர்ன்மெண்ட்
வக்கீல்கள் யாரிடத்திலும் அதிகாரிகள் கேஸைக்
கொடுக்காமல் சென்னையிலிருந்து மிஸ்டர் நார்டனை
வரவழைத்து நியமித்தார்கள். அரவிந்தர் தரப்பில்
நம் ஸ்ரீயுத. சித்தரஞ்சனதாஸ் ஆஜரானார். 1908-ம்
வருடம் அக்டோபர்மீ 23-ந்தேதி ஸெஷன்ஸ்
கோர்ட்டில் விசாரணை தொடங்கிற்று. 1909-ம் வரு
டம் ஏப்ரல் மாதம் வரையில் விசாரணை நடந்தது.
நூற்றுக்கணக்கான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.
ஆயிரக்கணக்கான தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்
யப்பட்டன. கவர்ன்மெண்டுதரப்பில் மிஸ்டர் நார்
டன் வாதித்துக் கடைசியாக உத்தரபட்சத்தில்
16-நாள் பேசி முடித்தார். ஸ்ரீயுத. சித்தரஞ்சன
தாஸ் 8-நாள் அரவிந்தருக்காகப் பேசினார். சித்த
ரஞ்சனர் வாதித்த வாதமானது வெகுமேன்மையும்
கம்பீரமும் உண்மையுமானது. சித்தரஞ்சனரின்
எதிர்வாதங்களையும் பூர்வபட்ச உத்தரபட்ச நியாயங்
களையும், சாட்சிகளை விசாரித்த வழிகளையும்பற்றி
புகழாதார் அக்காலத்தில் ஒருவரும் இல்லை. நியா
யாதிபதி நடுங்கும்படியாகவும் வாதகேசரியான மிஸ்
டர் நார்டனே திடுக்கிடும்படியாகவும் சித்தரஞ்சனர்
அவ்வளவு அழகாக வாதாடினார். ஏப்ரல்மீ 13-ந்
தேதி அஸெஸர்கள் ஸ்ரீ அரவிந்தர் 'குற்றவாளி
யல்ல' என்று ஏகோபித்த அபிப்பிராயங் கொடுத்த
னர். செஷன்ஸ் ஜட்ஜியான மிஸ்டர் பீச்கிராப்ட்
ஒரு மாதம் வரையில் தீர்ப்புச் சொல்லாமல் மேமீ
6-ந்தேதி அஸெஸர்கள் அபிப்பிராயத்தை ஒப்புக்
கொண்டு ஸ்ரீ அரவிந்தர் குற்றவாளியல்லவென்று



தீர்மானித்தார். ஸ்ரீ அரவிந்தர் விடுதலை பெற்றார்.
சித்தரஞ்சன தாஸருக்கு அளவிலாத ஆனந்தமுண்
டாயிற்று. சித்தரஞ்சனரைப்பற்றிய பேச்சே வங்
காளம் முழுமையும் ஒலித்தது. சித்தரஞ்சனர் ஸ்ரீ
அரவிந்தரின் கேஸ் விஷயமாகப் பண உதவி சரி
யாகப் பெறவில்லை யாகையால் தன் குடும்பத்தைக்
காப்பாற்றும் விஷயத்தில் கொஞ்சம் கடன்பட்டார்.
என்றாலும் அரவிந்தரின் கேஸ் விஷயமாக இவருக்கு
உன்னத பதவியும் அழியாப் பெயரு முண்டாயிற்று.
ஸ்ரீ அரவிந்தர் கேஸிலிருந்து சித்தரஞ்சனருக்கு இலட்
சுமிகடாட்சம் உண்டாயிற்று. தனலட்சுமியும் தாண்
டவமாடினள். சித்தரஞ்சனரைப்பற்றி அதுவரை
யறியாத கிராமவாசிகளெல்லாம் சித்தரஞ்சனரைப்
பார்க்க வந்தார்கள். சித்தரஞ்சனருக்கு வரவர
கேஸுகள் வந்தன. கொலை கேஸுகள் முதலிய பல
சிக்கலான கேஸுகள் அவரிடம் வந்தன. பணமும்
வரத் தலைப்பட்டன. கல்கத்தாவில் ஒரு சிறந்த
பாரிஸ்டரெனப் பெயரும் அவருக்கு வந்தது. தன்
மதிப்பும் கௌரவமுங்கொண்டார், பணம் அதிக
மாக வரத்தலைப்படவே தான் வாக்களித்தபடி தகப்
பனுடைய கடன்காரர்களுக்கெல்லாம் பணத்தை
வட்டியுடன் பட்டுவாடா செய்வதற்கு ஒப்புக்
கொண்டு தன் தகப்பனார் கடனாளி (இன்ஸால்
வெண்ட்) என்ற பெயரை யொழிப்பதற்குக் கோர்ட்
டில் சித்தரஞ்சனர் மனு ஒன்று கொடுத்தார்.
மனுவும் தாக்கலாயிற்று. நீதிபதி மிஸ்டர் பிளட்சர்
கடனாளியாய் அடைக்கலம் புகுந்த ஒருவன் மீண்டும்
கடன்காரர்களுக்கெல்லாம் ஒரு பைசாகூட விடா
மற்படி கொடுத்து தன் மதிப்பைக் காப்பாற்றின

உதாரகுணமுள்ள . கனவானை இதுவரை நான் கண்டதில்லையென்று கூறி வெகு ஆச்சரியப்பட்டார். சித்தரஞ்சனரைக் கண்டு அளவிலா ஆநந்தங்கொண்ட நீதிபதி பிளட்சர் அவர்மீது அதிக மதிப்புவைத்தார். இவரே உண்மையான இந்தியன் எனப்போற்றினார். தகப்பனார்பட்ட கடன் தொகையையெல்லாம் பிள்ளை சித்தரஞ்சனர் கொடுத்துவிட்டாரென்கிற செய்தி கல்கத்தா வெங்கும் பரவவே சித்தரஞ்சனர்மீது ஜனங்கள் மிக்க மரியாதை காண்பித்தார்கள். முன்னினும் பன்மடங்கதிகமாக இவரது கீர்த்தி பரவிற்று. வளர்பிறைபோல இவருக்குத் தனம் பெருகிற்று. தந்தை மூலமாகத் தன்னைப்பற்றியிருந்த அபவாதம் நீங்கவே, சித்தரஞ்சனர் வெகு தைரியமாகவும் கம்பீரமாகவும் பொது விஷயங்களில் தலையிட முன்வந்தார். இராஜ்ய நிலைமை அதுகாலை ஒரு போக்காகத்தானிருந்தது. 1906-1907-ம் வருடங்களில் உண்டான சுதேசியக் கிளர்ச்சியினால் வங்காளமெங்கும் ஒரே கலவரமாக யிருந்தது. 1908-1909-ம் வருடங்களில் உண்டான வெடிகுண்டு புரட்சியினால் அதிகாரவர்க்கத்தினர் பல அடக்குமுறைச் சட்டங்களை ஏற்படுத்தி ஜனங்கள் திகிலடையும்படி அநேக சூழ்ச்சிகள் செய்து இராஜீய வாழ்க்கை சலனமற்றிருக்கும்படி செய்தனர். அது காரணம்பற்றி பொதுக்கூட்டங்கள் கல்கத்தாவில் சரிவர நடப்பதில்லை. இராஜீய மகாநாடுகள் சரிவர கூட்டப்படுவதில்லை. இராஜீய உணர்ச்சி ஓய்ந்திருந்தது. அத்தகைய நிலைமையில் சித்தரஞ்சன தாஸ் பொதுக்காரியங்களிலும் பொதுஜன விஷயங்களிலும் அக்கறைகொள்ள முன்வந்தார். அங்ஙனம் முன்வந்தும் இராஜீய வாழ்க்கையில் அதிக



உற்சாகம் இவருக் குண்டாகவில்லை. ஏனெனில், இராஜீய வாழ்க்கையில் எவர்களுடைய துணையைக் கொண்டு முன்னணியிற் போகலாமென்று நினைத்தாரோ அவர்கள் இல்லை. விபினசந்திரபாலர் இங்கிலாந்துக்குப் போனார். ஸ்ரீ அரவிந்தர் புதுவைக்குச் சென்றார். சவுத்ரி சர்க்காருக்குத் துணையாக நின்றார். சுரேந்தரநாத பானர்ஜி மிதவாதியானார். மோதிலால் கோஷ் வயோதிகரானார். மற்றுமுள்ள தீவிர கட்சித் தலைவர்கள் அங்கங்கே ஒடுங்கினர். இங்ஙனம் நிலைமை நெருக்கடியாக யிருக்கையில் தனியாக இராஜீய வாழ்க்கையில் முற்பட சித்தரஞ்சனருக்கு இஷ்டமில்லை. ஒருக்கால் தான் முற்பட்டாலும் ஜனங்கள் முன் வராமற்போனால் என் செய்வதென்றும் எண்ணம் சித்தரஞ்சனருக்கு உண்டாயிற்று. ஆகவே; இதை யெல்லாமறிந்து இராஜீய விஷயங்க்ளில் அதிகமாகத் தலையிடாமல் மற்ற பொதுக் காரியங்களில் தலையிட்டார். வங்கபாஷா அபிவிர்த்திக்குரிய பல சபைகளிலும் சமுதாய ஊழியச் சபைகளிலும் சித்தரஞ்சனர் வெகு தீவிரமாக உழைத்துவந்தார்.

## IV.

வங்காளி பாஷையில் சித்தரஞ்சனருக்கு நல்ல பாண்டித்தியம் உண்டு. சீமைக்குப் போய்த் திரும்பி வருபவர்களிற் பலர் தாய்ப் பாஷையை மறந்தும், சிலர் தாய்ப்பாஷையில் பேசுவது மதிப்புக் குறைவென்றும் நினைப்பதுபோல சித்தரஞ்சனர் நினைக்காமல் தாய்ப்பாஷையைப் பெரிதும் போற்றி வந்தார். இது காரணமாக 1915-ம் வருடத்தில் வங்

ர்ளி பாஷையில் ஒரு மாதாந்தர பத்திரிகையை இவர் ஸ்தாபித்தார். இதன் பெயர் நாராயண எனப்படும். வங்காள தேசத்தில் நடமாடும் மாதாந்தரப் பத்திரிகைகளுக்குள் நாராயணவென்பது ஒரு சிறந்த பத்திரிகை. இதற்கு ஆயிரக்கணக்கான சந்தாதார்கள் இருக்கின்றனர். இந்த பத்திரிகைக்குக் கியாதி பெற்ற பல பண்டிதர்கள் வியாசம் எழுதுகின்றனர். மகாமஹோபாத்யாயர் ஹரபிரசாத சாஸ்திரி, விபின சந்திர பாலர் முதலானோர் முக்கியமானவர்கள். ஹரபிரசாத சாஸ்திரி உலகப் பிரசித்திபெற்றவர். மேனாட்டிலும் இவரைப்பற்றி பல ஆங்கில பண்டிதர்கள் நன்கறிவர். வங்காள பாஷையில் நடக்கும் பல்வகை மாதாந்தரப் பத்திரிகைகளில் நாராயண ஒன்றே சித்திரப் படங்களுடனும் அழகிய வியாசங்களுடனும் வெளிவரும். வியாசங்கள் எழுதுவதற்குச் சித்தரஞ்சனர் திரவிய சகாயஞ் செய்வதுண்டு. 1909-ம் வருடத்தில் வெடிகுண்டு கலவரக் குற்றத்தில் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்ட ஸ்ரீ அரவிந்தரின் தம்பியாராகிய பாபு பரேந்தர குமார கோஷ் 1920-ம் வருடத்தின் ஆரம்பத்தில் விடுதலை யடைந்ததும் சித்தரஞ்சனதாஸ் நாராயண பத்திரிகைக்குப் பத்திரிகாசிரியராக அவரை நியமித்தார். இப்பத்திரிகை பரேந்தர குமாரரின் பார்வையிலிருந்து வெளிப்படுகின்றது. பாபு விபின சந்திரபாலர் இரண்டொரு வருடம் பத்திரிகாசிரியராகவு மிருந்து வந்தார். ஸ்ரீ பாலருக்கு வங்கபாஷையில் விசேஷ ஞானமுண்டு. சித்தரஞ்சனருக்கும் அப்படியே. சித்த ரஞ்சனர் 1894-ம் வருஷத்திலிருந்தே வங்கபாஷையில் சிறந்த ஞானம் பெற்றிருந்தார். 1895-ம் வருஷத்தில் வங்க



பாஷையில் இசை நடையில் 'மலன்ச' என்னும் நூலை இவர் வெளிப்படுத்தினர். வங்கபாஷையின் இசை முறையில் இவரது நூல் ஜனங்களுக்குப் புதிய உணர்ச்சியையும் பேரானந்தப் பெருவழியையும் கொடுத்தது. சென்ற இரண்டு வருடங்களில் வேறு இரண்டு நூல்களையும் சித்தரஞ்சனர் வெளிப்படுத்தினர். சென்றவருடம் நடந்த வங்கபாஷா அபிவிர்த்தி மகாநாட்டில் வங்கபாஷா அபிவிர்த்திக்குப் பெரிதும் பாடுபட்ட சித்தரஞ்சனதாஸை அக்கிராசனாதிபதியாக நியமித்தார்கள். ஆகவே, தாய் பாஷையின் முதிர்ந்த ஞானமே தேசாபிமானத்திற்கு அடிப்படை யென்பது நாம் சொல்லாமலே விளங்கும். தாய்ப் பாஷையை வெகு மதிப்புடன் இவர் போற்றி வந்ததுபோலச் சில தேசாபிமானிகளே போற்றியிருக்கின்றனர். தற்காலத்துத் தேசாபிமானிகளிற் பலர் தேசபாஷையில் பேசுவது அவமானமென்றே கருதி ஆங்கிலபாஷையில் கோடையிடிபோல் குமுறுகின்றனர். சித்தரஞ்சனர் விசேஷமாகப் பணஞ் சம்பாதித்தபோதிலும் பணச்செருக்கின்றி வங்கபாஷா ஞானம்பெற்ற பண்டிதர்களை வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்துவந்தார். தாய்ப் பாஷையில் பாண்டித்தியம் பெற்றவர்களுக்குத் தமிழகத்தில் பெருமை யென்பது கிடையாது. தமிழ்ப் பண்டிதர்களைப் போற்றுவார் தமிழகத்தில் இல்லை. அதுபற்றியே தமிழகத்திலுள்ள கனவான்களும் தனவான்களும் மற்றுமுள்ளவர்களும் தாய்ப் பாஷையைப்போற்றாமல் ஆங்கிலபாஷையைப் பெரிதும் போற்றுகின்றனர். வங்காளத்திலும் மற்ற மாகாணங்களிலும் தாய்ப் பாஷைக்கு ஒருவிதமதிப்பு ஏற்

பட்டிருக்கிறது. இங்கிலாந்து சென்று திரும்பிவந்த சித்தரஞ்சனர் மேனாட்டு ஆசாரங்களைப் பெரிதும் பற்றினபோதிலும் பாஷை விஷயத்தில் தாய்ப்பாஷையை முன்னுக்கும் ஆங்கில பாஷையைப் பின்னுக்கு மாகத்தான் வைத்திருந்தார். இவர் போன்ற அநேகர் வங்கநாட்டில் தாய்ப்பாஷையை வெகு சிறப்புடன் போற்றி வருகிறார்கள். இதெல்லாம் பாஷாபிமானத்தின் தன்மையாகும்.

நிற்க, சித்தரஞ்சனர் வீட்டிலும் வெளியிலும் மேனாட்டு உடைகொண்டே விளங்கினார். வீட்டில் சகலமும் மேனாட்டு சம்பிரதாயமே. உண்பதும் உட்காருவதும் உடுப்பதும் எல்லாம் மேனாட்டு வழக்கப்படியேதான். உண்ணும் உணவும் உண் கலமும் மேனாட்டவர்களைப்போலத்தான். வீட்டில் மனைவி மக்களும் மேனாட்டு சம்பிரதாயத்தைச் சற்றே அவலம்பித்திருந்தாலும் இயற்கை சம்பிரதாயம் அவர்களை விட்டுப்போகவில்லை. சித்தரஞ்சனர் வீட்டு மாதர்கள் நல்ல தெய்வபக்தி வாய்ந்தவர்கள். தினம் ஏதாகிலுந் தர்மஞ்செய்யாமல் அவர்கள் உண்பதில்லை. சித்தரஞ்சனரை வரையாது கொடுக்கும் வள்ளலெனக்கூறலாம். சம்பாதிக்கும் பணத்தில் பாதிக்கு மேல் தர்மஞ்செய்துவிடுவார். வருகிறவர்களுக்கும் போகிறவர்களுக்கும் மாணவர்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் பேருதவி இவர் புரிந்து வந்தார். இதல்லாமல், 1915-ம் வருடத்தில் ஐரோப்பாயுத்தத்தை முன்னிட்டு இந்திய பாதுகாப்புச் சட்டமொன்று இந்திய கவர்ன்மெண்டார் பிறப்பித்தார். அச்சட்டத்தின் பயனால் வங்காளத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் சிறைபுகுந்தார்கள். நிஷ்காரண



மாகப்பல பாலர்கள் சிறையில் வைக்கப்பட்டார்கள். அக்காலத்தில்தான் வங்காளப்பத்திரிகைக்கு உதவி பத்திரிகாசிரியராயிருந்த பாபு சியாம·சுந்தர சக்கரவர்த்தியையும் அரசாங்கத்தார் சிறைப்படுத்தினர். சிறைப்பட்டவர்களின் குடும்பங்கள் நிலைகுலைந்தன. ஒருவித உதவியின்றி அக்குடும்பங்கள் கஷ்டப்பட்டன. வங்கநாடெங்கும் கண்ணீர் பெருக்கெடுத்தது. அந்த சமயத்தில் சஞ்சீவியைப் போலவும், ஆபத்பந்துவைப் போலவும் சித்தரஞ்சனர் தோன்றினார். மாதம் ஒவ்வொன்றுக்கு நாலாயிரம் ரூபாய் சிறைப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு இவர் உதவிபுரிந்தார். இத்தகைய காருண்யப்பிரபுவைப் பெற்றெடுத்ததாயின் பாக்கியமே பாக்கியம். சில தேசாபிமானிகள் வாயோயாமல் வருந்தி நாத்தழும்பேறப் பேசுவார்கள். சிலர் கண்ணீர் சொரிவார்கள். மற்றுஞ்சிலர் அழவாரம்பிப்பார்கள். ஆனால், ஆபத்து காலத்தில் திரவிய சகாயம் மட்டுஞ் செய்யார்கள். நல்ல ஆபத்து வேளையில் பேச்சையும் அழுகையும் யார் கேட்கின்றார்கள்?

நிற்க, சித்தரஞ்சனர் வங்காளத்திலுள்ள பல குடும்பங்களுக்கு இரட்சகராகயிருந்தார். 1919-ம் வருடம் டிசம்பர்மாதக் கடைசியில் மன்னர் பெருமானுடைய இராஜ விளம்பரத்தை முன்னிட்டு இந்திய கவர்ன்மெண்டார் அநேக இராஜீய குற்றவாளிகளைச் சிறையினின்றும் விடுதலை செய்தார்கள். வங்கநாட்டிலிருந்து விடுதலையானவர்களின் கூட்டம் சித்தரஞ்சனர் வீட்டில் ஒருநாள் கூடினதைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் எவ்வளவு விசுவாசத்துடன் சித்தரஞ்சனரை வணங்கினார்களென்பதுதெரியும். சித்த

ரஞ்சனர் காங்கிரஸ் மகாசபையில் சமீபத்தில்தான் சேர்ந்தார். என்றாலும் காங்கிரஸ் விஷயத்தில் வெகு காலமாக அவருக்குப் பற்றுதல் உண்டு. 1917-ம் வருடத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்கு சித்தரஞ்சனர் செய்த உதவி இவ்வளவவ்வளவல்ல. 1916-ம் வருடம் ஏற்பட்ட சுய ஆட்சிக் கிளர்ச்சியில் வங்கநாட்டில் சித்தரஞ்சனர், சக்கரவர்த்தி, லஹிறி, ஸ்ரீபாலர், முதலானோர் முக்கியமானவர்கள். 1917-ம் வருடத்தில் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறைப்பட்ட அன்னைவஸந்தும் அவளுடைய சகாக்களும் மீட்சியடையும் பொருட்டுச் செய்த கிளர்ச்சிக்கு சித்தரஞ்சனர் வங்கநாட்டில் நடுநாயகம் போலிருந்தார். 1917-ம் வருடத்திய காங்கிரஸ் மகா சபைக்கு உதவியாகத் திரவிய சகாயஞ் செய்தார். அன்றுமுதல் இன்றுவரை சித்தரஞ்சனர் இராஜீய வாழ்க்கையில் முதன்மையாகவே இருந்து வருகிறார். 1909-ம் வருடத்திலிருந்து நடக்கும் இராஜீய சம்பந்தமான குற்றவாளிகளுக்காகக் கோர்ட்டில் இவர் ஆஜராகி நன்கு வாதித்துப் பலரை விடுதலை செய்திருக்கிறார். பெட்டி கொலை கேஸ் (Trunk Murder Case) என்று கல்கத்தாவில் நடந்ததைப்பற்றி நம் நேயர்கள் அறிந்திருக்கக்கூடும் அந்த கேஸில் நிரபராதியான இருவரை அரசாங்கத்தார் சிக்கவைத்து விசாரணை தொடுக்கவே, அவர்களுக்குச் சகாயமாக சித்தரஞ்சனர் வாதித்து சர்க்கார் தரப்பிலுள்ள சாட்சிகளைச் சின்னாபின்னப் படுத்தி, அந்த குற்றவாளிகள் நிரபராதிகளென நியாயாதிபதி தீர்ப்பளிக்கும்படி செய்தார். இது போன்ற பல கேஸுகளில் இவர் ஜெயம் பெற்றிருக்



கிறார். 1918-ம் வருடத்தில் இந்தியா மந்திரி இந்தியாவிற்கு விஜயஞ் செய்த காலத்தில் சித்தரஞ்சனரும் இவருடைய சிநேகிதர்களும் வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தரப்பில் ஒரு யாதாஸ்தைத் தயாரித்து அனுப்பினார்கள். அதில் வங்காளத்துக்கு பொறுப்புள்ள ஆட்சியை யுடனே கொடுத்துவிட வேண்டுமென்று கண்டிருந்தது. இந்தியா மந்திரியின் திட்டத்தை யோசிப்பதற்கு 1918 ம் வருடத்தில் ஆகஸ்டுமாதத்தில் விசேஷ காங்கிரஸ் கூட்டமொன்று பம்பாயில் நடந்தது. அக்கூட்டத்திற்கு ஜனாப் ஆஸன் இமாம் தலைவராகயிருந்தார். அந்த விசேஷ கூட்டத்திற்குச் சித்தரஞ்சனர் சுமார் நூறு பிரதிநிதிகளைத் தன் செலவில் அழைத்து வந்தார். பம்பாயில் நடந்த விசேஷ காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் சித்தரஞ்சனரும் லோகமான்ய திலகரும் சந்திர சூரியர்கள்போல விளங்கினர். மகா சபை முடிந்தவுடன் சித்தரஞ்சன தாஸையும் அவருடன் வந்த சக்கரவர்த்தி, ஸ்ரீபாலர் முதலானோரையும் லோகமான்யர் தன் இருப்பிடமாகிய புனாவுக்கு வந்து போகும்படி வேண்டிக்கொண்டார். பின்னர் இந்நூல் ஆசிரியரையும், வ. உ. சிதம்பரம் பிள்ளையையும் புனாவுக்கு வந்துபோகும்படி கேட்டார். அப்பெரியாரின் வார்த்தைக்கிணங்கி நாங்கள் அனைவரும் புனாநகரத்திற்குச் சென்று இரண்டுநாள் தங்கியிருந்தோம். நாங்கள் ஒவ்வொருவரும் முறையே கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டில் பேசினோம். அமிர்த பஜார் பத்திரிகாசிரியர் பாபு மோதிலால் கோஷும் லோகமான்யரும் அக்கிராசனம் வகித்தார்கள். சித்தரஞ்சனரிடம் லோகமான்யருக்கிருந்த அன்பு இவ்

வளவவ்வளவல்ல. லோகமான்யரிடத்தில் சித்தரஞ்சனருக்கிருந்த அத்யந்த பக்திக்கு எல்லையில்லை. லோகமான்யரை ஆசார்ய ஸ்தானத்தில் வைத்துப் பரம பக்திமானாய்ச் சித்தரஞ்சனர் விளங்கினார். 1918-ம் வருடத்தில் டில்லிமாநகரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு அக்கிராசனராய் விளங்கின மதன மோகன் மாளவியாவுடன் சித்தரஞ்சனர் டில்லிக்கு வந்திறங்கினார். அந்த காங்கிரஸில் இளவரசருக்கு வரவேற்பு கொடுக்கவேண்டுமென்கிற தீர்மானமொன்றை அன்னை வசந்தையம்மாள் கொண்டு வந்ததைச் சித்தரஞ்சனர் எதிர்த்து சபைமுன் அத்தீர்மானம் வாராதபடி செய்தார்.

கல்கத்தாவில் 1918-ம் வருடத்தில் கடைசியில் ஏற்பட்ட கலவரத்தில் சித்தரஞ்சனர் நியாயாதிபதி போல் நின்று விசாரணைசெய்து அமளியை ஒருவாறு தணித்தார். மகாத்மா காந்தியடிகளால் 1919-ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட சத்யாக்கிரக நிகழ்ச்சியில் சித்தரஞ்சனர் சேர்ந்து உழைத்தார். பஞ்சாப் மாகாணத்தில் ஸர் மைகல் ஓட்வியரின் ஆட்சியினாலும் ஜனரல் டையரின் அட்டூழியத்தாலும் நேர்ந்த படுவதையைக் கேள்வியுற்ற சித்தரஞ்சனர் உடனே கல்கத்தாவை விட்டு லாகூருக்குப் போக ஆயத்தமானார். ஆனால், அதிகாரிகள் இவரைப் போகவிடாமல் தடுத்து விட்டார்கள். பின்னர், பஞ்சாப் படுவதை நிகழ்ந்த விவரத்தை விசாரிக்கக் காங்கிரஸ் மகாசபையார் ஒரு விசாரணை கமிட்டியை நியமித்தார்கள். அக்கமிட்டியில் சித்தரஞ்சனரும் ஒருவர். கல்கத்தாவில் மாதந்தோறும் பதினாயிரக்கணக்காக வரும் வரும்படியை விட்டு விட்டு லாகூரில் இரண்டு மாதகாலத்



திற்குமேல் தங்கி எண்ணிறந்த சாட்சியங்களை விசாரித்துக் கடைசியில் ஒரு யாதாஸ்தைத் தயார்செய்தார்கள். அக்கமிட்டியில் சித்தரஞ்சனர், மகாத்மா காந்தி, ஜயகர், டியாப்ஜீ, முதலானோர் அங்கத்தினர்கள். அக்கமிட்டியில் இரவும் பகலும் இடைவிடாது சித்தரஞ்சனர் உழைத்தார். பிறகு 1919-ம் வருடத்தில் அமிர்தசரஸில் கூடின காங்கிரஸ் மகா சபையில் சித்தரஞ்சனர் நடுநாயகமாய் விளங்கினார். சீர்திருத்தமானது, ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் கொடுத்தது என்னும் விஷயமாக வந்த தீர்மானத்தில் சித்தரஞ்சனருக்கும் மகாத்மா காந்திக்கும் அபிப்பிராய பேதமுண்டாயிற்று. இந்தியா மந்திரி மாண்டேகுவுக்கு வந்தனமளிக்கவேண்டுமென்கிற விஷயத்திலும் பலமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. நல்ல வேளையாக சமரஸம் ஏற்பட்டு காங்கிரஸ் இனிது நிறைவேறிற்று. சித்தரஞ்சனர் வெகு பிடிவாதக்காரர். தான் ஒன்று சரியென்று கொள்ளின் அதையே ஸ்தாபிக்குந் தன்மையைக் கொண்டவர். அதிகாரவர்க்கத்தினரின் மாயவலைக்குச்சிக்காத திடநெஞ்சத்தினர். 1920-ம் வருடத்தில் முகம்மதிய சமூகத்தினருக்காக கிலாபத் கிளர்ச்சியில் வெகு மும்முரமாக வேலை செய்தார். மகாத்மா காந்தியடிகளால் கொண்டு வரப்பெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் நம்பிக்கையற்றுச் சில காலமிருந்தார். கல்கத்தாவில் நடந்த விசேஷ காங்கிரஸ் மகா சபையில் மாகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமை தீர்மானதிட்டம் நிறைவேறாமலிருக்க வெகு பாடு பட்டார். ஏனென்னில், இவருக்கு அக்காலத்தில் இந்த இயக்கத்தில் அவ்வளவு ஆஸ்திக புத்தியுண்

டாகவில்லை. காங்கிரஸ் மகாசபை மகாதமா காந்தி யடிகளின் தீர்மானத்தை அங்கீகரித்த வுடனே சித்த ரஞ்சனர் சத்தியத்திற்குக் கட்டுப்படுவது போல காங் கிரஸ் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு பாரிஸ்டர் வேலையை விட்டார். இது வன்றோ தியாகம்? மாதம் ஆயிரக்கணக்காக வரும்படி வந்து கொண்டிருந்த ஒருவர் கோர்ட்டு வேலையைவிட்டு விடுவதென்றால் அது சாமானியமா? தின்னச் சோறும் வசிக்க இட மும் இல்லாதவர்கள் முன்வந்து சகலவற்றையும் துறந்து விட்டோம் என்று பறைசாற்றுவது தியாக மல்ல. சித்தரஞ்சனரின் தியாகமே தியாகம். சித்த ரஞ்சனர் ஒத்துழையாமையின் திட்டத்தைச் சரி வர நிறைவேற்றினார். ஆங்கில ஆடையையே சதா சர்வ காலமும் உடுத்திக் கொண்டிருந்தவர் சுதேசித் துணியை யுடுக்கலானார். விலையுயர்ந்த வஸ்திரங் களைத் தரித்திருந்த இவர் இப்பொழுது காடு முரடான கதர் துணிகளையே தரிக்கின்றார். உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் சுத்த சுதேசியமாயிற்று. சித்தரஞ்சனர் சிறந்த சாந்த மூர்த்தியாய் விளங்கு கிறார். இதையறிந்த பாரதப்புத்திரர்கள் இவ்வருட் முடிவில் ஆமதாபாத்தில் நடக்கும் பாரத ஜன சபைக்கு சித்தரஞ்சனரை எல்லா மாகாணத்தவர் களும் ஏகோபித்து அக்கிராசனாதிபதியாக நியமித் திருக்கிறார்கள். அவர் அக்கிராசனராய் வீற்றிருந்து நாட்டிற்கு பூர்ணஸ்வராஜ்யம் சீக்கிரமே வரும்படி தீர்மானிப்பாராக!

---



## V.

சித்தரஞ்சனர் தகப்பனாரது மதக்கொள்கையைப் பற்றி பிரம்ம சமாஜத்தவராயிருந்தார். பிறகு பிரம்ம சமாஜம் இவருக்குப் பிடிக்கவில்லை. இதன் கோட்பாடுகள் இவருக்குத் திருப்தியைக் கொடுக்க வில்லை. கடைசியாக, பிரம்ம சமாஜத்தை விட்டுவிட்டு சுத்த வைஷ்ணவரானார். கௌரங்கரின் ஸ்ரீவைஷ்ணவ மதத்தையிவர் பின்பற்றினார். கௌரங்கரை ஸ்ரீகிரு ஷ்ண சைதன்யர் என்பார். மகாராஷ்டாத்திற்கு துக்காராம் எப்படியோ, தட்சிணத்திற்கு ஸ்ரீராமானு ஜர் எப்படியோ அப்படி வங்காளத்துக்கு ஸ்ரீகிருஷ்ண சைதன்யர். ஆகவே, ஸ்ரீவைணவ பக்தனும் சாத்விக தியாகியும், பரம ஜீவகாருண்ய முள்ளவனும், பரம பாகவதனுமான ஸ்ரீயுத. சித்தரஞ்சனதாஸ் தேச கைங்கரியத்தில் பெரிதும் ஈடுபட்டு, தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அளிப்பாராக! இவருக் குத் திடசரீரத்தையும் நோயற்ற வாழ்வையும் குறை வற்ற தேசபக்தியையும் எல்லாம் வல்ல கடவுள் அருள்புரிவாராக!

# சித்தரஞ்சனரின் உபந்யாசங்கள்

## I. உதவி மறுத்தல் தர்மம்

1921-ம் வருடம் பிப்ரவரிமாதம் 11-ந்தேதி பாடலீபுரத்தில் (பாட்னா)மௌலானா மஸர். உல் ஹக் அவர்களின் தோட்டத்தில் ஒருபெரிய மகாநாடு கூடிற்று. அவ்வமயம் சித்தரஞ்சனதாஸ் பின்வருமாறு பேசினார்.

என் அன்பர்களே! பல தினங்களாகச் சதா பேசிக்கொண்டிருக்கும் விஷயத்தைப்பற்றி மீண்டும் நான் இங்கு பேசுவதென்றால், அது கஷ்டமாகத்தானிருக்கிறது. பேசுவதில் எனக்கு வெகு அலுப்பும் ஏற்பட்டுவிட்டது. பாங்கிபூருக்கு நான் வந்தபோது பேசாமலிருக்கலாமென்றே எண்ணினேன். ஆனால் என்னைவிடவில்லை. ஒத்துழையாமை விஷயமாகப் பல தூஷணைகள் பத்திரிகைகளில் வெளிவந்தவைகளைப் படித்தேன். பொதுஜன ஊழியர்களால் செய்யப்பட்ட பிரசங்கங்களையும், அரசாங்க உத்தியோகஸ்தர்களின் பிரசங்கங்களையும் உத்தியோக முறையற்ற கனவான்களின் பேச்சுக்களையும் கவர்னர் அவர்களின் வாக்குகளையும் நான் கேட்டேன். ஆனால் அவைகளால் ஒன்றும் பிரயோசனமில்லை. காங்கிரஸ் கொள்கையையும் அபிப்பிராயத்தையும் நன்கு தெரிந்துகொள்வதே நமக்கு நன்மை. தேசிய உணர்ச்சியைப்

பற்றியே நான் உங்களுக்குப் பேச இன்று எண்ணியிருக்கிறேன். ஸ்வராஜ்யம் என்ற வார்த்தையைப் பன்முறை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் அதன் பரிபூரண அர்த்தத்தைமட்டும் நாம் இன்னமும் கிரகித்துக்கொள்ளவில்லை. தேசிய உணர்ச்சியின் தத்துவமே ஸ்வராஜ்யத்தின் தத்துவம். ஸ்வராஜ்யம் என்ற வார்த்தை வெகு சுலபமாக யிருப்பதால் அது வழியாக தேசிய உணர்ச்சிக்கு நாம் கிளர்ச்சி செய்கிறோம். மகாத்மாகாந்தியடிகளால் இந்த ஒத்துழையாமை இயக்கம் கொண்டு வருவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே, 1917-ம் வருடத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் நான் அது விஷயமாகப் பேசியுள்ளேன். அந்த காலத்தில் எந்தவிதமான சுய ஆட்சிவேண்டுமென்கிற விஷயத்தில் பலமான கட்சிப் பேதங்களிருந்தன வென்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். பம்பாய் ஒருவழியாகப்பேசிற்று. வங்காளமோ மற்றொரு வழியாகப் பேசிற்று. சுய ஆட்சி விஷயமாக எம்மாதிரியான யாதாஸ்து அல்லது திட்டம் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி பல கட்சிகள் ஏற்பட்டிருந்தன. அதுவிஷயமாக நாம் தர்க்கிப்பதில் பிரயோசனமில்லை யென்றும் நம் நாட்டை நாமே ஆளவும் நம்முடைய அனுபவத்தைக்கொண்டு நம்முடைய ஜன சமூகத்தை நாமே அபிவிர்த்தி செய்து திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டுமென்று நான் அப்பொழுதே கூறினேன். தேசிய உணர்ச்சியின் காரணங்களை நாம் உடனே அறியவேண்டும். அவ்வுணர்ச்சியின் காரணங்களை யறிந்தவுடனேயே கடவுளால் கொடுக்கப்பெற்ற பிறப்புரிமையை நாம் யறிந்தவர்களாவோம். அப்-



பொழுது அதிகாரவர்க்கத்தினர்கள் நம்முடைய கால்களினால் அழுத்தப்படுவார்கள். காங்கிரஸ் மீது குற்றஞ் சாற்றப்படுவதெல்லாங் கூட அது ஸ்வராஜ்யம் எத்தகையது என்று விளக்கிக் காட்டாததே. கல்கத்தாவில் அநேகர் இது விஷயமாக ஆட்சேபித்தார்கள். ஆனால் என்னுடைய பதிலோ வெகு சுலபமானது; ஸ்வராஜ்யத்தின் தன்மையானது அவ்வளவு எளிதில் விளக்கிக் காட்டும்படியானதன்று. ஆனால் ஸ்வராஜ்யமானது உங்களுடைய மனதில் எவ்வாறு நீங்கள் கருதுகின்றீர்களோ அம்மாதிரியானதே. ஆகவே, எந்த மாதிரியான ஸ்வராஜ்யம் உண்டாகுமென்று நீங்கள் எப்படி விளக்கிச் சொல்லக்கூடும்? உங்களுடைய பிறப்புரிமையை அறிந்துகொள்ளுங்கள். அப்பிறப்புரிமையை நீங்கள் அறிவீர்களானால், அறிந்த நிமிஷமே அது சத்தியப் பொருளாகும். உங்களுடைய பிறப்புரிமையைப்பற்றிக் குறைவாக நீங்கள் எண்ணுவீர்களானால் உங்களுடைய வெற்றியும் குறைவாகவேதானிருக்கும். பிறப் புரிமையின் சர்வலட்சணங்களையும் பூர்ணமாக அறிந்தீர்களானால் நீங்கள் பூர்ண ஸ்வராஜ்ய மடைவீர்கள். ஆகவே, இதை விளக்கிக்காட்ட முடியாது. இந்தியாவானது முழுமனதுடன் பூர்ணமாக அவ்வுரிமையை யறியுமானால் அறிந்த அந்நிமிஷத்திலேயே ஸ்வராஜ்யம் நம்முடையதுதான். ஐயா! பார்லிமெண்டரி மகா சபையை நாம் அடைந்தாலும், சட்ட நிரூபண சபைப் பலவகையாகப் பிரிக்கப்பட்டு அதின் கீழ் பாகத்தையேனும் அல்லது மேல்பாகத்தையேனும் ஆதிக்கஞ்செலுத்த நாம் அடைந்தபோதிலும் அதைப் பற்றிய அக்கரை எனக்குக் கொஞ்சங்கூட இல்லை.

நான் வேண்டுவதென்னவென்றால் இந்தியா இன்றே ஒரே குரலுடன் நம்மை நாமே ஆளவல்லோம் என்று கூறுவதேயாம்.

இந்த உரிமையைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். எந்த அரசாங்கமும் இவ்வுரிமையைப் பறிக்கமுடியாது. இதைமட்டும் அறிவீர்களாயின் ஸ்வராஜ்யம் உடனே நீங்கள் அடைவீர்கள். எம்மாதிரியான ஸ்வராஜ்யம் நமக்குக் கிடைக்கும் என்பதைப்பற்றி ஆழ்ந்து யோசிப்பதை விட்டுவிட்டு ஸ்வராஜ்யம் முதல் முதலில் எப்படி பெறலாம் என்ற விஷயத்தில் இரவும் பகலும் சிந்தையைச் செலுத்துங்கள். ஆகவே இதற்கு தேசிய உணர்ச்சி யொன்றுதான் அடிப்படையானது. தேசிய உணர்ச்சி என்னவென்பதை நீங்கள் அறிந்தீர்களா? உண்மையும் புத்திசாலித்தனமுமுள்ள அநேகர் தேசிய உணர்ச்சிவேண்டாமென்கிறார்கள். ஏனெனில், தேசீய உணர்ச்சியானது மானிட தர்மத்திற்கு விரோதமானதாம். சாட்சாத்பகவானுடைய சிருஷ்டியில் அநேக தேசங்கள் இருக்கின்றனவென்றும், அவைகளில் இந்தியா ஒன்றென்றும், இந்தியா தன்னுடைய சுயஉணர்ச்சிக்கே பாடுபடுகிறதென்றும் அவர்கள் அறியவில்லை. இந்திய தேசீய உணர்ச்சியானது மானிட தர்மத்தை அழிக்காது; அழிக்கவும் இயலாது. மானிடதர்மமென்றால் பூவுலகின்கண் வசிக்கும் இந்தியர், ஐரோப்பியர், அமெரிக்கர், ருஷியர் முதலிய பல்வகை காதியார்களுக்குரியதென நான் கொண்டேன். இந்திய தேசீய உணர்ச்சிக்காக இன்று பாடுபடுவதால் எங்ஙனம் இதரதேசத்தவர்களின் உணர்ச்சிக்கு விரோதமாகப் போகிறோம். இயற்கையாகவும் தொன்று



தொட்டும் ஏற்பட்ட இந்திய தேசிய உணர்ச்சியின் தன்மையானது 'நாமும் மற்றவர்களும் நன்கு வாழட்டும்' என்பதாம். நமக்கு அவர்களிடம் சண்டையே கிடையாது. ஆனால் அவர்கள் நம்முடைய உரிமையையும் உணர்ச்சியையும் பறித்துவிட்டால் அப்பொழுதுதான், 'ஐயா! நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கமாட்டோம்' என்று நாம் கூறுகிறோம். உங்களுடைய வழியாக உங்கள் தேசீய உணர்ச்சியை வளரச் செய்கிறீர்கள். அமெரிக்கர்கள் அவர்களுடைய வழியாக அவர்களுடைய உணர்ச்சியை வளரச் செய்கிறார்கள். ஆனால், இந்திய தேசீய உணர்ச்சியைமட்டும் அதின் இயற்கைக்கு மாறாக அநாதிகாலமாக வந்த சுய உணர்ச்சியையழித்து உங்கள் வழியில் வளரவேண்டுமென்று திட்டப்படுத்துவீர்களாயின் அதைத்தான் நாங்கள் சகித்திருக்க முடியாது. ஆகவே, தேசீய உணர்ச்சியும் ஸ்வராஜ்யமும் ஒன்றேதான் என்பதை இப்பொழுதாகிலும் நீங்கள் அறிந்தீர்களா? ஈண்டு நான் உங்களுக்கு ஓர் உதாரணங் கூறுகிறேன். ஒரு தோட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கடவுள் சிருஷ்டியின் அதிசயத்தையும் அழகையும் அத்தோட்ட மெங்கும் நாம் காண்கிறோம். ஒரு செடியிலுள்ள ஒரு புஷ்பம் மற்றொரு புஷ்பத்தைப்பார்த்து நீ அப்படி பூக்கக்கூடாதென்றால் அது ஆகுமா? இயற்கையமைப்பின் சூட்சும வனப்பு உள்ளவரையில் ஒவ்வொன்றும் அததன் வழியே நாடும். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி சுய உணர்ச்சியுண்டு. சமூகத்திற்கும் அப்படியே தனித்தனி உணர்ச்சியுண்டு. இந்திய சமூகமானது ஐரோப்பிய சமூகத்தின்படி நடப்பதா? இந்திய சமூகமானது

அதின் நடையுடை பாவனைக் கொத்தபடி அபிவிர்த்தியடையவேண்டும். 35-வருடகாலமாக நாம் நம்முடைய சமூகத்தை முன்னுக்குக் கொண்டுவர முயன்று வருகிறோம். ஆனால், நம் ஜாதிய உணர்ச்சியின் தீவிர அபிவிர்த்தியை அதிகாரவர்த்தினர் ஒவ்வொரு வழியிலும் அழித்துவந்தார்களென்று பிரிட்டிஷ் ஆட்சியின் உண்மையான சரித்திரத்தை இப்பொழுதுதான் நாம் கண்டுகொண்டோம். நாம் சுதந்தரங்கொள்வதற்காகப் பாடுபடும் இடங்களிலெல்லாம் அதிகாரிகளிடமிருந்து நமக்குக் கஷ்டங்களே சம்பவித்தன. அதனாற்றான் பஞ்சாப் சம்பவம் ஏற்பட்டது. ரௌலட்சட்டம் உண்டாயிற்று. இதெல்லாம் நம்முடைய தேசீய உணர்ச்சியைக் கொல்வதற்குத்தான். ஆனால் நாம் அதை யறிந்து கண்டித்தோம். இத்தகைய குணப்பாடு கொண்டிருக்கும் அதிகாரவர்க்கத்தின் அரசாங்கம் இருக்கும்வரை தேசீய உணர்ச்சி வரவே வளராது. நாம் செய்யும் ஒவ்வொன்றுக்கும் தடைசெய்தே வருவர். அவ்வழியை யழிக்கவும் செய்வர். இதுவரை நாம் அனுஷ்டித்த முறையெல்லாம் வீணாயிற்றென்று காங்கிரஸ் இப்பொழுது தீர்மானித்தது. அமிர்தசாஸில் நடந்த காங்கிரஸில் மாகாத்மா காந்தி அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்றார். நான் அவருடைய வழிக்குச் சற்றேனும் இணங்கவில்லை. அவர் நல்ல பரிசுத்த ஹிருதய முள்ளவர். ஒத்துழைப்பினால் நமக்கு அவ்வளவு நன்மைகள் கிடைத்திருக்க நாம் நம்பிக் கடைப்பிடிக்க வேண்டாமா என்றார். அதிகாரவர்க்கத்தினர் தங்கள் ஸ்வரூபத்தை மாற்றிக் கொள்வார்களென அவர் நம்பி யிருந்தார்.



ஆனால் நான் மட்டும் அப்படி செய்ய முடியாதென்றேன். சிலமாதம் கழிந்த பிறகு மகாத்மா காந்தி நான் சரியென்று நம்பினார். அடிக்கடி அடக்குமுறைத்தாண்டவம் ஏற்படுவதாலும், முகம்மதியர்களுக்கு நேர்ந்த கஷ்டத்தாலும், பஞ்சாப்பில் நடந்த சம்பவத்தாலும் இனி வேறு மார்க்கங்களினால் விமோசனமில்லை யென்று உறுதியாகக் கொண்டு ஒத்துழையாமை தர்மமொன்றே மேலான தர்மமென்று எல்லா மாகாணத்தவர்களும் ஒரே தொனியுடன் கூறி காங்கிரஸ் மகாசபையில் அது தீர்மானிக்கப்பட்டது. இத்விஷயமாகப் பன்முறையும் உங்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. வங்காளத்திலும் அப்படியே பன்முறை என்னைப் பலர் கேட்டார்கள். அவர்களுக்குத் தக்கபடி பதிலும் நான் கூறியுள்ளேன். கல்கத்தாவுக்குச் சமீபத்தேயுள்ள ஓர் இயந்தரத் தொழிற்சாலையில் வேலை செய்யுந் தொழிலாளர்களுக்கு நான் பேசவேண்டிய சமயம் வாய்த்தது. அவர்களுக்கு நான் பின் வருமாறு கூறினேன். நீங்கள் இயந்தரத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றீர்கள். ஆனால் அந்த இயந்தரத்தை யார் ஓட்டுவது? இயந்தரத்தை யோட்டி, சகல சில்லரை வேலைகளைச் செய்தும் அது வழியாக சாமான்களைச் செய்வதும் யார்? நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஆக்ஞாபிக்கும் புர்ராசாகெப் (துரை) அல்லவே யல்ல. உண்மையில் இயந்தரத்தை நீங்கள் ஓடச்செய்கிறீர்கள். நீங்கள் ஓடச்செய்வதினால் எண்ணிறந்த காகித மூட்டைகள் உண்டாகின்றன. அதுபோலவே தான் கவர்ன்மெண்டும் ஓர் இயந்தரமாகும்! என்றேன். அதுபோல இந்தப் பெரிய அரசாங்கமானது ஓர் இயந்த

சமே. இந்த இயந்தரத்தை ஓட்டுவது யார்? நாமே தான். கல்லூரியிலே படிக்கும் மாணவர்களும் நீதி மன்றங்களிலே சட்ட வாதமிடும் வக்கீல்மார்களும், நகரக் காப்புச் செய்யும் போலீஸ் ஊழியர்களும், வியாச்சியங்களைத் தீர்ப்பு செய்யும் மாஜிஸ்ரேட் அதிகாரிகளும் நீதிச் சட்டங்களைப் பரிபாலிக்கும் நியாயாதிபதிகளுமே இந்த அரசாங்க இயந்தரத்தை நடத்துவது. ஆகவே, எவ்வகையிலும் இந்தியனே அந்த இயந்தரத்தை யோடச் செய்கிறான். 160 வருடத்திய சரித்திரத்தில் நம்முடைய இலட்சியம் அவர்களுடைய இலட்சியமல்ல. நம்முடைய இலட்சியமோ நம்மை நாம் அபிவிர்த்தி செய்துக்கொள்வது; அவர்களுடைய இலட்சியமோ நாம் அபிவிர்த்தி யடையாமல் நம்முடைய ஆண்மைத்தனத்தை யழிப்பது. ஆகவே, அதிகாரவர்க்கத்தினரின் இலட்சியத்திற்கும் நம்முடைய இலட்சியத்திற்கும் சொல்லமுடியாத அவ்வளவு வித்தியாசமிருக்கிறது. பஞ்சாபில் நடந்ததை நினையுங்கள். கிலாபத் விஷயமாக நடந்ததையும் நாம் மறக்கமுடியாது. காங்கிரஸ் மகாசபையினால் ஒரு விசாரணை பஞ்சாயத்து நியமிக்கப் பட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். உத்தியோகப் பதவியற்ற பொது ஜனப் பிரதிநிதிகளின் ஹோதாவில் அந்த யாதாஸ்தில் நாங்கள் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் கூடிய பொழுது கைச்சாற்றிட்டோம். மகாத்மா காந்தியடிகளால் தான் அந்த யாதாஸ்து தயாரிக்கப்பட்டது. அந்த யாதாஸ்தை நன்றாகப் பரிசீலனை செய்து பன்முறை தர்க்கித்தோம். நாங்கள் வேண்டுமென்றே வேண்டுகோளைக் குறைத்து வெளியிட்டோம். நாங்கள் இவ்விதம் வேண்டுகோளைக் குறைத்து



வெளியிட்டதினால் நம்முடைய தேசாபிமானிகளிற் பலர் எங்கள் மீது கோபங் கொண்டார்கள். அவர்கள் அதிகமாகவே கேட்டார்கள். அவ் விஷயம் இனி ஓர் இரகசியமல்ல. உங்களுக்குத் தாராளமாகவே இப்பொழுது கூறுவேன். எங்களுடைய வேண்டுகோளைக் காங்கிரஸ் மகா சபையில் ஒரு தீர்மானமாகச் செய்து அதை அரசாங்கத்தார் ஆதரித்து அதன்படி செய்யவேண்டுமென்ற ஓரே எண்ணத்தைக் கொண்டு தான் இங்ஙனம் நாங்கள் கலந்து செய்தோம். நம்முடைய அந்தக் குறைவான வேண்டுகோளையும் நிந்தித்து குற்றவாளிகளையும் யதேச்சையாக அரசாங்கத்தார் விட்டுவிட்டனர். அந்தக் கொலை பாதகர்களுக்குச் சகாய நிதியும் திரட்டப்பட்டது. அந்த அக்கிரமஸ்தர்களுக்கு ஆதரவளிக்க ஸ்திரீகள் நடனமாடிப் பணந்திரட்டினதாகவும் நான் கேள்விப்பட்டேன். ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் நாங்கள் ஒரு ஒப்பந்தஞ் செய்துகொண்டோம். அதற்கிணங்கியும், தான் செய்த பிழைக்காகவும் மகாத்மாகாந்தி இந்த ஒத்துழையாமை இயக்கத்தைக் கொண்டுவந்தார். அவர்களுடைய இரத்தந்தோய்ந்த கைகள் அபரிசுத்தமாகி விட்டபடியால், அவர்களுடைய சம்ஸர்க்கத்தின் ஸ்தானங்கள் எப்படியிருந்தாலும், ஜாதீய மரியாதையையும் தன் மதிப்பையுங் கொண்ட எந்த இந்தியனும் அவர்களுடைய ஸ்தாபனங்களில் கலந்திருக்க முடியாதென்பதே மகாத்மா காந்தியின் நோக்கமாகும். அரசாங்கத்தினின்றும் ஒவ்வொரு இந்தியனும் தன்னுடைய சம்பந்தத்தை விட்டுவிட வேண்டும். சுய மரியாதைகொண்ட எந்த இந்தியனும் இந்த அதிகார வர்க்கத்திற்கு உதவிசெய்ய முற்பட

மாட்டான். மகாத்மாகாந்தி இந்த இயக்கத்தை ஆரம்பித்தார். உடனே, எனது நண்பர் மோடிலால் நெஹ்ரு அவருடன் சேர்ந்தார். கல்கத்தாவில் நடந்த விசேஷ காங்கிரஸில் நான் சேரவில்லை. ஏனெனில் அப்பொழுது இது விஷயமாகச் சில அபிப்பிராய பேதங்கள் இருந்தன. ஒத்துழையாமை யென்ற காரணத்தைக்கொண்டு அதற்கு விரோதமாக அத்தீர்மானத்தை நான் எதிர்க்கவில்லை. நான் அதற்கிணங்கினேன் என்று சம்மதித்தால் உடனே அதன் பிரகாரம் நடக்கக் கடைமைப் பட்டவனாகிறேன். ஆதலாற்றான் நான் சற்று தயங்கினேன். என்றாலும், பிறகு தீர்க்காலோசனை செய்து நாட்டின் அபிவிர்த்திக்கு இந்த இயக்கமே மேலான தர்மமென்று உணர்ந்து முன்வர எத்தனித்தேன். நான் நன்கு சித்தியாகும்படியான ஒரு தீர்மானத்தைக்கொண்டு வர உத்தேசித்தேன். கல்கத்தா காங்கிரஸ் சபைக்குப் பிறகு புதிய வியாச்சியமொன்றையும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. மற்றொரு தீர்மானத்தை நான் ஸ்ரீ காசிக்குக்கொண்டுபோனேன். அங்குதான் அகில இந்திய காங்கிரஸ் பஞ்சாயத்துச் சபை கூடிற்று. மகாத்மாகாந்தியுடனும் மதனமோஹன் மாளவியாவுடனும் எனது நண்பர் லாலாலஜபதியுடனும் அத்தீர்மானத்தைப்பற்றி நான் தர்க்கஞ்செய்தேன். மீண்டும் டாக்கா நகரில் மகாத்மகாந்தியைக் கண்டு அது விஷயமாகத் தர்க்கித்தேன். அவரும் அதற்கிணங்கினார். அந்த தீர்மானத்திற்காக நாகபுரியில் கூடின காங்கிரஸ் மகாசபையில் இரவும் பகலும் ஒடித்திரிந்த விஷயத்தைப்பற்றி காங்கிரஸ் நடவடிக்கையைப்பற்றி தாங்கள் அறிவீர்கள். கடைசி



யாக என் தீர்மானம் வெற்றிபெற்றது. ஆகவே, ஒத்துழையாமையானது அரசாங்க இயந்தரத்தினின்று ஒவ்வொருவரும் விலகிக்கொள்வதென்பது நன்கு புலனாயிற்று. மகாஜனங்கள் அங்ஙனம் தயாராக இப்பொழுது இல்லாமை பற்றிப் படிப்படியாக திட்டங்கள் அமைக்கப்பட்டன. இந்த தீர்மானமானது இப்பொழுது திருப்திகரமாகவே யிருக்கிறது. பம்பாய் வாசியான ஸ்ரீமான். ஜயகர் இதை ஆட்சேபித்தார். எங்களுடன் அவர் அப்பொழுது சேரவில்லை. காரணம் எனக்குப் புலப்படவில்லை. வியாச்சியங்கள் எடுத்துக் கோர்ட்டுகளில் வாதிப்பதில்லையென்று ஸ்ரீ. ஜயகர் தீர்மானித்து ஒத்துழையாமையில் சேர்ந்துவிட்டாரென்ற சமாசாரம் பத்திரிகையில் இரண்டுமூன்றுநாட்களுக்கு முன்னர் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தில் கூடினவர்கள் யாவரும் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்துவிட்டார்கள். இந்த வாழ்க்கையானது ஜீவிப்பதற்கு ஏற்றதல்லவென்றே நான் தீர்மானித்துவிட்டேன். இந்நாட்டில் அடிமைத்தனங்கொண்டு உயிர்வாழ்வதைக்காட்டிலும் சீக்கிரத்தில் மரணமடைதல் நலம் எனக்கொண்டேன். இந்நாடு நம்முடையது. பகவானால் நமக்குக் கொடுக்கப்பட்டது. அதை நாம் இரவும் பகலும் உணரவேண்டும். அதை யுணரும் நிமிஷத்திலேயே நமக்கு ஸ்வராஜ்யமுண்டாகும். ஸ்வராஜ்யமென்றால் என்ன? நம்முடைய வழியாக நம்முடைய உரிமையைக் கடைப்பிடித்து நடப்பதே ஸ்வராஜ்யமாகும். மற்றொரு சங்கதியும் உண்டு. அது மகாத்மா காந்தி யடிகளின் கைராட்டினத்தைப்பற்றியது. இந்த கைராட்டினத்

தைப்பற்றி அதிகாரிகள் கேலிசெய்கிறார்கள். அப்படி செய்பவர்கள் நம்முடைய அடிமைத் தனத்தை அறியமாட்டார்கள். இராஜீயவழியைவிட பொருளாதாரவழியில் நாம் அதிகமான அடிமைகளாகயிருக்கின்றோம். இந்த சர்க்கா என்னும் கைராட்டினம் எப்படி நம்நிலைமையைமாற்றி நம் இலட்சியத்தைக் கொடுக்க முடியுமென்று பல இடங்களில் பலர் கூறுகின்றனர். சர்க்கா எப்படி ஸ்வராஜ்யத்தைக் கொடுக்கும்? அதின் உண்மையென்ன தெரியுமா? ஸ்வராஜ்யமென்றால் நமக்குள்ளே நாம் வசிக்கவேண்டும். நாம் திருப்தியுடன் நமக்குநாம் அடங்கியிருக்க வேண்டும். நாம் இன்று பெரிய அடிமைகள் என்பதைப்பற்றி உங்களுக்குக் கூறுகிறேன். நம்முடைய பொருளாதார அடிமை இராஜீய அடிமையைக் காட்டிலும் பெரிது. அதிகாரவர்க்கத்தினர்களே நம் நாட்டில் வர்த்தகஞ் செய்கின்றனர்.

ஐரோப்பிய வர்க்கத்தினரைப் பொருத்தின மட்டில் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகப் பற்றில்லாத மற்றவர்களும் இந்த அதிகாரவர்கத்தை நடத்துகிறார்கள். ஒருவர் மற்றொருவருக்கு உதவி புரிகின்றார். திரவியலாபமுண்டாகுதலும் இராஜாங்கத்தைச் சரிவர நடத்துதலுமாகிய இரண்டும் நமது இராஜாங்கத்திலுள்ள கடமையின் இலட்சணங்களாகும். லாங்கஷயரிலிருந்தும் மான்சஸ்டரிலிருந்தும் துணிகளை அவர்கள் அனுப்பாவிட்டால் நம் ஸ்திரீகள் நிர்வாணமாகத்தானிருக்கவேண்டும். இந்த அதிகாரவர்க்கத்தினர் இந்தியாவுக்கு வாரததற்கு முன்னர் நம் நிலைமை அப்படியன்று. நம்முடைய அனுஷ்டானம் அப்படியல்ல. வங்காளத்தைப்பற்றி நான்



நன்கு அறிவேனாதலால் ஈண்டு வங்காளத்தைப் பற்றியே கூறுகிறேன். நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு சுகமாக நாம் வாழ்ந்து வந்தோம். நாம் நம்நாட்டில் பிறர்களுடைய தயவில் இருந்ததேயில்லை. நம்முடைய துணிகளை நாமே செய்துகொண்டு உலகத்தில் சுதந்தர ஜாதியார்களைப்போல நாமும் சுதந்தரத்துடன் இருந்தோம். சர்க்கா (கைராட்டினம்) இப்பொழுது நமக்கு என்ன செய்யும் என்பதை நாம் உணர்வோம். பிரதி வருடம் 60 கோடி ரூபாய் விலை மதிப்புள்ள ஆடைகள் மான்சஸ்டர் நகரிலிருந்து நமக்கு வருகின்றன. ஒரு குடும்பி கைராட்டினத்தைக் கொண்டு பிரதிதினமும் இரண்டுமணி நேரம் நூல் நூற்பானேயானால் அவனுடைய குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு வேண்டிய துணிகளைச் செய்துக் கொள்ளலாம். மாதம் 1–க்கு 40 அல்லது 50 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு குமாஸ்தா தினந்தோறும் ஒன்றல்லது இரண்டுமணிநேரம் நூல் நூற்றுவந்தால் அவன் எவ்வளவோ பணத்தைச் சேகரிக்கலாம். இது மிகவும் சுலபமானது. ஒரு பருத்திச் செடியில் சாதாரணமாக 3 சேர் பருத்திவிளையும். ஒரு துணிக்குச் சாதாரணமாக கால்சேர் பருத்தி போதும். கூடுமான வரையில் சிலமணி நேரம் தினம் நூல் நூற்று வேலை செய்தால் நம் உடைக்கு வேண்டிய ஆடைகள் உண்டாகும். நான் தரித்துக் கொண்டிருக்கும் இந்த ஆடையானது மான்சஸ்டரிலிருந்து வரும் ஆடையைக் காட்டிலும் அதிககாலம் நீடித்திருக்கும். அது 6 மாதத்திற்கு வருவது இது ஒன்றரை வருடத்திற்கு வரும். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு கிரகஸ்

தனும் இவ்வருடத்தில் இவ்வேலையைச் சரியாக செய்து வந்தால் பொருளாதார வழியில் நாம் பூர்ண சுதந்தரத்தை யடைவோம். இதுடன் இராஜீய சுதந்தரத்தையும் நாம் பெற்றுவிடுவோம். ஒரு வருடத்திற்குத் தான் கைராட்டினத்தில் வேலை செய்யும்படியாக உங்களை நாங்கள் கேட்கின்றோம். ஏனெனில் பிறகு நீங்களே உங்களுக்குத் தேவையானபடி திருத்திக்கொள்வீர்கள். நமக்கு உயர்தரத் தொழிற்சாலைகள் வேண்டுவதில்லை. கப்பல் கட்டுந் தொழிலைப்பற்றி என்னவென்றும் கப்பல் படையைப்பற்றி என்னவென்றும் பலர் கேட்கின்றனர். ஐயா! கடவுள் ஆணையாக அத்தகைய விஷயங்கள் ஒன்றும் இவ்வொரு வருடத்திற்கு வேண்டாம். பொருளாதார சுதந்தரத்தை நாம் பெற்றுவிடுவோமானால் நம்முடைய தொழில் முறைகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம். பிறகு எந்த நாட்டினரும் எத்தகைய தொழில் முறையைக் கொண்டும் நம்மை அசைக்கமுடியாது. ஒவ்வொரு வருடத்திலும் நாம் நாளுக்கு நாள் விர்த்தியடையலாம். இது விஷயமாகப் பலர் அபிப்பிராய பேதங்கள் கொண்டிருக்கின்றனர். என்றாலும், ஐரோப்பிய தொழில் முறையை நான் எவ்வாற்றாலும் அங்கீகரியேன். இங்கிலாந்தில் செய்யப்படும் சில சாமான்கள் நம் இந்தியாவில் செய்யப்படாமலே யிருந்துவிட்டாலும் அதைப்பற்றி நான் வருத்தமுறேன். நீங்கள் என் செய்யவேண்டு மென்றால், கைராட்டினங்கொண் நூல் நூற்கவேண்டும். அதன் பிரயோஜனத்தைப் பின்னர் நீங்களே யறிவீர்கள். இதைமட்டும் செய்வீர்களேயானால் ஐயமின்றி பூர்ண சுதந்தரத்தை



நீங்கள் அடைவீர்கள். ஒத்துழையாமை இயக்கமொன்றே சுதந்தரத்தை யடையச்செய்யும் மார்க்கம். ஒத்துழையாமையைச் சரிவர அநுஷ்டிப்பது கடினமென்பதைப்பற்றியும் நான் கூறினேன். பலாத்காரமற்ற வழியைப் பின்பற்றாமற் போனால் இந்த இயக்கம் கெடும். தூராக்கிரக மற்ற வழியைப் பிடித்து அனுஷ்டிக்காமற் போனால் நாம் செய்யும் வேலைகளெல்லாம் பாழாய்ப்போய்விடும். மனத்தினாலாகிலும் வாய் மொழியினாலாகிலும் தேகத்தினாலாகிலும் உண்டாகும் பலாத்காரமான செயல்கள் ஒத்துழையாமையின் தர்மத்திற்கு நேர் விரோதங்களாம். ஆகவே, ஒத்துழையாமைக்காரன் கஷ்டத்தின் மேல் கஷ்டம் அனுபவிக்கத் தயாரா யிருக்கவேண்டும். ஒத்துழையாமைக்காரன் ஒருவன் அடிபட்டாலும் தீங்கிழைக்கப்பட்டாலும், சிறைப்படுத்தப்பட்டாலும் அமைதியுடன் பலாத்காரமற்ற நிலைமையி லிருக்கவேண்டும். நம் நாட்டில் அதிகாரவர்க்கத்தினரின் வழியையும் போக்கையும் நீங்கள் அறிவீர்கள். ஒத்துழையாமை தர்மத்தைப் பிரசாரஞ் செய்பவ னொருவன் மீது இந்தியன் பீனல் சட்டத்திலுள்ள எல்லா பிரிவுகளையும் அதிகாரவர்க்கத்தினர் பிரயோகிப்பர். இம்மாதிரியான வழிகள் ஒத்துழையாமையை வேருடன் அழிக்கும் என்று நாம் நம்பவேயில்லை. ஒத்துழையாமை வெற்றிபெறுமானால் அதிகாரவர்க்கம் நசுக்கப்படு மென்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். பீனல் சட்டத்தின் பிரிவுகளைப் படிப்படியாகப் பிரயோகித்து ஒத்துழையாமை தர்மத்தை யழிக்க அவர்கள் பாடுபடுவார்கள். அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பிரயோகிக்கட்டும். ஒத்துழையாமைக்

காரர்மட்டும் பலாத்காரத்தில் இறங்கவே கூடாது. முஸபர்பூரில் ஒத்துழையாமைக்காரர்கள் சிலர் உக்கிரமமாகப் பேசியதற்காக அவர்கள் மீது 107, 144-சட்டப் பிரிவுகள் பிரயோகிக்க ஏற்பாடாய் விட்டதென்று நான் அறிவேன். அதிகாரவர்க்கத்தினர்களுக்கு அம்மாதிரி அவர்கள் இடங்கொடுக்கலாகாது. அவர்கள் மீது உத்திரவு பிறப்பிக்கப்பட்டபடியால் அந்த சட்டப் பிரிவுக்குட்பட்டு நடக்கவேண்டும். அதிகாரவர்கத்தினரின் ஆட்சி சுயாதிபத்தியமாகவே யிருக்கட்டும். சட்டத்தைக் கடந்து நடக்கட்டும். ஆனால் நாம் சட்டத்தை மீறி இப்பொழுது நடக்கலாகாது. சட்டத்தின் பிரிவுக்கு மேல் பிரிவாக நீதி யில்லாமலும் சத்திய மில்லாமலும் அரசாங்கத்தார் பிரயோகித்து வந்தால், அப்பொழுது சட்டத்திற்குக் கீழ்ப்படியாமல் மீறி நடக்கவேண்டுமென்கிற தீர்மானத்தைக் காங்கிரஸ் ஏற்படுத்தும். ஆகவே, காலம் அப்பொழுது வரும். அந்த காலமானது இன்னும் வரவில்லை. ஒத்துழையாமைக்காரர்களின் பிரசாரமானது சட்டங்களுக்கு அடங்கின அமைதியுள்ள 'நகரத்தான் என்பதே. பலாத்காரத்தை உபயோகிப்பீர்களாயின் பாரத ஜனசபைக்கு விரோதமாகப் போனவர்களாவீர்கள். இந்தப் புனிதமார்க்கத்தைக் கெடுத்தவர்களுமாவீர்கள். ஸ்வராஜ்யத்தின் இரகஸியத்தை உங்கள் இருதய கமலங்களுக்குள்ளே வைத்திருக்கவேண்டும். ஒத்துழையாமை ஒன்றினால் தான் நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். ஸ்வராஜ்யம் வெகு சீக்கிரத்தில் வரவேண்டுமென்ற எண்ணத்தைக்கொண்டு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்தித் திருத்தலேயாம்.



பீஹார் மாகாணத்தில் நம்முடைய இயக்கம் நன்கு வெற்றிபெறுமாக !

---

## II. மாணவர் கடமை

---

[கல்கத்தாவில் மீர்ஜாபூர் சதுக்கத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் 21-ந் தேதி மாலையில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கூடின பெரிய மகாநாட்டில் மாணவர் கடமை என்னும் விஷயமாக மகாத்மா காந்தியடிகள் பேசினபிறகு ஸ்ரீயுத. சித்தரஞ்சனதாஸர் பின்வருமாறு பேசினார்.]

கனவான்களே! என்னுடைய குரல் ஏற்கனவே கம்மல் கொண்டிருப்பதால் நான் அதிகமாகப் பேச சக்தியற்றவனாயிருக்கிறேன். என்றாலும் ஒரு விஷயம் மட்டும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, தற்காலம் உங்களுக்கு ஒரே கடமைதான் உண்டு. கல்லூரியை விட்டுவிட்ட மாணவர்கள் மீண்டும் கல்லூரியை நாடிப்போகாம லிருப்பதே. அப்படிப் போவீர்களானால் நீங்கள் உங்கள் பிறந்த நாட்டிற்கும் வங்காளத்திற்கும் பொதுவாக இந்திய மகா நாட்டிற்கும் ஓர் அவமானத்தைக் கொண்டுவந்தவர்களாவீர்கள். இந்த இயக்கத்தின் வெற்றியானது உங்களுடைய கையில் இருக்கிறதென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். முதல் நாள் நான் உங்களுக்கு உபந்யாசஞ் செய்தகாலத்திலும் மீண்டும் இப்பொழுதும் கூறுவதென்னவென்றால் இந்த இயக்கத்தின் பூர்ண ஜெயம் உங்கள் ஆதீனத்தில் தான் இருக்கிறதென்பதே யாம். நமக்கு ஒத்துழையா

மையே வேண்டும். அரசாங்கத்தைச் சேர்ந்த கல்லூரியானாலும் மற்ற இதர கல்விச்சாலைகளானாலுஞ் சரி, நாம் உடனே பஹிஷ்கரிக்க வேண்டியதே. இப்பொழுது கல்விச்சாலைகளைப் பற்றித் தான் பிரச்னைகள் ஏற்படுகின்றன. கல்கத்தா சர்வகலா சபையானது ஜாதீய சர்வகலா சங்கமென்று கூறுவதை நீங்கள் நம்பாதீர்கள். இந்த சர்வகலா சபை இன்னும் ஜாதீய சர்வகலா சபையாகவே ஆய்விடலாம் என்று கூறுவதையும் நீங்கள் நம்பாதீர்கள். அந்த வார்த்தையையின் வாதத்தைக் கேட்காதீர்கள். ஏனெனில் அது விதண்டாவாதம். யோசனையற்ற புத்திமதி. கல்விச்சாலையின் ஜாதீயத் தன்மையானது அந்தக் கல்விச்சாலையில் இருக்கும் ஐரோப்பிய போதகாசிரியர்களைப்பற்றியாவது அல்லது இந்தியர்களைப் பொறுத்தாவது இல்லை. தற்காலத்தில் உள்ள கல்விச்சாலைகளெல்லாம் ஜாதீய தன்மையைக் கொண்டிருந்தபோதிலும் அவைகளுக்கு இந்த அரசாங்க சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா வென்ற சங்கதியையே நாம் கவனிக்கவேண்டும். இதுதான் பரீட்சை. இந்த கல்விச்சாலைகளெல்லாம் உங்களை நடுச்சந்தியில் இழுத்துவிடும். இந்தியர்களினால் நடத்தப்பட்டுவரும் சாஸ்திர கல்லூரி, சரித்திர கல்லூரி, வைத்திய கல்லூரி போன்ற அநேக கல்லூரிகளெல்லாம் ஜாதீய கல்விச்சாலைகளென்று யார் கூறுவது? அவைகள் ஜாதீய கல்விச்சாலைகளல்ல. அவைகள் அதிகார வர்க்கத்தினர்களின் கல்விச்சாலைகள். நாம் கூடியிருக்கும் இவ்விடத்திற்குக் கூப்பிடு தூரத்திலுள்ள சர்வகலா சபையானது நாம் ஸ்வராஜ்யம் பெறுங் காலத்தில் தானாகவே நம் அடிபணிந்து ஜாதீய முறை



மைக்கு வந்துவிடும். வங்காள பாலியர்கள் இதைத் தங்கள் மனதில் நன்றாகப் பதிந்துக்கொள்ள வேண்டும். நீங்கள் ஏற்கனவே முதல்படியைப் பற்றிவிட்டீர்கள். இரண்டாவது படியோ இந்த பஹிஷ்காரத்தை விடாது அநுஷ்டிப்பதே. ஜாதீய சர்வகலா சபையைப்பற்றிய கேள்வி இப்பொழுது பிறக்கும். ஜாதீய சர்வகலா சபைகள் ஸ்வராஜ்யத்திற்காக ஸ்தாபிக்கப்படப் போவதில்லையென்று நான் அன்றே உங்களுக்குக் கூறியுள்ளேன். அப்படி வேண்டுமென்று நீங்கள் கூறுவீர்களானால் அது உங்களுடைய ஆதீனத்திலேயேயிருக்கின்றது. உங்களுக்கு வாஸ்தவத்திலேயே ஜாதீய சர்வகலா சங்கமொன்று வேண்டுமென்றால், உடனே அரசாங்கக் கல்லூரியை விட்டுவிட்டு வாருங்கள். நான் உங்களுக்கு ஜாதீய சர்வகலா சபையொன்றை ஸ்தாபித்துத் தருகிறேன். சொல்வதைத் தட்டாமற் செய்வதற்கே நான் இருக்கிறேன். என்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் ஆவலாக எதிர்பார்ப்பதுபோல, நானும், நீங்கள் திடமாகச் சொன்னசொல் தவறாமலிருக்கிறீர்களாவென்று எதிர்பார்க்க வேண்டாமா? இந்த உபயோகமற்ற கல்விச்சாலைகளைத் திரும்பிப்பாராமல் சத்தியமாகவும் தைரியமாகவும் இருக்க வேண்டுமென்று நான் உங்களிடமிருந்து எதிர் பார்க்க வேண்டாமா? நாட்டிற்காக உழைக்க வேண்டிய மாணவர்களை இரண்டு பிரிவாக நான் பிரித்திருக்கிறேன். கைராட்டினத்தின் தத்துவத்தைப்பற்றி நம் அருந்தலைவர் மகாத்மா காந்தியடிகள் சொன்னதை இந்தியா ஏற்கனவே அறிந்ததுண்டு. ஆனால்,

நம் கால வித்தியாசத்தினால் இந்தியா இப்பொழுது அதை மறந்து விட்டது. இனி ஏற்படப் போகும் ஜாதீய சர்வகலா சபையில் ஒரு திட்டம் ஏற்படுத்தப் போகிறோம். கல்லூரியில் கல்விபயிலும் ஒவ்வொரு மாணவனும் கைராட்டினங் கொண்டு நூல் நூற்கவும் துணி நெய்யவும் கட்டாயம் கற்க வேண்டு மென்பதே. இனி இது கட்டாயக் கல்வியாகும் என்பதை உங்களுக்குக் கம்பீரமாக நான் கூறுவேன். நாட்டிற்காகத் தொண்டு செய்ய விரும்பும் மாணவர்களும் கட்டாயம் நூல் நூற்கக் கற்பதும் துணி நெய்யக் கற்பதும், ஜாதீய சர்வகலா சபையில் இரண்டொரு மாதகாலம் அனுபவம் பெறக்கற்பதுமே இனி உங்களுக்காக என்னால் ஸ்தாபிக்கப்படப் போகும் ஜாதீய சர்வகலா சபையில் இன்றியமையாததாகும். மற்றொரு கட்சியாகப் பிரிக்கப்பட்ட மாணவர்கள் இன்னும் படிக்க வேண்டுமென்பதாக அபிப்பிராயப் படுவதால் அவர்களுக்கும் நான் ஏற்பாடு செய்ய விருக்கிறேன். நான் செய்கிறேன் என்று கூறும் பொழுதெல்லாம் உண்மையில் நீங்களே செய்கிறீர்களென்று எப்பொழுதும் அறிந்துக் கொள்ளுங்கள். எனக்குப் பலம் உங்களிடமிருந்து தான் உண்டாகிறதென்று அன்றே நான் கூறினேன். நீங்கள் தயாராக யில்லர்மற் போனால் நான் எம்மாத்திரம்? நீங்கள் மட்டும் தயாரா யிருப்பீர்களேயானால், 10 லட்சம் மனிதர்களுடைய பலம் ஏககாலத்தில் எனக்கு உண்டு. நான் யார்? இந்த ஜாதீய சர்வகலா சபையை நான் ஸ்தாபிப்பதும் உங்கள் வசமே யிருக்கிறது. அதோ, அங்கே தலைதூக்கி பெருகிவரும் கல்வி யென்னும் பெரிய பூதத்தின் வடிவமாக நம் ஜாதீய



சர்வகலா சபையும் இருக்குமென்று எண்ணவே எண்ணாதீர்கள். அம்மாதிரி யிருக்கவே மாட்டாது. நீங்கள் ஜாதீய கல்லூரியில் படிக்கும் பொழுது பாடதிட்டங்களில் அதிகமாகக் கவனஞ் செலுத்த வேண்டிவருமே யொழிய, தற்காலத்தைப் போல் டாம்பீகத்திலும் பெரும்போகத்திலும் காலங்கழிக்க முடியாது. ஜாதீய சர்வகலா சபையில் இரண்டல்லது மூன்று வருட காலம் கல்விகற்று வெளிவருவானே யானால் அவன் சிறந்த இந்தியனாகி, இந்தியனுக்கு வேண்டிய அங்கங்களைப் பெற்று நல்ல யோக்கியனாவான். ஏழு அல்லது எட்டு வயது முதல் மூன்று, அல்லது நான்கு அல்லது ஐந்து வருடகாலம் வரை தான் ஜாதீய சர்வகலா சபையில் கல்வி கற்பிக்கப் படும். ஐரோப்பிய தத்துவத்தையும் ஐரோப்பிய போதனா முறையையும் பார்த்து அதின்படி இனி இந்திய சர்வ கலாசபை எக்காலத்தும் அனுஷ்டிக்காது. இந்த திட்டத்தைத் தான் நான் உங்களுக்குக் கூற வந்தேன். கல்வியைப்பற்றிய காரியங்கள் ஒன்றும் தடைபடாது. ஒரு ஜாதீய சரித்திரத்தில் ஒரு வருடகாலம் எம்மாத்திரம்—நமக்கு வேண்டிய மேலான பதவியை யடைய மகா வல்லமை பொருந்திய அதிகார வர்க்கத்தினரிடம் பலாத்காரமற்ற தர்ம யுத்தம் செய்ய நாம் கச்சை கட்டிக்கொண்டு முன் வந்திருக்க இந்த ஒரு வருடகாலம் எம்மாத்திரம்? ஸ்வராஜ்யப் போருக்காக ஒரு வருடகாலம் உங்கள் புத்தகங்களை யெல்லாம் ஒரு மூலையில் வைத்துவிட்டு வெளி வருவது உங்கள் தர்மமல்ல வென்று நியாயத்துடன் எவராகிலுங் கூறமுடியுமா? புத்தகத்தைக் கையினின்றும் விடாது இன்னமும் படிக்க வேண்டு

மென்கிற அவாவுடன் கல்லூரிக்குப் போய்க் கொண்டு வருவீர்களானல் ஸ்வராஜ்யப் போருக்காக நீங்கள் உங்கள் கடமையை யிழந்தவர்களாவீர்கள். கடமையை வழுவுதல் மடமையன்றோ? நீங்கள் எம் மாதிரியாக என்னென்ன செய்தபோதிலும் இந்த தர்ம யுத்தமானது பலாத்காரமற்றதென மட்டும் சதா ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பள்ளிக் கூடங்களை முதலில் விட்டுவிட்டு மீண்டும் போய்ச் சேருவீர்களேயானல் உங்களைப் போன்ற பயங் கொள்ளிகள் வேறொருவரும் இருக்க மாட்டார்கள். அதுடன் இந்த ஸ்வராஜ்யப் போரில் தலையிடவும் நீங்கள் யோக்கியதை யற்றவர்களாவீர்கள்.

கனவான்களே, என்னுடைய அருந்தலைவரான மகாத்மா காந்தியடிகளின் பெயராலும் என் ஆருயிர்த் தோழரான மௌலானா மகம்மத் அலியின் பெய ராலும் உங்களுக்கு நான் இப்பொழுது வந்தனஞ் செலுத்த அனுமதி கொடுங்கள். வந்தேமாதரம்.

---

## III. மாணவர்களுக்குப் புத்திமதி

---

[1921-ம் வருடம் ஜனவரி மாதம் 14-ந் தேதி யன்று மாலையில் கல்கத்தாவிலுள்ள மீர்ஜாபூர் நந்த வனத்தில் வங்கவாசி, ரிப்பன் கல்லூரி மாணவர் களின் பெருங் கூட்டத்தில் சித்தரஞ்சன தாஸ் பின் வருமாறு கூறினர்.]

மாணவர்களே! இன்று அதிகமாக எனக்குப் பேச முடியாது. உங்களைப் பார்க்கையில் என்மனம் சந்தோஷ மடைகிறது. என் மனத்தின் உள்ளே



பொங்கி எழும் எண்ணங்களை வெளியிட இயலாதவ னாக நான் இருக்கிறேன். கல்லூரியைவிட்டு வந்தவர் கள் இங்கு கூடியிருக்கும் எங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாய் விட்டீர்களாகையால் உங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். திடவைராக்கியத்துடன் நீங்கள் செய்த காரியம் சாலவும் மெச்சத் தக்கது. உங்களுக்குள்ளே யிருக்கும் பலத்தை நீங்களே நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். அப்பல மானது உங்களைச் சேர்ந்ததல்ல. மற்றும் அது மனித சங்கல்பத்தினல் உண்டானதுமல்ல. பகவத் சங்கல் பத்தினல் சைதன்யத்தின் ஒளிப்பிழம்பினல் ஏற் பட்ட பாரதமாதாவின் சக்தியாகும். அல்லது நம் மைப் படைத்த கடவுளின் அருள் சக்தியுமாகும். உங்கள் மூலமாக தேசாம்பிகையின் சக்தியே பிர சன்னமா யிருக்கிறது போலும். அவள் யார் என் பது எனக்குத் தெரியாது. ஆனல் அவளே நம் முடைய அகண்ட சமூகத்தின் இல்லுறைத் தெய் வம். இப்பொழுது அன்புடன் பிரசன்னமா யிருக் கும் தாயே! நீர் பெருக்கினைக் கொண்ட வங்காள தேவியைப் போற்றுவாயாக! இன்கனி வளர்த்திடும் மரங்களையும், மந்தமாருதம் வீசும் சைலங்களையும் போற்றுவாயாக!! வீரஞ்செறிந்த மக்களையும் அன் பால் போற்றுவாயாக!!!

மாணவர்களே! நம்மிற் சிலர் உங்களைப் பைத் தியக்காரர்கள் எனக் கூறுவார்கள். என்னையுஞ் சிலர் அப்படியே கூறுகின்றார்கள். உண்மையில் பைத்தியக் காரர்கள் யார்? சதா சர்வகாலமும் பணத்தாசை கொண்டு பேய்போலலையும் வியாபாரிகளும் வர்த்த கர்களும் பைத்தியக்காரர்களல்லவா? வியாச்சியங்

களின் பொருட்டு உள்ள ஆஸ்தியை யெல்லாம் வக்கீல்மார்களுக்குக் கொட்டிக் கொடுத்துப் பாதவிக்கும் அவர்களும், பிறருடைய அன்னத்தினாலும் மற்றப் பொருள்களினாலும் தன்னைத்தான் டாம்பீகமாக அலங்கரித்துக் கொண்டு வெளிவரும் வக்கீல்மார்கள் பைத்தியக்காரர்களல்லவா? பிரபஞ்சத்தில் ஒவ்வொருவனும் பைத்தியக்காரனே. சிலர் பணப்பைத்தியம் பிடித்து அலைகிறார்கள். வேறு சிலர் உத்தியோகப் பைத்தியம் பிடித்துத்திரிகிறார்கள். மற்றுஞ் சிலர் காமாதுரர்களாகப் பைத்தியம் பிடித்து சுழல்கிறார்கள். இன்னுஞ் சிலர் பகவத்பக்தி ஈடுபட்டு பைத்தியம் பிடித்து இருக்கிறார்கள். நாமும் தேசபக்தி கொண்டு நந்தாய்க்கு ஊழியஞ் செய்தலையே மேற்கொண்டு பைத்தியம் பிடித்தவர்களாகப் பேசுகிறோம்—திரிகிறோம். யார் யார் என்னென்ன மாதிரி நம்மைக் கூப்பிட்டாலும் நாம் உண்மையை மட்டும் அறிய வேண்டும். உங்களிடத்திலுள்ள சத்தியத்தையே நீங்கள் கைப்பற்றி நிற்கவேண்டும். கஷ்டங்கள் பல வரினும், துன்பங்கள் அடுத்தடுத்து நேரிடினும், ஆண்மையுடன் தாங்கிக்கொண்டு சலியாத நெஞ்சத்தினர்களாய் நீங்கள் நிற்றல் வேண்டும். வழியோகடினமாகவும் இருள் மூடினதுமாகத்தான் இருக்கும். ஆனால் சாக்ஷாத்பகவானுடைய திவ்ய ஒளிமட்டும் அவ்வழியே வீசிக்கொண்டிருக்கும். அலைபட்டுத்தடுமாறும் மனதை யொழியுங்கள். மனிதனால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. வெகு காலமாகத் தளைபட்டு சுதந்தரப்பிரசன்ன மின்றியிருக்கும் நம் தாயின் விடுதலைக்கு நாம் முன் நின்று போராடுகிறோம். அவளைக் கட்டப்பட்டிருக்கும் விலங்குகளைத் முறித்



தெறிந்து வெளியிட நம்மால் ஆகாதா? நிற்க, அதோ தெரியும் அந்த கல்லூரியிலும் கலா சாலையிலும் படித்து ஞானம் சம்பாதிப்பதைக் காட்டிலும் ஞானமின்றி அஞ்ஞானிகளாகவே நாம் திரியலாம். நாம் வசிக்கும் தன்மைக் கேற்ப வித்தையைக் கற்க வேண்டும். நம் பண்டைக்காலத்து ஒழுக்க வழக்கங்களை யொட்டி சாஸ்திர சரித்திரங்களுடன் நாம் கல்வி கற்கவேண்டும். நம்மைச் சில ஆங்கிலோ இந்தியர்கள் போல்ஷிவியர்களெனக் கூறுகின்றனர். போல்ஷிவிக் கொள்கை என்ன என்பதைப் பற்றி நான் அறியேன். சத்தியத்தை நாம் அறியவேண்டும். என்றும் அழியாத வஸ்துவை நாம் அறிய வேண்டும். நம் நாடு சுதந்தரங்கொள்ள நம் நரம்புக் குழாய்களில் ஓடும் இரத்தத்தின் உணர்ச்சியை நாம் நன்கு அறியவேண்டும். இதுவே தான் எனக்கு வேண்டும். போல்ஷிவிக்கொள்கை எனக்கு வேண்டாம் — வர்த்தக வியாபார எழுச்சியும் எனக்கு வேண்டாம்—எனக்கு ஐரோப்பிய சம்சர்க்கமும் வேண்டாம். நான் சுதந்தரமுள்ளவனா யிருக்கவேண்டும். நான் உண்மையில் நானாகவேயிருக்க வேண்டும். இதுவே நிரந்தரமான உண்மையானால் நீங்கள் இப்பொழுது பயப்படாதீர்கள். திடமாக நில்லுங்கள். மாணவர்களே! இன்று பதினைந்து நாட்களுக்குள் அல்லது ஒரு மாதத்திற்குள் ஜாதிய கல்லூரியொன்றை ஸ்தாபிப்பேன். இந்த ஊரில் அதற்குச் சமமான மற்றொருகலாசாலையில்லை யென்று சொல்லும் வண்ணம் ஒரு கலாசாலையை யமைத்துக் கொடுப்பேன். ஆங்கு ஜாதிய முறையில் கல்வி கற்கலாம். உங்கள் தாய் நாட்டிற்கு எப்படித் திருத்தொண்டு

செய்யவேண்டுமென்பதை யறியலாம். ஆகவே, கல்கத்தாவிலுள்ள கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் யாவரும் வெளிவரவேண்டும். இதுவே நீங்கள் தாய் நாட்டிற்குச் செய்யக்கூடிய சிறந்த தொண்டாகும்.

---

## IV. ஒத்துழையாமை தீர்மானம்

---

[1920-ம் வருடத்தில் நாகபுரியில் கூடின பாரத ஜனசபையில் ஒத்துழையாமை தீர்மானத்தைப்பற்றி ஸ்ரீயுத. சித்தரஞ்சன தாஸ் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு.]

அக்கிராசனாதிபதியவர்களே! சகோதர சகோதரிப் பிரதிநிதிகளே!!

ஒத்துழையாமை தீர்மானத்தைப்பற்றிப் பிரேரேபிக்க நான் உங்கள் முன் வந்தேன். கல்கத்தாவில் கூடின மகாசபையில் தீர்மானித்த ஒத்துழையாமைத் தீர்மானத்தைக் காட்டிலும், இவ்வருடம் விஷய ஆலோசனைக் கமிட்டியில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானமானது பலக்குறைவுள்ளதும் திடமற்றதுமென்று குறை கூறப்படுவதை ஆராய்ச்சி செய்யும் பொருட்டுப் பிரஸ்தாப தீர்மானத்தைச் சொற்றொடர் சொற்றொடராகவும் வார்த்தை வார்த்தையாகவும் வெகு சாக்கிரதையுடன் கவனித்துப் பார்க்கும்படி நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தீர்மானத்தை நான் இப்பொழுது படிக்கிறேன். தீர்மானம் பின் வருமாறு.

தற்சமயம் இந்தியாவிலுள்ள அரசாங்கம் இத்



தேசத்தாரின் நம்பிக்கையை யிழந்து விட்டதாலும் இந்தியாவிலுள்ளவர்கள் இப்பொழுது ஸ்வராஜ்யம் ஸ்தாபிக்க முடிவு செய்துள்ள படியாலும் கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸ் வரையில் தேசத்தார் சுதந்தரங்கள் பெறுவதற்காகவும் கிலாபத், பஞ்சாப் ஆகிய தவறுதல்களுக்குப் பரிகாரந் தேடவும் அனுஷ்டித்த முறைகள் பலன் தரவில்லையாதலாலும், இப்பொழுது கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸில் பலாத்காரமற்ற ஒத்துழையாமைத் தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்துவதோடு தற்போதுள்ள அதிகாரவர்க்க அரசாங்கத்துடன் யாதொரு சம்பந்தம் வைத்துக் கொள்ளுவதை விட்டு ஒழிவது முதற்கொண்டு வரி செலுத்த மறுத்தல் ஈறாக ஒத்துழையாமை திட்டம் பூராவையும் காங்கிரஸ் மகாசபையாவது, அகில இந்திய காங்கிரஸ் பஞ்சாயத்தாவது நிர்ணயிக்கும் ஒரு காலத்தில் அமுலுக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்றும் அக்காலத்திற்குள் தேச ஜனங்களைத் தயார் செய்யும் வகையில் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்ய-வேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகின்றது.

1. 16 வயதுக்குட் பட்டிருக்கும் மாணவர்களின் பெற்றோர்களையும் போஷகர்களையும் தங்கள் குழந்தைகளைக் கவர்ன்மெண்டு பள்ளிக் கூடங்களினின்றும் மற்றும் கவர்ன்மெண்டு உதவி பெற்று நடத்தப்படும் கல்விச் சாலைகளினின்றும் நிறுத்தி விடும்படி கேட்டுக் கொள்ளவேண்டும். இப்படி பள்ளிக் கூடங்களை விட்டு விலகும் மாணவர்களுக்குத் தேசிய பாடசாலைகளையோ அல்லது வேறு கலாசாலைகளையோ ஏற்படுத்திக் கல்வி கற்பிக்கவேண்டும்.

2. கவர்ன்மெண்டு பாடசாலைகளினின்றும் அல்
லது சர்க்கார் உதவி பெற்ற கல்லூரிகளினின்றும்
16-வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கள் நாட்
டினர் பஹிஷ்கரிக்க விரும்பும் கல்விமுறையைக் கற்
பது மனச்சாட்சிக்கு விரோதமானதென்று கருதி
னவுடனே, எதொன்றையுங் கவனியாமல் அம்
மாணவர்களைக் கல்விச் சாலைகளினின்றும் வந்துவிடும்
படிச் சொல்லவேண்டும். இம் மாணவர்களை ஒத்து
ழையாமை விஷயமாகப் பிரசாரஞ் செய்யவோ அல்
லது தேசியகலாசாலைகளிற் படிக்கும் படியோ செய்ய
வேண்டும்.

3. தங்கள் தொழிலை விட்டுத் தேசிய காரியங்
களில் அதிக கவனஞ் செலுத்திக் கோர்ட்டுகளைப்
பஹிஷ்காரஞ் செய்து வழக்குகளைப் பஞ்சாயத்து
கோர்ட்டில் தீர்த்துவைக்கும்படி வக்கீல்மார்களைக்
கேட்டுக் கொள்ள வேண்டும்.

4. பொருளாதார விஷயத்தில் மற்ற நாடு
களைச் சார்ந்திருக்காமல் இந்தியாவிலேயே செய்யப்
படும் சுதேசசாமான்களையே இந்தியர்களை வாங்கும்
படிச் செய்யவும், கூடிய வரையில் அன்னிய நாட்
டுச் சரக்குகளைப் பஹிஷ்கரிக்கும்படி வியாபாரிகளுக்
கும் தொழிலாளர்களுக்கும் அறிவிக்க வேண்டும்.
ஐரோப்பியரோடு பொருளாதார சம்பந்தம் வைத்
துக்கொள்ளாமலிருக்கும் விஷயமாய் ஒரு திட்டம்
ஏற்படுத்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் சில
நிபுணர்களடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கவேண்டும்.

இத்திட்டத்தை யனுஷ்டிக்க ஆங்காங்கு வியா
பாரிகள் தொழிலாளர்கள் முதலியோர் அடங்கிய
கமிட்டிகள் நியமிக்கப்பட வேண்டும். கிராமங்களி



லும் கமிட்டிகள் ஏற்படவேண்டும். அவைகளுக்கு
மாகாணங்களில் மத்திய கமிட்டி யொன்று மிருக்க
வேண்டும்.

5. ஒத்துழையாமை இலட்சியத்தில் ஒவ்வொரு
ஸ்திரீ புருஷர்களையும் தியாகஞ் செய்யக் கேட்டுக்
கொள்ள வேண்டும்.

6. அகில இந்திய திலகர் ஞாபகச் சின்னத்
திற்கு யாவரையும் பொருள் உதவிசெய்யும்படி
கேட்கவேண்டும். இந்திய தேசிய தொண்டர்கள்
என்ற பெயருடன் பலர் கிளம்பி இதற்கு வேலை
செய்ய வேண்டும்.

7. ஒத்துழையாமை இயக்கத்தில் முக்கியமாக
சட்ட சபை பஹிஷ்காரத்தில் நாட்டினர் செய்திருக்
கும் அபிவிர்த்தியை இக்காங்கிரஸ் பாராட்டுகின்றது.
தற்போது அமைக்கப்பட்டிருக்கும் சட்ட சபைகள்
ஜனப்பிரதிநிதி சபையாகாது என்றும் காங்கிரஸ்
அபிப்பிராயப்படுகின்றது. வாக்குரிமை பெற்றவர்
களின் பெரும்பாலார் தங்கள் வாக்குரிமையைக்
கொடுக்காமலிருந்தும் சட்ட சபையில் ஸ்தானம்
பெற்ற பிரதிநிதிகள் உடனே சட்ட சபைஸ்தானங்
களை இராஜீநாமா செய்துவிட வேண்டும். அந்தந்த
தொகுதியின் வாக்காளர்களின் அபிப்பிராயத்திற்கு
விரோதமாயும் ஜனநாயகத்துவத்திற்கு முரணாயும்
பிரதிநிதிகள் சட்டசபையினின்றும் விலகாமலிருந்
தால் வாக்காளர் இராஜீய விஷயத்தில் அவர்களின்
உதவியை நாடக்கூடாது.

8. போலீசாருக்கும் இராணுவ சிப்பாய்களுக்
கும் பொதுஜனங்களுக்கும் தேசபான்மை நெருங்கி
வருகின்றமையால் இனி பொது ஜனங்கள் போலீ

லாரும் இராணுவசிப்பாய்களும் தங்கள் நாட்டினரின் மனப்பான்மையை மதிப்பதில்லையென்றும், வரம்புமுறையில்லாது மனங்கொண்டபடி நடப்பவரென்றுஞ் சொல்லி வருவதை விட்டுவிடவேண்டும்.

9. சர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்கள் யாவரும் தேசத்தின் ஆக்ஞைக்கிணங்கியும் தாங்கள் எந்த நிபந்தனைக் குட்பட்டு வேலைசெய்ய ஒத்துக் கொண்டார்களோ அதற்கு மாறாமலும் நடந்து கொண்டு மிக்க பட்சத்துடன் தேசீய விஷயத்திலும் ஈடுபட்டு பஹிரங்கமான எல்லாக்கூட்டங்களுக்கும் விஜயஞ்செய்து நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமலிருக்கவேண்டும்.

10. நாட்டின் பூசாரமும் பொருள்சாரமும் கொள்ளைகொண்டு போகப்படுவதை நிறுத்தவேண்டுமானால், அன்னியநாட்டுச் சரக்குகளைப் பஹிஷ்கரிக்க வேண்டும். இனி நியமிக்கவிருக்கும் கமிட்டியார் எந்தெந்த பொருள்களை விலக்கவேண்டுமென்று சொன்னார்களோ அந்தப் பொருள்களை இந்திய மகாஜனங்கள் விலக்கவேண்டும். இறக்குமதி செய்பவர்கள் அன்னியநாட்டுச் சரக்குகளைக்கொண்டு வியாபாரம் செய்பவர் ஆகியவர்கள் தங்கள் பணத்தை இந்தியாவிலேயே பண்டங்களை யுண்டாக்கும் வகையில் செலவிடல் வேண்டும்.

11. முதலாளிகள் கவர்ன்மெண்டாரிடம் சேர்த்து வைத்திருக்கும் பொருளைத் திருப்பி வாங்கிக்கொண்டு கைத்தொழில்களை விர்த்திசெய்யும் முறையில் செலவிடவேண்டும்.

12. இந்நாட்டிலுள்ள வாலிபர்கள் குமாஸ்தாக்களாவதிலும் கலைப்பயிற்சி பெறுவதிலுமே காலஞ்



செலுத்தாமல் கைத்தொழில் அபிவிர்த்தியிலும் வியாபாரவிர்த்தியிலும் விவசாய முன்னேற்றத்திலும் கவனஞ் செலுத்தவேண்டும்.

13. ஒத்துழையாமை என்ற வார்த்தையோடு பலாத்காரமற்ற என்றவார்த்தையும் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டிருப்பதால் பொது ஜனங்கள், நடத்தையிலும் யாதொரு பலாத்காரமுள்ள செயலை யநுஷ்டிக்கக்கூடாது. வார்த்தை யளவில் நிற்பதில் பயனில்லை. பலாத்காரச் செய்கையை அநுஷ்டித்தால் உண்மையான ஜனநாயக வளர்ச்சியைக் கெடுத்துவிடும். கடைசியாக ஆவசியகம் ஏற்பட்டால் வரி செலுத்துவதையும் மறுத்துவிடவேண்டும்.

14. காங்கிரஸ் மகாசபையோடு சம்பந்தப்பட்டவைகளும் மற்றசபைகளும் பலாத்காரமற்ற ஒத்துழையாமையே வளர்க்க முயற்சிக்கவேண்டும். ஜனங்களுக்குள் ஒத்துமையிருந்தால்தான் ஒத்துழையாமை இயக்கம் பலிக்கும்.

15. பிராம்மணர் பிராம்மணரல்லாதாருக்குள் சச்சரவு ஏற்படுமிடங்களிலெல்லாம் பிரபல ஹிந்துக்கள் சச்சரவை விலக்கவேண்டும்.

16. தாழ்ந்த வகுப்பினரை நடத்தும் விஷயமாக ஹிந்துமதத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளை மாற்ற வேண்டுமென எங்கும் விருப்பமிருப்பதால் சங்கராசாரியார் முதலிய ஹிந்துமத குருக்கள் அவ்வழியில் முயற்சிக்கவேண்டும்.

நண்பர்களே! இதுதான் தீர்மானம். பஞ்சாப் கிலாபத் முதலிய தவறுதல்கள் ஒவ்வொன்றும் பெரியதாக யிருப்பதினின்றுமே நாம் கொண்ட இந்த இயக்கம் ஏற்பட்டதாகையால் பஞ்சாப், கிலா

பத், விஷயத்தைப்பற்றி அதிகமாக நான் கூறவில்லை.
தவறுதல்கள் அவ்வளவு பிரமாதமாக யிருப்பது
பற்றியே அவைகளுக்குப் பரிகாரமாக ஸ்வராஜ்யம்
உடனே வேண்டுமென்று நாம் தீர்மானிக்கின்றோம்.
இதுவரை நாம் அநுஷ்டித்த முறைகள் பயனற்றுப்
போய்விட்டதென்று கொண்டே இப்பொழுது நாம்
பலமான பலாத்காரமற்ற ஒத்துழையாமைத் திட்டத்
தைக் கைப்பற்றினோம். ஆகவே, இந்த காங்கிரஸ்
பஹிரங்கமாகவும் விசிதமாகவும் ஒத்துழையாமை
யைத் தீர்மானித்தது. நம்முடைய இலட்சியத்தை
யடைய ஒத்துழையாமைத் தீர்மானத்தின் எல்லாப்
படிகளையும் அநுஷ்டிக்கவேண்டிய அவசியம் ஏற்
படாதென்று மகாத்மா காந்தியைப் போலவே,
நானும் அபிப்பிராயப்பட்டபோதிலும் வரி செலுத்து
வதை நிறுத்துவதுள்பட சகல படிகளையும் நிறை
வேற்றிவைக்க இந்தியா தயாராக யிருக்கிறதென்று
கல்கத்தா தீர்மானத்தில் நாம் விபக்தமாகக் கூற
வில்லை. ஆயினும், அவசியமேற்பட்டால் இந்திய
மகாசனங்கள் அதை யநுஷ்டிக்கப் பின்வாங்கமாட்
டார்களென்பதை விபக்தமாகச் சொல்லிவிடவேண்
டும். காங்கிரஸ் மகாசபையாவது, அகில காங்கிரஸ்
கமிட்டியாவது எச்சரிக்கை செய்ததும் வக்கீல்கள்,
மாணவர்கள், வியாபாரிகள், விவசாயிகள் அனைவரும்
அதைப் பின்பற்றத் தயாராக யிருக்கவேண்டும்.
அதன் கருத்தென்னவென்று விளங்குகிறதா? இந்த
ஆங்கில அரசாங்க நிர்வாகச் சக்கரமானது இந்தியர்
களாலேயே தூரத்தப்படும். அதிகாரிகளால் ஒருக்
காலும் ஓட்டப்படமாட்டாது. தூரத்துவதற்குரிய
எச்சரிக்கை மணி யடிக்கப்பட்டால் ஒவ்வொரு இந்தி



யரும் நிர்வாக இயந்தரத்தில் சம்பந்தப்படாமல் உங்க
ளுடைய இஷ்டப்படி நடந்துகொள்ளுங்களென்று
விட்டுவிடவேண்டும். கல்கத்தா தீர்மானத்தில் மாண
வர்களையும் வக்கீல்களையும் குறிப்பிட்டு அன்னிய
நாட்டுச் சரக்குகளைப் பஹிஷ்காரஞ் செய்யவேண்டு
மென்று பொதுவாகச் சொல்லியிருந்தோம். இத் தீர்
மானத்தில் ஒரு காலவளவை ஏற்படுத்தி யிருக்கிறோம்.
மாணவர்களை 16-வயதுக்கு மேற்பட்டவர்களென்றும்
16-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும் இருபிரிவு
களாக வகுத்திருக்கிறோம். வக்கீல்கள் விஷயத்தில்
நாம் கல்கத்தா தீர்மானத்தை ஊர்ஜிதப் படுத்துவ
துடன் அதை ஆதரித்து வக்கீல்கள் நடந்துகொண்
டிருக்கும் மாதிரி திருப்திகரமாக இராததால் அவர்
கள் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று சொல்லியிருக்கிறோம். இவ்வித நிலைமையில்
கல்கத்தா தீர்மானத்தைவிட இத் தீர்மானம் பலஹீன
மானதா? வக்கீல்கள் விஷயத்தில் பலஹீனமானதா?
இல்லையென்றே நான் கூசாமற் சொல்வேன். இத்
தீர்மானத்தில் கல்கத்தா தீர்மானத்தை ஊர்ஜிதப்
படுத்துவதுடன், அத் தீர்மானத்தின்படி நடக்க
வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம். மாண
வர்கள் விஷயத்திலும் இத் தீர்மானம் பலஹீனமான
தல்ல. பொய்சாக்குச் சொல்லிக்கொண்டு மாணவர்
கள் பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறிவிடாமற்
செய்திருக்கிறோம். கலாசாலைகளில் படிக்க மனச்
சாட்சி விடாத பிள்ளைகள் பலனைக் கவனியாமல்
வெளியே வந்துவிடவேண்டு மென்று இந்த மகா
சபை சொல்வது நியாயமே யாகும். 16-வயதுக்
குட்பட்ட மாணவர்கள் விஷயத்தில் அவர்களுடைய

பிதாமார்கள் அதிக கவலை யெடுத்துக்கொண்டு தேசிய பாடசாலைகளை யேற்படுத்தி தங்களுடைய பிள்ளைகளை அனுப்பவேண்டு மென்று நியாயத்தையும் அனுபவத்தையும் அனுசரித்துத் தீர்மானம் தயாரித்திருக்கிறோம். பிறகு, பொருளாதார விஷயத்தில் நாம் ஆதித் தீர்மானத்தின் வேகத்தைக் குறைத்திருக்கிறோமா? விடாமல் ஒரே மூர்த்தன்யமாய்ப் பிரசாரஞ் செய்து நாளடைவில் அன்னிய நாட்டுச் சரக்குகளை அடியோடு பஹிஷ்காரஞ் செய்துவிடவேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம். இது வாய்ப்பேச்சுடன் மட்டி லிராமல் அனுபவத்திலும் ஒவ்வொரு இந்தியராலும் அனுஷ்டிக்கப்படும். ஆகவே, இத் தீர்மானம் எவ்விதத்தில் பலஹீனமான தென்று சொல்லலாம்? அனாவசியகமான சந்தேகத்தைத் தவிர, அவ்விதம் நினைப்பதற்கு வேறு காரணமில்லை. நான் சொல்லுகிறபடியே நடக்கிறவன். வீணான ஆகாசக்கோட்டை கட்டுகிற வழக்கம் எனக்கு ஒருபொழுதுங் கிடையாது. உங்களிற் சிலர் என்னுடைய வார்த்தைகளை நம்பாம லிருக்கலாம். ஆனால், சகோதரர்களே! நீங்கள் எவ்விதக் கேள்விகளை வேண்டுமானாலும் கேளுங்கள். நான் என்னசெய்ய உத்தேசித்திருக்கிறேனென்று ஒவ்வொன்றுக்கும் பதில் கூறுகிறேன். நான் ஒருவரைப்பற்றியும் ஒன்றும் சொல்லமாட்டேன். இத் தீர்மானத்திற்குக் கொஞ்சமும் ஆட்சேபனையின்றி ஒவ்வொருவரும் தெய்வ சாட்சியாக இதை நிறைவேற்றிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். கடவுள் நமக்குக் கொடுத்தும் நாம் பெறாமலிருக்கும் பாத்தியதைகளை யடையும்படி தேசத்திற்கு ஆக்ஞையிடுங்கள். கடவுள் மனிதர்களுக்



குச் சுதந்தரங்களை அளித்திருந்த போதிலும் அதை அவரவர்களுடைய முயற்சியினாலேயே அடைய வேண்டும். அப் பிறப்புரிமையைப் பெறத் தீர்மானித்துவிட்டோம் என்று அரசாங்கத்தார் அறிய, அதிகாரவர்க்கத்தினர் உணர, உலகத்தார் தெரிய நாம் பறை சாற்றவேண்டும். இவ்வுரிமையானது ஸ்திரீ புருடர் இருவருக்கும் பிறப்பினால் ஏற்பட்டது. இது நிரந்தரமானது. அவ் வுரிமைகளை நீங்கள் பெற்ற தீக்ஷணமே உங்களுக்கு எதிர் நின்று அதிகார வர்க்கத்தினராவது வேறெந்த அதிகார சக்தியினராவது தடுக்கமுடியாது. நாம்நம்மிடத்துள்ளே அழியாதிருக்கும் பிறப்புரிமையை எவ்வாற்றாலும் அடையமனோதிடத்துடன் தீர்மானித்துவிட்டோம் என்று அதிகாரவர்க்கத்தினர்கள் அறிய நாம் கூறுகிறோம். இத் தீர்மானத்தைக் கடவுள் நிறைவேற்றி வைப்பதுடன் இதன்படி நடந்து உரிமைகளையடைய எல்லாம்வல்ல கடவுள் நமக்கு சக்தியையும் தைரியத்தையும் அளிப்பாராக?

## V. மகா மறுப்பு

[1918-ம் வருடம் ஜூன் மாதம் 17-ந் தேதி சிட்டகாங்க் என்னும் ஊரில், சுய ஆட்சிச் சங்கத்தின் ஆதரவில் ஒரு மகாநாடு கூடிற்று. பாபு ஜாத்ர மோஹன்சேனர் அக்கிராசனம் வகித்தார். அவ்வமயம் ஸ்ரீயுத. சித்தரஞ்சனர் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு]

அக்கிராசனாதிபதியவர்களே! கனவான்களே!!

என்னுடைய நண்பர் கனம் வஸுலல் ஹக்

வெகு அழகாய்ப் பேசினதற்குப் பிறகு அவ்வழக்கைக் கெடுக்க என்னைப் பேச விடாமற்படியிருப்பீர்களென நான் நினைத்தேன். ஆனால் அக்கிராசனர் வார்த்தையைத் தட்ட முடியாதவனாய்ச் சில வார்த்தைகள் கூறி நானும் முடித்து விடுகிறேன். சுய ஆட்சியைப்பற்றிப் பல காரணங்களைக் கூறி என் நண்பர் ஜனாப் வஸுலல் ஹக் பிரசங்கித்தார். 'அவர் கூறிய வார்த்தை ஒவ்வொன்றும் உண்மையே. மகா மறுப்பு என்பதைப்பற்றி சில வார்த்தை கூற எனக்கு உத்திரவு கொடுப்பீர்களென நம்புகிறேன். நம்முடைய சிறப்பு வாய்ந்த அக்கிராசனர் நாம் பெரிய கஷ்டத்திலிருக்கிறோம் என்று ஒருநாள் கூறினார். நம் தாய் நாட்டுச் சரித்திரத்தில் நம் தற்கால கஷ்டத்தைப் போன்ற கடினம் எக்காலத்தும் இருந்திராது. பிரிட்டிஷ் அரசாட்சியில் நம் ஜாதீய சரித்திரத்தைப்பற்றிய விஷயங்களின் சம்பவங்களை மட்டும் நீங்கள் அறியுங்கள். 150 வருடம் பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டிலிருந்தும் நம் வங்காளத்தில் பெரும்பாலார் படிப்பில்லாதவர்களாகவே யிருக்கின்றனர். இதை ஒரு காரணமாகக் கொண்டு இந்தியா சுய ஆட்சி கொள்ள யோக்கியதை யற்றதென அதிகாரிகள் கூறுகின்றனர். இந்நாட்டில் பெரும்பாலார் படிப்பில்லாம லிருந்தால்—அது யாருடைய குற்றம்? இந்த நாட்டில் ஜனங்களுக்குக் கல்வியைப் பரவச் செய்யாதபடி 150 வருடகாலமாக அதிகாரிகள் என்ன செய்தார்கள்? இந்தக் குற்றத்திற்கு என்ன சால்ஜாப் அவர்கள் சொல்லப் போகிறார்கள். உலக சரித்திரத்தில் ஜாதீய சுய ஆட்சி கொண்ட நாடு ஆட்சி புரிந்த 30 வருடங்களுக்குள் கல்வியைத்



தாராளமாகப் பரவச் செய்யாமலிருந்த துண்டா? நமக்கு இன்று சுய ஆட்சி ஏற்படுமானால் நாம் 20 வருஷத்திற்குள் கல்வியை நாடெங்கும் பரவச்செய்ய மாட்டோமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன் இந்த அரசாங்கத்தார் செய்யாமலிருந்தார்கள்? அதிகார வர்க்கத்தினரே மறுமொழி கூறட்டும். மகா மறுப்பின் கதாரத்னத்தில் இதுவே முதல் அத்தியாயமாகும்.

நமது நாட்டில் விவசாயத்தைப்பற்றி நாம் ஆராய்வோம். இந்திய கிராம வாழ்க்கையானது உலகத்திற்கு ஒரு பொறாமையாகவே யிருந்தது. அவ்வளவு சீருஞ் சிறப்பும் பெற்ற கிராம வாழ்க்கையின் தற்கால நிலைமை என்ன? நம்முடைய விவசாயம் எந்த நிலைமையில் இன்று இருக்கிறது? கடந்த 150 வருட காலத்தில் விவசாயத்திற்காக அரசாங்கத்தார் ஏதாகிலுஞ் சரியாகச் செய்ததுண்டா? அகண்ட பூமியைக்கொண்டு ஆளும் இந்த அரசாங்கத்தின் மதிப்புக் கேற்றபடி ஏதாகிலுஞ் அவர்கள் செய்ததுண்டா? ஒன்றுமேயில்லை. ஏன்? நம் நாட்டின் விவசாயமானது அதிகார வர்க்கத்தினர்களுக்கு நேராக ஒரு சம்பந்தமுமில்லாமையே யாம். அதிகார வர்க்கத்தினர்களின் நன்மைக்காக, விவசாய இலாகா ஒன்று அங்கும் இங்கும் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவும் அவர்களுடைய சொந்த பிரயோசனத்தையொட்டித்தான் வைக்கப்பட்டது. அருமருந்து போல அரசாங்கத்தார் ஒன்றிரண்டு விவசாய கலாசாலைகளையும் ஸ்தாபித்தார்கள். கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டதினால் விவசாயத்திற்கு ஏதாகிலும் நன்மையுண்டா? அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகார வர்க்

கத்தினர்களுக்கு விவசாய விர்த்தியில் அக்கரையில்லாமலிருக்கலாம். ஆனால் நமக்கோ அப்படியிருத்தல் முடியாது. நமக்கு அது அத்தாவசியமானது. நம்முடைய ஜீவாதாரமானது. வங்காள விவசாயிகள் பண்டை காலத்தில் வசித்திருந்ததுபோல சுக வாழ்க்கையைக் கொண்டு வாழ வேண்டுவது நம் நாட்டு அபிவிர்த்திக்கு இன்றியமையாதது. ஸ்வராஜ்யம் வேண்டுமென்பவர்களுக்கும் இவ்விஷயம் மிகவும் முக்கியமானது. நாம் முன்னேக்க வேண்டும். இந்துக்கள், முகம்மதியர்கள் ஐக்கியப்பட்டு ஒரு சமூகமென முன் வருவதற்கும் அவ்விஷயமே ஆவசியமானது. ஜன சமூகத்தைப்பற்றிய நன்மைக்கும் அவ்விஷயமே சிறந்ததெனப்படும். ஜன சமூகம் எனப்படுவது யார்? நாம் மாத்திரம் அல்ல. கோர்ட்டுகளுக்குப் போய் வியாச்சியங்களை நடத்தும் வக்கீல்மார்கள், மாஜிஸ்ரேட்டுகள், நீதிபதிகள் ஆகிய இவர்கள் மட்டுமல்ல. ஆனால், பின்னர் யாரென்றாலோ நிலத்தை உழுது பயிரிடும் விவசாயிகளே ஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நாடும் ஒரு காலத்தில் கடவுளின் கிருபையால் மற்ற தேசங்களைப்போல முதன்மையாகுமானால், அது அந்த விவசாயிகளினாலேயேயாம். அதற்காக நாம் சும்மா யிருத்தல் ஆகாது. விவசாயம் விர்த்தியாக வேண்டும். இக்காரணம்பற்றித் தான் நாம் நமக்கு உடனே சுய ஆட்சி வேண்டுமென்று கேட்கின்றோம். மகா மறுப்பின் கதா ரத்னத்தில் இது இரண்டாவது அத்தியாய மாகும்.

கனவான்களே! நம்முடைய வியாபாரம், கைத்தொழில்களின் நிலைமை என்ன? நம் நாட்டின் வியாபாரச் சிறப்பைப்பற்றியும் கைத்தொழில்களின் விமரிசைகளைப்பற்றியும் அவைகள் எங்ஙனம் அழிந்தனவென்பதைப்பற்றியும் உங்களுக்கு ஞாபக மூட்டும்படியாக நான் இப்பொழுது [redacted] கூறப்போவதில்லை. போனதைப்பற்றி மீண்டும் பரிதவிப்பதழகல்ல. ஆனால், இப்பொழுது இருக்கும் வியாபாரம் கைத்தொழில்களைப்பற்றி என்ன? சமீபகாலமாக நம் நாட்டின் வர்த்தகத்தை விர்த்திசெய்யவும் கைத்தொழில்களைப் பெருக்கவும் அரசாங்கத்தார் என்ன செய்தார்கள்? இதுவே எங்கும் தற்கால கூக்குரல். இந்தத்துறையில் பரிகாரமாவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்ய இந்நாட்டின் கைத்தொழில்கள் எதிர்பார்க்கின்றன. அதிகாரவர்க்கத்தினர் இத்துறையில் ஏதாகிலுஞ் செய்ததுண்டா? ஒருநாட்டின் வியாபாரவிர்த்திக்கும் கைத்தொழில் பெருக்கத்திற்கும் பேருதவிசெய்து போற்றுதலே நாகரிகமுள்ள அரசாங்கத்தின் முதற்கடமையன்றோ? சத்தியமாக இந்த அதிகாரவர்க்கத்தினர் தங்கள் மார்பில் கைகளை வைத்துக்கொண்டு வர்த்தகத்திற்காக எல்லாஞ் செய்தோம் என்று சொல்ல முடியுமா? அதிகாரவர்க்கத்தினர் தங்களுக்கு ஏற்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார்களா! இல்லை—ஒரு நாளும் இல்லை. ஆகவே, இதுகாரணம்பற்றியேதான் நாம் இந்தியாவுக்கு சுய ஆட்சி வேண்டுமென்று வேண்டுகிறோம். மகாமறுப்பின் கதாரத்னத்தில் இதுவே மூன்றாவது அத்தியாயமாகும் நண்பர்களே! உங்களுக்கு அத்தாட்சியாக ஒன்று கூறுகிறேன். விவசாயத்தின் மூலமாக வங்காளத்தில் நிலவழியாக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அரசாங்கத்தார் வசூல் செய்கின்றனர். ஆனால் விவசாயத்திற்காகச் செலவிடுக்

தொகையோ 24 லட்சம் ரூபாய். அரசாங்கத்தார் மிகுதி தொகையை என்ன செய்கின்றார்கள்? சுய ஆட்சி வேண்டுமென்றவர்கள் ஜனப்பிரதிநிதிகளாகயிருக்க அருகர்களில்லையென்று அதிகாரவர்த்தினர் கூறுகின்றனர். அவர்களுக்காக இந்த அரசாங்கம் என்ன செய்தது? 24 லட்சம் ரூபாய் செலவு செய்தார்கள் அல்லது வீண்வினியோகஞ் செய்தார்கள் எனக் கூறலாம். இதுவே பரீட்சை. விவசாயத் துறையில் அபிவிர்த்தியில்லாமல் விவசாயத்திற்காக அதிக சம்பளங் கொடுத்து ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களை இந்த அரசாங்கத்தார் நியமிப்பதை நாம் அறிகிறோம். இம்மாதிரியாகத்தான் நம் நாட்டில் தினம் நடந்துவருகின்றது.

சுகாதாரத்தைப்பற்றி என்ன? கடந்த சில வருடங்களாக சுகாதாரமின்றி ஜனங்கள் எங்ஙனம் மாண்டார்களென்பதை உங்களுக்கு நான் தெரிவிக்கட்டுமா? இந்தப் புள்ளிகளைக் கேளுங்கள்.

1911–12–ம் வருடத்தில் மலேரியா சுரத்தில் மட்டும் 9-லட்சம் ஜனங்கள் மாண்டனர்.
1912–13– ,, $9\frac{1}{2}$-லட்சம் ஜனங்கள் மாண்டனர்.
1913–14– ,, $9\frac{3}{4}$-லட்சம் ஜனங்கள் மாண்டனர்.
1914–15– ,, $10\frac{3}{4}$-லட்சம் ஜனங்கள் மாண்டனர்.
1915–16– ,, $10\frac{3}{4}$-லட்சம் ஜனங்கள் மாண்டனர்.

ஐயா! 5-வ்ருடத்திற்குள் 50-லட்சம் ஜனங்கள் சுகாதாரமில்லாமையால் மாண்டனர். ஐக்கிய அரசாங்கத்திலும் ஐயர்லாந்திலும் இருக்கும் இராணுவத் தொகையைக்காட்டிலும் சற்று அதிகமான தொகை சுகாதாரக்குறைவினால் 5-வருடத்திற்குள் 50-லட்சம் ஜனங்கள் மாண்டனர். வைத்திய பரிசோதகர்களின்



அபிப்பிராயங்களும் சட்டசபைகளில் நம் பிரதிநிதிகளின் கேள்விகளும் ஆகிய இவையாவும் நம் நாட்டின் சுகாதாரவிர்த்திக்கு என்ன பலனைக் கொடுக்கும். அரசாங்கத்தார் உண்மையில் இந்த வியாதிகளைத் தொலைக்கவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு முன் வருவார்களானால் இந்த வியாதிகளும் மரணங்களும் இப்படியிருக்குமா? இந்த அரசாங்கமானது ஜாதீயமுறையில் ஏற்பட்டுவிட்டால் அல்லது ஸ்வராஜ்யமாக ஸ்தர்பிக்கப்பட்டுவிட்டால் இந்த வியாதிகளை இருந்த இடந் தெரியாமற் செய்துவிட நமக்கு அசாத்தியமா? ஜனசமூக விர்த்திக்கு சுகாதாரம் இன்றியமையாததன்றோ? ஒவ்வொரு வருடத்திலும் இவ்வளவு மரணவிகிதங்கள் என்றால் ஜனசமூகத்தின் பலமும் ஜீவாதாரமும் குறைகின்றதன்றோ? இம்மாதிரி இன்னுங் கொஞ்சகாலம் உண்டாகுமானால் நம்சமூகத்தின் இருப்பேபோய் மீண்டும் உயிர் தரித்து வாழமுடியாமற் போய்விடுமென்பதற்கு என்ன தடை? மலேரியாசுரத்தால் அடிபட்டுக்கொண்டு உயிரிருந்தும் உயிரில்லாத பாவனையாக வாழ்வதை நாம் காணவில்லையா? வங்காள முழுமையும் இத்தகைய ஜனங்கள் கணக்கின்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தார் என்ன பரிஹாரஞ் செய்தார்கள்? ஒன்றுமேயில்லை. ஆகவேதான் நாம் சுய ஆட்சி கேட்கின்றோம்.

கல்வியைப்பற்றிய சில புள்ளி விவரங்களை நான் கூறுகிறேன். இது உங்களுக்கு வெகு ஆச்சரியத்தைக் கொடுக்கும். வங்காளத்தில் மட்டும் அரசாங்கத்தார் கல்வியின் அபிவிர்த்திக்காக 85-லட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். வங்காளத்தின் ஜனத்

தொகையோ 450 லட்சம். ஒருவருடத்தில் 1 ரூபாயில் 5 பேர் கல்வி கற்றார்கள். கல்வியின் அபிவிர்த்திக்காக இக் காருண்ய அரசாங்கத்தார் வெகு தாராளமாக நபர் 1 க்கு ஒரு வருடத்தில் 3 அணா செலவு செய்கின்றார்கள். அதாவது மாதம் நபர் 1 க்கு காலணா. தாழ்ந்த நிலைமையில் இருக்கும் இந்தியர்களுக்குக் கல்வியைப் பரவச்செய்வதே இங்கிலாந்தின் பிரதம கடமை யென்று கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். அம் மூன்றணா கல்விக்காகவே செலவு செய்ததென நீங்கள் நினைக்காதீர்கள். கல்விச்சாலைகளின் கட்டிடங்களுக்கும் உபாத்தியாயர் சம்பளங்களுக்கும் பரீட்சகர்களின் சம்பளங்களுக்கும் சேர்ந்தே அம் மூன்றணா செலவு செய்யப்படுகின்றது. சுத்த கல்விக்காகமட்டும் எவ்வளவு செலவழிக்கப்படும் என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம். கல்வியைப்பற்றி அதிகாரவர்க்கத்தினர்களுக்கு என்ன அக்கறை. வியாபாரம், கைத்தொழில்களில் வெகு குறைவாகவே தான் அரசாங்கத்தார் செலவு செய்திருக்கின்றனர். இந்தியன் ஸிவில் சர்விஸ் உத்தியோகக் கூட்டத்திலிருக்கும் மிஸ்டர். ஜே. ஸ்வான் அவர்களுடைய அபிப்பிராயத்தை மட்டும் நான் இங்கு கூறுகிறேன். அவர் வங்காளத்தின் வியாபார கைத்தொழில் நிலைமையைப்பற்றி எழுதியுள்ளார். அதில், 'பொது ஜனங்களின் உற்சாகத்தாலும் திரவிய சதாயத்தாலுமே பொதுவாக மாகாணத்தின் கைத்தொழில் அபிவிர்த்தி யுண்டாகவேண்டுமென்பது உண்மையானாலும், அரசாங்கத்தார் இதுகாறும் இருந்தபடி யிராமல் இன்னும் அதிகமாக உதவி செய்ய முன்வரவேண்டும்' என்று கூறியுள்ளார்.



அரசாங்கத்தின் ஆதரவு பெரிதும் இருக்கவேண்டுமென்று கூறினதைவிட ஸிவில் சர்விஸ் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக என்ன சொல்லக்கூடும்? அவரே மீண்டும், 'இந்தியர்களுடைய பார்வையில் இந்தியர்களின் பணத்தைக்கொண்டு தொழில்கள் அபிவிர்த்தி யடையவேண்டுமானால் தக்க பணம்வேண்டும். இதற்கு பாங்கிகளும் கம்பெனிகளும் சரியாகக் கடன்கொடுக்க மனமில்லாமலிருக்கின்றன' என்றும் கூறினார். ஆகவே, தொழில் அபிவிர்த்தித் துறையில் வெகு சிறிதளவே செய்யப்பட்டன வென்பது நன்கு புலனாகும். இதுவே நம் நிலைமை. இம்மாதிரி பல வருடங்களாக நடந்துகொண்டே யிருக்கின்றது. நாம் தூங்கிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு வருடத்தின் முடிவில் காங்கிரஸ் மகாநாடு ஒன்றைக் கூட்டுவதும், அது முடிந்ததும் சும்மா யிருப்பதுமே சகஜமாகக் கொண்டு காலந்தள்ளி வந்தோம். ஆனால், 1905-ம் வருடத்திலிருந்தே நம் நாட்டில் சுதேசிய [illegible]யக்கம் தோன்றி விஷயங்கள் மாறின. அதுமுதற் [illegible]ண்டு அரசாங்கத்தார் இடைவிடாத அடக்கு[illegible]றைகளைத் தொடுத்து வந்தனர். இந்த அடக்குமுறைகளின் தாண்டவத்தினாலேயே வங்காளத்தில் [illegible] கட்சி யொன்று ஏற்பட்டது. அக் [illegible] தான் அரசாங்கத்தார். வெடிகுண்டு எறி[illegible] கலகக்கட்சி யென்றும் கூறுகின்றனர். ஆனால், வாஸ்தவத்தில் அவர்கள் இராஜ்யப் புரட்சிக்காரர்களே தவிர கலகக்காரர்களல்ல. அவர்கள் செய்த காரியம் நன்மையென்றாகிலும், அல்லது அத்தகைய காரியங்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டுமென்றாகிலும் நான் சொல்ல வரவில்லை. என்றாலும்

யான் அறிந்தமட்டில் அவர்கள் கலகக்காரர்களல்ல. எல்லா அரசாங்கத்தையுமே தொலைத்துவிட வேண்டுமென்கிற நோக்கம் அவர்களுக்கில்லை. ஆனால் தற்பொழுதுள்ள இந்த அரசாங்கத்தின் ஆட்சிமுறையை மட்டும் மாற்றவேண்டிய நோக்கத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் மகாசபை, முஸ்லீம் மகா சங்கம் இவைகளின் நோக்கமே தான் அவர்களின் நோக்கமென்றும், யாதொரு வித்தியாசமில்லையென்றும் யான் தெரிந்தமட்டில் தைரியமாகக் கூறுவேன். ஆனால் காங்கிரஸ் மகாசபை, முஸ்லீம் மகா சங்கம் இவைகளின் வழிக்கும் அவர்களின் வழிக்கும் வித்தியாசமுண்டு. நோக்கம் ஒன்றே. வழிமட்டும் வித்தியாசம். காங்கிரஸ், முஸ்லீம் சங்கங்களின் வழியானது சட்டத்திற்குட் பட்டதும் நியாயமானதுமாகும். ஆனால் அவர்களின் வழியோ சட்டத்தை மீறினதும் நியாய வரம்பு கடந்ததும் சமாதானமற்றதுமானது. அவர்கள் கொண்ட முறை சாலவும் கண்டிக்கத் தக்கது. ஆனால் அவர்களைக் கலகக்காரர்களென்று கூறுவது மட்டும் நியாயமானதன்று. எப்படியிருப்பினும் அடக்குமுறை ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்துவரத் தலைப்படவே வங்காளத்தில் இராஜ்யப் புரட்சிக்காரர்களின் கூட்டமொன்று ஏற்பட்டது. இராஜ்யப் புரட்சிக்காரர்களின் கூட்டமொன்று இருப்பதினாலேயே இந்தியா சுய ஆட்சிக்கு யோக்கியதையில்லையென்று கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். உண்மையில், புரட்சிக்காரர்களின் கூட்டமொன்றுண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால், இந்தப் புரட்சிக்காரர்களின் கூட்-



டத்தை யடக்க ஸ்வராஜ்ய மொன்றினாலேயே முடியுமல்லாது வேறு புறநாட்டு அரசாங்கத்தினால் ஆகாதென்பது என்னுடைய ஆழ்ந்த அபிப்பிராயம். ஐயா! இவர்கள் வேண்டுவது தான் என்ன? அவர்கள் வேண்டுவது சுதந்தரம். அவர்கள் இந்த அரசாங்கத்தின் முறைமையை மாற்ற வேண்டுமென்கிறார்கள். இதைத் தான் காங்கிரஸ் மகாசபையும் முஸ்லீம் மகா சங்கமும் தனித்தனியே கூறுகின்றது. அவர்களுடைய முறைமையைப்பற்றி நான் இங்கு கூறவரவில்லை. ஆனால், அவர்களுடைய நோக்கத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மந்திராலோசனை சபையே சரியென ஒத்துக்கொண்டிருக்கின்றது. சென்ற வருடம் ஆகஸ்டு மாதத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மந்திராலோசனை சபையாரே இந்தியாவுக்கு ஒருவித ஜவாப்தாரித்துவமான அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். அதின் அர்த்தமென்ன? இப்பொழுதுள்ள அரசாங்க நிர்வாகமானது அதிகார வர்க்கத்தைச் சேர்ந்ததாக யிருப்பதினால் இந்தியாவின் நன்மைக்காக அதை மாற்றவேண்டுமென்கிற உணர்ச்சி நம் எஜமானர்களாகக் கருதப்படுகின்ற பார்லிமெண்ட் மந்திராலோசனை சபையினருக்கே தோன்றி யிருக்கிறது. ஆகவே, கலகக்காரர்களின் நோக்கமும் இதுதான். ஆனால் கலகம் ஒழிய வேண்டுமானால், கலகக்காரர்கள் இல்லாமலிருக்க வேண்டுமானால், ஜனங்களுக்கு அவர்களுடைய பிறப்புரிமையான சுதந்தரத்தை உடனே கொடுத்துவிட வேண்டும். சுதந்தரம் கொடுத்துவிட்டால் கலகம் யாவும் ஒடுங்கிப் போய்விடும். இதைப்பற்றிப் பன்முறை நாம் கூறியும் அதிகார

வர்க்கத்தினர் செவி சாய்த்தார்களில்லை. நமது விவ
சாயம் அபிவிர்த்தி யடையவில்லை. கல்வியைக்
கவனிக்கவில்லை. சுகாதாரம் சீர்திருத்தவில்லை. தொழி
லும் வர்த்தகமும் கவனிக்கப்படவில்லை. இதுவே நம்
தற்கால நிலைமை. இதை யுணர்ந்தே பார்லிமெண்ட்
மந்திராலோசனை சபையார் சென்ற வருடம் ஆகஸ்டு
மாதம் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவர்க
ளுடைய விளம்பர அறிக்கை ஒரு வழியாகவும்
நடத்தை மற்றொரு வழியாகவும் போகிறது. இதுவே
ஜனங்களின் குறை. 'இந்தியர்கள் ஸ்வராஜ்யத்
திற்கு யோக்கியதை யற்றவர்கள், நாங்கள் சுய
ஆட்சி கொடுக்க மாட்டோம்' என்று வெளிப்
படையாக ஏன் அவர்கள் நம்மிடம் சொல்லிவிடக்
கூடாது? அத்தகைய மனோ பாவத்தை யான்
அறிவேன். வெளிப்படையாகப் பேசுவதை யாவ
ரும் மெச்சுவார்கள். பொறுப்புள்ள அரசாங்க
நிர்வாகத்தைக் கொடுக்க முடியாது. இந்த அதி
காரவர்க்கத்தின் ஆட்சி முறையைத்தான் கொடுக்க
முடியுமென்று பஹிரங்கமாகச் சொல்லி விடலாம்.
அதை விட்டுவிட்டு விளையாட்டாக அங்கு கொஞ்
சம் சீர்திருத்தம் கொடுப்பது, இங்கு கொஞ்சம்
சீர்திருத்தங் கொடுப்பதாகச் சொல்வது ஆகிய
இந்த தந்திரங்கள் என்ன? அவர்கள் ஆகஸ்டுமாதம்
அறிவித்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு
இனி நம் நாட்டிற்கு எம்மாதிரியான சுயஆட்சி
வேண்டுமென்கிற திட்டத்தை ஏற்படுத்த மகாநாடு
கள் கூட்டியும் ஆலோசனை செய்கின்றோம். இந்
நிலைமை இம்மாதிரியாக யிருக்கையில், பிரிட்டிஷ்
ஏகாதிபத்தியத்தின் பிரதமமந்திரி இங்கிலாந்துக்கு



ஏற்பட்ட கஷ்டத்தை நிவர்த்திக்க உதவி புரிய
வேண்டுமென்று கேட்டவுடன், உடனே இந்தியா
வில் நாமனைவரும் ஒன்றுசேர்ந்துப் பலவிதத்தில்
உதவி புரிந்தோம். நாட்டின் அடக்கு முறைகளை
எடுத்துவிடுங்கள். இராஜீய குற்றவாளிகளை மீட்சி
செய்யுங்கள் - என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்
தோம். அதிகாரவர்க்கத்தினர் கவனிக்காமலேயிருந்த
னர். நிற்க, டில்லிமாநகரில் இராஜப்பிரதிநிதி மத்
திய ஆசியாவில் ஜெர்மெனியர்களால் தூண்டப்பட்ட
ஒரு சூழ்ச்சியால் இந்தியாவிற்குப் பெரிய ஆபத்து
ஏற்படக்கூடுமென்றும் கூறி அதற்குதவி செய்ய
வேண்டுமென்றார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்
பிரதமமந்திரி அனுப்பின செய்தியைக்கொண்டு இரா
ஜப்பிரதிநிதி பிரசங்கஞ் செய்தார். நாம் பிரிட்டிஷ்
ஏகாதிபத்தியத்தின் நன்மைக்கும் இந்திய அரசாங்
கத்தின் நன்மைக்கும் அதிகாரவர்க்கத்தின் நன்மைக்
கும் பன்முறை உள்ள நிலைமையை யுள்ளபடி எடுத்
துக் கூறினோம். அபாயத்தைப்பற்றி மொழிந்தோம்.
அதற்குப் பரிகாரத்தையுஞ் சொன்னோம். வைஸ்
ராய் அதைத் துச்சமாகக்கொண்டார். பிரதமமந்
திரியும் இராஜ்ய விஷயமாக இந்த சந்தர்ப்பத்தில்
ஒன்றையுங் கேட்கக் கூடாதென்றார். உண்மை
யாகவே இங்கிலாந்து இப்பொழுது என்ன செய்கின்
றது? இந்தயுத்தத்தில் இந்தியாவுக்கு இருக்கவேண்
டிய அக்கரை என்ன? இந்தயுத்தத்தில் நாம் உதவி
புரியவேண்டுமென்றார். ஏன் இங்கிலாந்துக்கு நாம்
உதவிபுரியவேண்டும்? நாம் இங்கிலாந்துக்கு உதவி
புரிவதாயிருந்தால் இந்நாடு நம்முடைய தென்றெண்
ணும் உணர்ச்சி நமக்கிருக்கவேண்டும். இந்தியாவுக்கு

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் தக்க பெரிய ஸ்தானமொன்று உண்டா இல்லையா வென்ற கேள்வி பிறக்கக்கூடும். இந் நாடு நம்முடையதென்றால், அரசாங்கத்தார் உடனே 'உங்கள் நாட்டை நீங்களே பார்த்துக்கொண்டும் காப்பாற்றிக் கொண்டு மிருங்கள்' என்று ஏன் கூறக்கூடாது. நாம் கூறுவதெல்லாம் இந்த நாடு நம்முடையது என்று உணர்வதே. இந்த நாடு நம்முதடயதல்ல வென்றால் இதைப்பற்றிய விசாரம் நமக்கேன்? எந்த ஆபத்துவந்தால் என்ன? எப்படிப்போனால் தான் என்ன? வங்காள கவர்னரும் இராஜப்பிரதிநிதி கூறினபடியே வெகு சாதுரியமாய்க் கூறினார். 'ஜர்மன் சக்கரவர்த்தி கெய்லர் கல்கத்தாவுக்கு வந்துவிட்டால் பிறப்புரிமை, வாக்கு சுதந்தரம், நடமாடுஞ் சுதந்தரம், சொத்து பந்தோபஸ்து, ஆகிய இப்பேச்சுகள் என்னவாகும்' என்று வங்காள கவர்னர் கூறினார். இந்த ஒரு சங்கதியில் அவருடன் நாமும் ஒற்றுமைப்படுகிறோம். மேற் கூறிய ஜீவாதாரமான உரிமைகளைப்பற்றியே தான் கெய்லர் கல்கத்தாவுக்கு வரவொட்டாமல் தடுக்க நாம் எத்தனிக்கிறோம். இது காரணம்பற்றியே தான் நமது தலைவர்கள் அடிக்கடி அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்கின்றனர். இது காரணம்பற்றியே தான் இந்தியாவில் அடக்குமுறைகளைக் களைந்துவிடுங்கள் என்கிறோம். இது செய்தால் கெய்ஸரை வரவொட்டாமல் தடுக்க 30கோடி ஜனத்தொகை கொண்ட இந்திய சமூகம் ஒன்று சேரும். ஆகவே, வீண் வார்த்தைகளாடுவதில் ஒன்றும் பிரயோசனமில்லை. கடைசியாக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு நான் கூறுவதென்னவெனில், ஜனங்களுடைய பிறப்புரிமையைத் தடுக்கா



தீர்கள். அவர்களுடைய லட்சியத்தைக் காப்பாற்றுங்கள். பொதுஜன சம்மதமின்றி ஒன்றையுஞ் செய்யாதீர்கள். ஜனங்களுடைய இராஜ விஸ்வாஸத்தினாலே தான் அரசாங்கம் பலப்படவேண்டும். இதை அரசாங்கத்தார் நன்கு அறியவேண்டும். நம்முடைய மனோரதம் நிறைவேறும்படி பகவான் நமக்கு அருள்புரிவாராக!

## VI. சிறைகாப்பைப்பற்றிய கண்டனம்

[1918-ம் வருடம் மார்ச்சு மாதம் 5-ந் தேதியன்று கல்கத்தா நகர் டவுன் ஹாலில் கல்கத்தா வாசிகளின் பெயரால் ஒரு மகாநாடு கூடிற்று. மகாநாட்டிற்கு ஸ்ரீயுத் வ்யோமகேஷ் சக்கரவர்த்தி அக்கிராசனம் வகித்தார். அவ்வமயம் ஸ்ரீயுத. சித்தரஞ்சன தாஸ் பின்வருமாறு பேசினார்.]

அக்கிராசனாதிபதியவர்களே! ஸ்ரீமான்களே!! ஸ்ரீமாட்டிகளே!!! அநீதியாயும் குரூரமாயும் ஏற்படுத்தப்பட்ட இந்த சட்டத்தைக் கண்டனஞ் செய்ய எனக்கு ஒரு பொறுப்பு கொடுத்ததைப்பற்றி நான் உங்களுக்கு வந்தனஞ் செலுத்துகிறேன். இந்த சட்டத்தைப்பற்றிய அபிப்பிராயத்தை உங்கள் மனதிற் படும்படி செய்ய மேற்கோள்கள் வேண்டுமென்று நாம் நினைக்கவில்லை. அக்கிராசனர் ஏற்கனவே அவருடைய முகவுரையில் இந்த சட்டத்தின் மாதிரியைப் பற்றி பசுமரத்திலடித்த ஆணிபோற் பதியும்படி வெகு தெளிவாயும் தீர்க்கமாயும் உங்களுக்கு எடுத்துக் கூறிவிட்டார். பிறகு யான் சொல்லவேண்டுவது ஒன்றுமில்லை. அரசாங்கத்தார் சொல்லும் கார

ணங்களை வைத்துக்கொண்டு நாம் பார்த்தபோதிலும்
அடக்குமுறை நடத்த ஒருவித சந்தர்ப்பமும் ஏற்பட்டு
விட்டதாகக் காணப்படவில்லை. சிறைப்பட்டவர்கள்
குற்றஞ் செய்தார்களென்ற ருசு இருக்கவேண்டும்.
ருசு இருந்தால் அவர்களைக் கோர்ட்டு முன்பாக
நிறுத்தி குற்றப்பத்திரம் படித்து விசாரணை நடத்த
வேண்டும். குற்றஞ் செய்தார்களென்ற ருசு சரியாக
அகப்படவில்லையென்றால் அவர்களைச் சிறைப்படுத்தக்
கூடாது. ஜனங்கள் இதனால் அரசாங்கத்தின் பேரில்
ஒருவித துர் அபிப்பிராயங் கொண்டு நம்பிக்கை
யற்றவர்களாக யிருக்கின்றனர். ஆகவே, அரசாங்
கத்தை ஒருவரும் நம்புவதில்லை. கவர்ன்மெண்டா
ருக்கு ருசுக்கள் இருந்தும் அவர்களை விசாரணையின்றி
சிறைப்படுத்துகிறார்களென்ற எண்ணம் குடிகளுக்
குள்ளே பரவுமானால் அது அரசாங்கத்திற்குக் கெடுதி
யாகவே யிருக்கும். அரசாங்கத்தாருக்கு ருசுக்கள்
ஒன்றுமில்லை. ருசுக்கள் இல்லாததினாலேயே விசா
ரணையின்றி அநியாயமாகச் சிறைப்படுத்தினார்கள்
என்ற அபவாதம் உண்டானால் அது அரசாங்கத்திற்
குப் பெரிய குறைவென்பதற்கும் ஐயமேயில்லை.

சட்ட நிரூபணத்தைப் பற்றிய வாதத்தில்
எனக்கு என்றும் நம்பிக்கையே கிடையாது. இந்த
முறை நீதியா அநீதியா! அநீதியானால் சட்ட புத்த
கத்திலேயே இந்த சட்டமுறை யிருக்க வாயக்கே
யில்லை. அக்கிராசனர் கூறினபடி இந்த சட்டத்
திற்கு, 'சட்டமில்லாத சட்டம்' என்று கூறல் ஒக்கும்.
அவர் கூறின இந்த வார்த்தையின் உட்கருத்தை நீங்
கள் அறியவேண்டும். சட்டமில்லாத சட்டம் என்
றால் என்ன? நீதியைப்பற்றி யில்லாத ஒரு சட்டம்,



சமூகத்தின் விர்த்திக்கும் பலத்திற்கும் காரணமா
யிருக்கும் நீதியின் ஸ்வரூபமற்ற ஒருசட்டம். இயற்கை
யாகவே சட்டமில்லாத சட்டமாகத்தா னிருக்க
வேண்டும். சட்டம் என்ற பெயரைக்கொண்டு சட்ட
மொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அது நீதியைக்
கடந்து போனதினால் அது சட்டமாகமாட்டாது.
ஆதலாற்றான் அதற்குச் சட்டமில்லாத சட்டம் எனப்
படும். இது காரணம்பற்றியே அச் சட்டத்தைக்
கண்டனஞ் செய்கின்றோம். அது மனிதன் இயற்
கைச் சுதந்தரத்தின் தன்மையைக் கெடுக்கிறது.
ஒரு மனிதனை விசாரணையின்றி என்ன குற்றஞ் செய்
தான் என்று தெரிவிக்காமல் சிறைப்படுத்தி அவன்
பிறப்புரிமையைப் பறிப்பதே சட்டமில்லாத சட்டத்
தின் ஸ்வரூபமாகும். இந்த, சட்டத்தைப்பற்றிய
விவரங்களை நீங்கள் சரியாக அறிந்திருக்க மாட்டீர்
கள். அதற்கு 'இந்திய பாதுகாப்புச் சட்டம்' என்று
பெயர். அந்த சட்டமானது பொது ஜன சாவ
தானத்தைக் காப்பாற்றுவதற்கென்று ஏற்பட்டது.
ஆனால், பொது ஜன சாவதானம் என்பதென்ன?
அதைப்பற்றி அவர்கள் எங்கும் கூறவில்லை. அது
பயனற்ற பொதுப்படையான வார்த்தை. ஜனங்கள்
அதைக் கண்டனஞ் செய்கின்றனர். ஜனங்கள் அதை
வேண்டாம் என்கிறார்கள். இருந்தும் பலவந்தமாக
ஜனங்களின் மீது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.
இந்த சட்டமானது சகிக்கமுடியாத அநீதியையும்
அதர்மத்தையும்பற்றி நிற்கிறது. இந்த சட்டமானது
சில உத்தியோகஸ்தர்களுக்குப் பலத்த அதிகாரத்
தைக்கொடுக்கிறது. பொதுஜன சாவதானத்திற்குப்
பாதகமாய் நடந்தானென்றோ அல்லது நடக்கிற

னென்றோ அல்லது நடப்பதாக உத்தேசித்திருக்கிறு னென்றோ அதிகாரிகளுடைய எண்ணத்தில் சந்தேகப்படும்படியான காரணங்களோ அல்லது முகாந்தரமோ ஏற்படுமானல் அதிகாரிகள் அப்படிப்பட்டவர்களை ஒரு இடத்தில் இருக்கக்கூடாதென்றோ அல்லது அந்த ஊரைவிட்டுப் போகவேண்டுமென்றோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் தான் வசிக்கவேண்டுமென்றோ அல்லது அவ்விடத்தைவிட்டுப் போகக்கூடாதென்றோ என்னும் காரணங்களைக் கொண்ட தடை உத்திரவுகள் பல இம்மாதிரி பிறப்பிக்கலாம். இத்தகைய வார்த்தைகளமைக்கப்பட்டச் சட்டத்திற்குத் தான் இந்திய பாதுகாப்புச் சட்டம் என்பார். வார்த்தைகளைமட்டும் பார்க்கையில் அவ்வளவு பாதகமா யிருப்பதாகத் தெரியவில்லை. ஆனல் நடவடிக்கையில் வெகு பயங்கரமாகவே யிருக்கின்றது. இந்த சட்டம் பிறந்தகாலத்தில் இம்மாதிரியான நிலைமை யேற்படுமென்று நம்மில் எவ்வேனும் நினைத்ததுண்டா? தாய் தகப்பன்மார்களி னின்றும் நல்ல வாலிபர்களைப் பிரித்து இரவென்றும் பகலென்றுங் கருதாமல் மாதக்கணக்காகக் காராக்கிரகத்திலிட்டு அவஸ்தைப்படுத்துவார்களென்று நாம் உண்மையில் இந்த சட்டம் பிறந்தகாலத்தில் நினைத்ததுண்டா? இல்லவே யில்லை. இந்த சட்டத்தைப் பிறப்பித்தவர்களின் மனேபாவம் அக்காலத்தில் இதுதானே? யுத்த காலத்தில், எதிரிகளினுடைய படைகள் நம் வாயிற்படியண்டை வந்துவிட்டால் அக்காலத்தில் நாட்டின் தற்காப்புக்தாகவும் உள்நாட்டு சமாதானத்திற்காகவும் இம்மாதிரியான சட்டம் பிறப்பிப்பதுண்டு. தாய்மார்களி னின்றும் பிள்ளைகளைப் பிரித்துச் சிறைசி



விடுவதற்குப் பிறந்ததாகவன்றோ இன்று அது காணப்படுகின்றது. இத்தகைய நீதிமுறைக்கு வாதமென்ன பயன்? தர்மம் என்ன பயன்? இத்தகைய நீதிமுறையை மாற்றுவதன்றோ நம் கடமை? லார்ட் மார்லி யவர்களே கொடுங்கோன் முறையென்று கூறவில்லையா? சமூகத்தின் சமாதான வாழ்க்கையை நிலை நிறுத்த சட்டம் இன்றியமையாதது தான். ஆனல் இதுபோன்ற சட்டத்தினலல்ல. இந்த சட்டத்தைக் காட்டிலும் அநீதியானதும் அதர்மமானதுமான சட்டம் உலகில் வேறென்றுண்டோ? மாற்றான் படையெழுச்சியினின்றும் இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக இந்த சட்டம் ஏற்படுத்தப்பட்டதல்ல. வங்காளத்தைக் காப்பாற்றுவதற்காக இந்த சட்டம் ஏற்படுத்தப்பட்டதல்ல. ஜனங்களைப் பலவகையிலும் துன்புறுத்தும் இந்த சட்டத்தினல், அரசாங்கமானது நீதிமுறை தவறி கொடுங்கோன் முறையைப் பற்றி பிரஜைகளின் ஜீவாதாரமான உரிமைகளை யழிப்பதற்காக எத்தனிக்கிறது என்று ஜனங்கள் விபரீதமாக எண்ணுவார்களன்றோ?

இத்தகைய முறையை உலகத்திலுள்ள எந்த அதிகார வர்க்கத்தினரும் செய்யத் துணியமாட்டார்கள். இம்மாதிரியான முறையானது 1905-ம் வருடத்திலேயே அதிகார வர்க்கத்தினர் செய்யத் துணிந்தார்கள். அக்காலத்தில் பல உத்திரவுகள் பிறந்தன. கல்லூரி மாணவர்களைப் பொதுக் கூட்டத்தினின்றும் தடுக்க பல தடை உத்திரவுகளும் பிறந்தன. வந்தேமாதரம் வீதிகளில் முழங்கக் கூடாதென உத்திரவுகள் பிறந்தன. இம்மாதிரியான தடை உத்திரவுகளால் வளரும் ஜாதிய உணர்ச்

சியை அழிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டதென பலர் அபிப்பிராயப்பட்டனர். இம்மாதிரியான அநீதிகளால் துன்புறும் பிரஜைகளின்மீது கோபிக்கலாமாவென்று நான் அரசாங்கத்தாரைக் கேட்கின்றேன். இந்நாட்டு ஸ்திரமான பிரஜைகளாகிய நாம் நம்முடைய எதிர்கால சமாதான வாழ்க்கைக்காக இந்த பாதுகாப்புச் சட்டத்தை நாம் கண்டனம் செய்கின்றோம். எந்த காரணத்தை உத்தேசித்து அரசாங்கத்தார் இந்த சட்டத்தைப் பிறப்பித்தாரோ, அந்த உத்தேச நிலையில் சட்டம் உபயோகிக்கப்படவில்லை. அரசாங்கத்தார் சொல்வதென்ன? இந்த நாட்டில் ராஜ்யப் புரட்சியின் இயக்கம் இருக்கிறதென்று அரசாங்கத்தார் கூறுகின்றனர். அதை நான் நம்புகின்றேன். உண்மையாகவே வங்காளத்தில் அத்தகைய கூட்டமொன்று இருக்கிறதென்பதை நான் அறிவேன். ஆனால் இருந்தாலென்ன? இம்மாதிரியான சட்டப் பிரயோகங்களினால் அரசாங்கத்தார் அப்புரட்சியை அழிக்க முடியுமா? அநீதியான சட்டங்களினால் ராஜ்யப் புரட்சியின் இயக்கத்தை தடுக்கப்பட்டதென நாம் உலக சரித்திரத்தில் படித்திருக்கிறோமா? அநீதி சட்டங்களினால் இம்மாதிரியான இயக்கத்தை அரசாங்கத்தார் அழித்து சமாதானப்படுத்தினார்கள் என்ற ஓர் உதாரணம் சரித்திரத்தில் காட்டமுடியுமா? அந்த இயக்கமானது மிகவும் குரூரமானது என்பதை நான் நன்றாக உணர்வேன். இராஜ்யப் புரட்சிக்காருடைய இயக்கத்தை நமது நாட்டில் வேரறக் களையவேண்டியதுண்மையே. ஆனால் அரசாங்கத்தினுடைய கடமை என்ன?



இத்தகைய இயக்கத்தின் காரணத்தைக் கண்டுபிடித்து சாந்தியாக சமாதானத்தை நிலைபெறச் செய்யக்கூடிய வழியைத் தேடவேண்டுவது அரசாங்கத்தின் முதல் தர்மமன்றோ. இந்த நாட்டில் வேறொரு அன்னிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று இந்த ராஜ்யப் புரட்சியின் இயக்கத்தார் கருதுகிறார்களென்று இந்த அரசாங்கத்தார் உண்மையில் கூறமுடியுமா? உண்மையில் அவ்வியக்கத்தார் அங்ஙனம் கருதுவதில்லை. உண்மையில் அவர்கள் கருதுவதென்ன? 1905-ம் வருஷ முதற்கொண்டு இன்றுவரையில் அடக்குமுறைச் சட்டங்கள் ஒன்றன்பின்னொன்றாய் அரசாங்கத்தார் உண்டாக்கினதின் காரணமென்ன? ராஜ்யப் புரட்சியின் இயக்கத்தாருடைய உண்மை நிலையையும் அவர்களுடைய லட்சியங்களையும் அதற்குக் காரணமாய் இருக்கும் வழிகளையும் அரசாங்கத்தார் நாளது பரியந்தம் ஆராய்ச்சி செய்தார்களில்லை. அவ்வியக்கத்தார்களைப் பற்றி யான் அறிந்ததுபோல் மற்றெவரும் அவ்வளவு அறிந்திருக்க முடியாது. அவர்களுடைய குற்றங்களுக்காக ஏற்பட்ட விசாரணையில் அவர்களுக்காக யான் நீதி மன்றத்தில் பலவாறு வாதாடியிருக்கின்றேன். ஆதலால் இவ்வியக்கத்தாரின் மனதை யான் நன்கறிவேன். பிறப்புரிமையைப் பெற்ற சுதந்தரத்தை ஸ்தாபிப்பதே அன்னவர்களுடைய கொள்கையாகும். 150 வருஷ அரசாட்சியில் ஜனங்கள் ஸ்வயாதீனத்துடன் வாழ்வதற்கும் ஸ்வதந்தரத்துடன் நடமாடுவதற்கும் இந்த அரசாங்கத்தார் என்ன செய்தார்கள். நாம் சுயஆட்சிக்குத் தகுதியுடையவர்களல்லர் என அரசாங்கத்தார் கூறுவதைப்

பன்முறை கேட்டிருக்கின்றோம். நமது நாட்டில்
படிப்பாளிகள் குறைவென்றும் படிப்பில்லாதவர்கள்
வெகு அதிகமென்றும் இவர்கள் கூறுவதையும் நாம்
கேட்டிருக்கின்றோம். ஐயா, 150 வருடகாலமாக
நல்லெண்ணத்துடன் இந்தியாவுக்கு சுய ஆட்சி
கொடுக்க வேண்டுமென்ற உணர்ச்சியுடன் இருக்
கிறார்களே அவர்கள் கல்விக்காக என்ன செய்தார்
கள்? அவர்கள் ஒன்றும் செய்யாமலிருப்பதேன்?
மேற்கூறிய காரணங்களினின்றே ராஜ்யப்புரட்சியின்
இயக்கம் தோன்றிற்று.

உலகத்தில் ஒவ்வொரு பாகங்களிலும் ஒவ்
வொரு ஜாதியாரும் சுதந்தரவாளியாக இருக்கிறார்க
ளென்பதை நம் படித்த வாலிபர்கள் அறிந்தார்கள்.
அவர்கள் தங்களுடைய நிலைமையையும் இதர தேசத்
தவர்களுடைய நிலைமையையும் ஆராய்ச்சி செய்தார்
கள். ஆராய்ச்சி செய்தபிறகு "என் நாம் மாத்திரம்
இந்நாட்டில் இம்மாதிரியான தாழ்ந்த நிலைமையில்
இருக்கவேண்டும். நாமும் சுதந்தரத்துக்காகப் பாடு
படவேண்டும்" என மனோ உறுதிகொண்டார்கள்.
இம்மாதிரி எண்ணுவது குற்றமா? அவருடைய நிலை
மையை அறிவது ஒரு பெரிய கஷ்டமுமாமோ?
நாமெல்லோருமே சுதந்தரத்துடன் இருக்க வேண்டு
மென்ற உணர்ச்சி நமக்குள் உண்டாகவில்லையா. நாட்
டின் அபிவிருத்தியைப் பலப்படுத்துவதற்குப்போதிய
சந்தர்ப்பமும் பொறுப்பும் இந்த அரசாங்கத்தார்
கொடுக்கவில்லை என்று கொண்டே தீவிர ஜாதிய
உணர்ச்சியையும் தேசாபிமானத்தையும் கொண்ட
இந்த வாலிபர்கள் இப்புரட்சி இயக்கத்தில் இறங்
கினார்கள். நாட்டின் அபிவிருத்திக்குரிய பொறுப்பும்



சந்தர்ப்பமும் அவர்களுக்கு இன்று கொடுபடுமானால்
ராஜ்யப்புரட்சி இயக்கம் இன்றே இருந்தவிடந்
தெரியாமற் போய்விடு மென்பதற்கு ஐயமே
யில்லை. ஜனங்களுக்கு அவர்களுக்குரிய உரிமையைக்
கொடுத்து "இனி இந்த அரசாங்கம் ஜனங்களினால்,
ஜனங்களின் பொருட்டு ஜனங்களுக்காக ஆட்சி செய்
யப்படும்" என்று அரசாங்கத்தார் முன்வந்து கூறு
வார்களானால் நாட்டில் கலவரங்களும் புரட்சிகளும்
இருக்கவே மாட்டா. இப்படி அரசாங்கத்தார்
செய்ய முன்வந்தால் ராஜ்யப்புரட்சி இயக்கம் சூரி
யனைக்கண்ட பனிபோல் நீங்கும் என்பதற்கு நான்
உத்தரவாதம் செய்வேன். இதையே பன்முறை நமது
நாட்டில் தலைவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் அர
சாங்கத்தார் காது கொடுத்துக் கேட்டார்களில்லை.
அதற்குப் பதிலாக நாட்டில் சமாதானத்தை ஸ்தா
பிப்பதற்கு இந்திய பாதுகாப்புச் சட்டமே வேண்டு
மென அச்சட்டத்தைப் பிறப்பித்தார்கள். இந்த
சட்டம் எற்பட்ட நாள் தொடங்கி இராஜீய குற்றங்
கள் குறைந்து வருகின்றனவென்று அரசாங்கத்தார்
கூறுகின்றனர். அதிருப்தி விருத்தியாகி வருகையில்
இராஜீய குற்றங்கள் எங்ஙனம் குறையும்? ராஜ்யப்
புரட்சிக்காரர்கள் இன்று உள்ளடங்கி இருக்கலாம்.
ஆனால் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறை
படுகின்ற நபர்களிடமிருந்து தேசமெங்கும் அதிருப்தி
யும் ராஜ நிந்தனையும் உள்ளுக்குள்ளே கொழுந்து
விட்டு எரிகிறதென்பதை இவர்கள் அறியார்கள்
போலும். இது அவ்வியக்கத்தாரைப் பலப்படுத்த
வில்லையா? இதுவன்றோ உண்மையான கெடுதி. இது
வன்றோ அபாயத்துக் கறிகுறி. விஷம் எறிரத்தத்தை

கெடச் செய்வதுபோல் நம் ஜாதிய உணர்ச்சியின் வேரை அழிப்பதன்றோ இச்சட்டம்? நம்முடைய சுதந்தரத்துக்கு இந்த சட்டம் தடையாயிருப்பதெனக்கொண்டு நான் இதைக் கண்டனம் செய்கிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு நாம் காட்டும் பரம விசுவாசத்தை அழிப்பதற்கு வந்த சட்டமெனக்கொண்டு நான் இதைக் கண்டனம் செய்கிறேன். இந்த சட்டத்தை அரசாங்கத்தார் ஒருபொழுதும் ரத்துசெய்யவே மாட்டார்கள் என்ற அபிப்பிராயத்துடன் பலர் நம் நாட்டில் இருக்கின்றனர். ஆகையால் நண்பர்களே, அதன்பொருட்டு மனக்கிலேசம் அடையாதீர்கள். இந்நாட்டு ஸ்திரமான குடித்தனக்காரர்களாகிய நாம் ஒன்றுபட்டு ஒரு மனதுடன் நாடெங்கும் கண்டனம்செய்து இச்சட்டம் ரத்துசெய்யப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்வோமானால் நம் கிளர்ச்சிக்குமுன் அரசாங்கத்தார் அடிபணிந்து இச்சட்டத்தை ரத்து செய்யாமல் இருக்கமுடியாது. இக்கிளர்ச்சியின் ஒலிப்பு நாடு நகரங்களிலும் கிராம குக்கிராமங்களிலும் பரவட்டும். இந்த சட்டம் ரத்துசெய்யப்பட வேண்டுமென்று நாம் அனைவரும் எல்லாம்வல்ல கடவுளைப் பிரார்த்திப்போமாக!

---

## VII. பாரிஸால் நகரில் கூடின சுய ஆட்சி மகாநாடு

---

[1917-ம் வருடம் அக்டோபர்மாதம் 14-ந் தேதி பாரிஸால் நகரில் இராஜா பகதூர் அரண்மனை மைதானத்தில் பாபு நிபரன் சந்திரதாஸ் குப்தா அவர்களின்



அக்கிராசனத்தின் கீழ் கூடிய ஒரு பெரிய மகாநாட்டில் ஸ்ரீயுத. சித்தரஞ்சனதாஸர் பின்வருமாறு பேசினார்.]

அக்கிராசனாதிபதியவர்களே! கனவான்களே!!
நீங்கள் வெகு உற்சாகத்துடன் சிறப்பித்து என்னைப்
புகழ்ந்தீர்கள். அத்தகைய சிறப்புக்கும் புகழ்ச்சிக்
கும் யான் தகுதியற்றவன் இல்லை. என்றாலும் நீங்கள்
நம்முடைய கீழ்நாட்டுச் சம்பிரதாயத்தைக் கொண்டு
புகழ்படக் கூறினதினால் அதைப்பற்றி யான் ஒன்
றும் பேசாது என் பிரசங்கத்தை ஆரம்பிக்கிறேன்.
நண்பர்களே! நான் உங்கள் முன்பாக நிற்கும்
பொழுது நான் ஒரு புனித க்ஷேத்திரத்தில் நிற்பதாக
என் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி யுண்டாகின்றது. வங்
காளத்திலுள்ள தேசீயவாதிகள் ஒவ்வொருவருக்கும்
பாரிஸால் நகரம் ஒரு புண்ணிய யாத்திரை ஸ்தல
மாகும். ஆத்மதத்துவத்தின் வழியாகச் சிறந்த தேசீய
உணர்ச்சியை யூட்டித் தாய்த் திருத்தொண்டு செய்
வதற்கு வழிகாட்டியாயிருந்த நமது நண்பரும் குரு
மூர்த்தியுமான பாபு அஸ்வினி குமார தத்தர் பிறந்து
வாழ்வதும் இந்நகரே. வங்காளத்தில் நடந்த தேசிய
கான்பரன்ஸ் எல்லாவற்றைக்காட்டிலும் மிக்க கீர்த்தி
யுடன் நடந்த நகரமும் இதுவேயாகும். அதிகாரிக
ளுடன் பொது ஜனங்கள் கைகலக்கும்படி நேர்ந்த
மாகாண கான்பரன்ஸைப் பற்றியே நான் கூறு
கிறேன். அந்த மகாநாட்டைப்பற்றிய சம்பவம் என்
மனதைவிட்டு இன்னும் நீங்கவில்லை. அந்தசமயத்
தில் வந்தேமாதர கீதங்களைப் பாடின அழகைப்
போல் இனி நான் எங்கும் கேட்கப்போவதில்லை.
மகாநாடு நடந்த முழுவிபரம் எனக்கு நன்றாக ஞாப

கத்திலிருக்கிறது. இப்பொழுது நாம் கூடியிருக்கும் இடத்திலிருந்துதான் மாகாணமகாநாடு கூடின இடத்திற்கு வெகு ஆடம்பரத்துடன் ஊர்வலம் வந்ததும் எனக்கு ஞாபகமுண்டு. அதிகாரிகள் நீதியற்ற உத்திரவுகளைப் பிறப்பித்ததும் அநீதியாகப் பலரைக் கைதி செய்ததும் ஜனங்கள் உற்சாகத்துடன் சங்கடங்களுக்கிடையே வெற்றிக்கொடி நாட்டினதும் நான் நன்கறிவேன். அச்சம்பவமே நம் ஜாதீய உணர்ச்சியின் அஸ்திவாரமாகும். நான் உங்களுக்குத் தற்கால நிலைமையைப்பற்றிப் பேசவேண்டுமானால், இராஜீய விஷயத்தில் பெரும்பாடுபட்டுப் பல துன்பங்களுக்கெல்லாம் ஆளாகி சதாதேச சேவையே பெரிதாகக் கொண்டு பரோபகாரஞ்செய்து நம்மை இந்நிலைமைக்குக் கொண்டுவந்த அரும்பெருந் தலைவர்களைப்பற்றியும் அன்னவர்செய்த பெரும் ஊழியத்தையுமேதான் கூறவேண்டும். நண்பர்களே! தற்காலம் நாடெங்கும் ஒரே வார்த்தையாக வழங்கிவரும் சுய ஆட்சி (Home Rule) விஷயமே எல்லா விஷயத்தைக் காட்டிலும் முக்கியமானது. சுய ஆட்சி யென்பதும் ஸ்வராஜ்யமென்பதும் ஹோம் ரூல் என்பதும் எல்லாம் ஒன்றே., பம்பாயில் இருப்பவர்கள் ஸ்வராஜ்யம் எனக் கூறலாம், சென்னையி லிருப்பவர்கள் ஹோம் ரூல் எனக் கூறலாம். வங்காளத்திலிருப்பவர்கள் சுய ஆட்சி எனக் கூறலாம். இவையாவும் ஒன்றைத்தான் குறிக்கிறது. நாம் இவ்வார்த்தைகளின் சூட்சுமதத்துவத்தைமட்டும் அறிந்தால் பிறகு வித்தியாசங்கள் இருப்பதாக நமக்குப் புலப்படாது. ஆட்சிவிஷயமாக நாம் அறிவதற்கு முன்னர், வங்காளத்தின் தற்கால சரித்திரத்தைப்பற்றி நாம் அறிதல்



வேண்டும். வங்காளத்தைப்பற்றி நாம் பேசவேண்டுமானால் இராஜாராம் மோஹன்ராய் அவர்களுடைய காலத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். தற்கால வங்காளத்திற்கு அடிகோலியாக யிருந்தவர் அவரே. அவருடைய ஜீவியகாலத்தின் ஊழியத்தை நாம் மீண்டும் இப்பொழுது ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்; அடிக்கடி சிந்திக்கவேண்டும். அவர் வழியைப் பின்பற்றவேண்டும். வங்காளத்தைப் பொருத்தின மட்டில் இந்திய சுதந்தரத்திற்காக அரும்பாடுபட்டவர் அவரே. முதல் முதல் இராஜீய விஷயத்திலும் மற்ற இதர விஷயங்களிலும் சுதந்தர உணர்ச்சியை இந்தியாவில் ஊட்டின மகானுபாவனும் அவரே. அவர் காலத்துக்குப் பிறகு பிரம்மசமாஜத்தவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார்கள். ஆனால், அவர்களுடைய வழிகளும் எண்ணங்களும் எல்லாம் ஐரோப்பியநாட்டு சம்பிர
உணர்ச்சிகளும்
தாயமாகவே யிருந்தன. அதுடன் இன்னொருபக்கத்தில் வங்காள பாஷாபிவிர்த்தியின் உணர்ச்சியும் ஏற்பட்டது. அவ்வுணர்ச்சிக்குக் காரணம் பாபு பங்கிம் அவர்களே யாவர்.

பிரம்ம சமாஜத்தினர்களின் நடையுடை பாவனையெல்லாம் ஐரோப்பிய வழியாக ஒருபக்கத்தில் வளர்ந்துகொண்டிருக்கையில், அதற்கு மாறாக மற்றொருபக்கத்தில் பங்கிம் சந்தர சாடர்ஜீயின் கீழ் நாட்டு உணர்ச்சி வளர்ந்துகொண்டே வந்தது. அதேவருடைய கிரந்தங்களும் வங்காளத்திற்குப் புதிய உணர்ச்சியைக் கொடுத்ததென்றாலும் சுதந்தர வழியில் அது அவ்வளவு பக்குவமடைந்த கிரந்தங்களாகக் காணப்படவில்லை. பங்கிம் சந்தர சாடர்ஜீயின்

கிரந்தங்கள் வங்காளத்தைப் புனிதப்படுத்தின. ஆனந்தமடம் என்னும் நூலில் துர்க்கையைப் பற்றிய குறிப்பெல்லாம் வங்கத்தாயைப்பற்றியதே யாகும். பிறகு பரமஹம்ஸ ஸ்வாமி விவேகானந்தரின் உபதேசங்கள் வங்காளத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு புதிய உணர்ச்சியை யுண்டாக்கின. ஸ்வாமி விவேகானந்தரின் உபதேசங்கள் தத்துவமார்க்கமாகயிருந்தபோதிலும் பாரதநாட்டின் பண்டை நாகரிகத்தையும் கல்வி கேள்விகளையும் ஆத்ம அநாத்ம விசாரங்களையும் சுதந்தரத் தன்மையையும் பற்றி வெகு சிறப்பாகக் கூறினர். அவர் கூறின உபதேச உபந்யாசங்களினால் தேசாபிமானமும் மதாபிமானமும் பலருக்கு உண்டாயிற்று. ஐரோப்பிய நாகரிகத்தை வளரவொட்டாமல் முட்டுக்கட்டை யிட்டது நம் ஸ்வாமி விவேகானந்தரே யாவர். பின்னர், சுதேசியக் கிளர்ச்சியைப்பற்றி நான் கூறுகிறேன். சுதேசிய இயக்கமானது 1902-ம் வருடத்திலேயே யாரம்பமாயிற்று. ஆனால் 1905-ம் வருடத்தில்தான் வெளிப்படையாகத் தோன்றிற்று. இந்த இயக்கமானது வெகு ஆழ்ந்த தேசாபிமானத்துடன் பரோபகார சிந்தைபற்றி யுண்டாயிற்று. ஜாதீய அபிவிர்த்திக்குரிய வழியை இந்த இயக்கம் பற்றிற்று. பாரதநாட்டில் ஒரு பராசக்தியொன்று ஆழ்ந்து கிடக்கின்றதென்னும் உணர்ச்சியை முதன் முதல் வங்காளமே அறிந்தது. வங்காளத்தைப் பொறுத்தமட்டில் நாம் நன்றாக அறிந்தோம். வங்கநாடு முழுமையும் வங்கநாட்டைப்பற்றி பாரதநாடு முழுமையும் ஒரு சக்தி ஆவேசம் உண்டாயிற்று. அக்காலத்தில் ஆழ்ந்துகிடந்த பல விஷயங்கள் வெளிக்கு வந்தன.



தேசத்தைப்பற்றிய காரியங்களிலும் ஒவ்வொரு வஸ்துக்களிலும் நமக்குப் பரம அன்பு உண்டாயிற்று. அக்காலத்தில் கவிசிரேஷ்டர் ரவீந்தர நாததாகூரின் கவிகளும் வியாசங்களும், விபினசந்திரபாலரின் உபந்யாசங்களும் வியாசங்களும், டி. எல். ராயின் நூல்களும், வங்காளத்திலும் அகில பாரதநாட்டிலும், ஒரு நவசக்தியை யுண்டாக்கின. அந்நவசக்தியின் உதயமே இன்று இந்தப் பரந்த தேசாபிமானத்தின் தோற்றமாகும். இந்துக்களுடன் வெகுகாலமளவு சேராத முஸ்லிம் சமூகத்தினர்களுக்குள்ளும் ஒரு புதிய உணர்ச்சியுண்டாகி பாரதநாட்டுப் பரமகைங்கர்யத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

நண்பர்களே! வங்காளத்தில் முகம்மதியர்களுக்குள்ளே வரவர தேசிய உணர்ச்சி யுண்டாயிற்றென்பதை நான் உங்களுக்குக் கூறாமலிருக்க முடியாது. 1905-ம் வருடத்திய சுதேசி இயக்கத்தில் முகம்மதியர்கள் ஒருவாறு ஒதுங்கியே யிருந்தார்கள். என்றும், தேசிய உணர்ச்சிமட்டும் வங்காளத்தில் முகம்மதியர்களுக்குள்ளே யிருந்தது. ஹிந்துக்கள் உருது பாஷையில் எழுதுவதும் முகம்மதியர்கள் சமஸ்கிருத பாஷையில் எழுவதும் வங்காளத்தில் சகஜமாகயிருந்தது. வங்காள நாகரிகமானது சமரஸமாகவே யிருக்கத் தலைப்பட்டது. இராஜாராம் மோஹன்காலத்தில் இங்கிலீஷ் பாஷை வங்காளத்தில் ஏற்பட்ட காலத்தில் முகம்மதியர்கள் ஒருவாறு கண்டனஞ் செய்தார்கள். முகம்மதியர்கள் ஆங்கிலபாஷையையும் படிக்காமல் தங்கள் பாட்டன் பூட்டன்மார்களுடைய உருது பாஷையையும் சரிவர படிக்காமல் ஒதுங்கியே நின்றதினால் முகம்மதியர்களைக் கட்டி

னும் இந்துக்கள் தீவிரமாகக் கல்விகற்றும் சர்க்கார் உத்தியோகங்களில் புகுந்தும் உயர்ந்துவிட்டார்கள். சுதேசியக் கிளர்ச்சியுண்டான காலத்தில் முகம்மதியர்களிற் சிலர் இயக்கத்திற்கு விரோதமாகவு மிருந்தனர். அதிகாரவர்க்கத்தினர் முகம்மதியர்களைத் தட்டிக் கொடுத்தனர். 'பிரித்து ஆள்' என்னும் தர்மத்தை அதிகாரவர்க்கத்தினர் ஸ்தாபிக்கத் தொடங்கினர். என்றாலும் முகம்மதியர்களிற் சிலர் சுதேசிய இயக்கத்தில் வெகு தீவிரமாகவும் உழைத்தனர். இடையே வித்தியாசங்கள் இருப்பினும் கடைசியாக இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒரு பொது உணர்ச்சி யேற்பட்டு சகோதரர்கள் போலாயினர். வங்காளத்தைப் பொறுத்தினமட்டில் உடனே பூர்ண மாகாண சுதந்தரம் அதற்குக் கொடுத்துவிடவேண்டும். இதுவே முதல் கடமை. இந்தியாவிலுள்ள பம்பாய், சென்னை, பஞ்சாப் முதலிய மாகாணங்களுக்கும் தனித் தனியே மாகாண சுதந்தரங் கொடுத்துவிட வேண்டும். ஏனெனில், மாகாணம் வெவ்வேறாக யிருந்தபோதிலும் உணர்ச்சிமட்டும் ஒன்றே. இராமாயண மகாபாரத இதிகாசங்கள் எப்படி பஞ்சாபில் படிக்கப்படுகின்றதோ அப்படியே மற்ற மாகாணங்களிலும் படிக்கப்படுகின்றது. மதபீடங்கள் எல்லாம் ஒன்றே. என்றாலும் ஒவ்வொரு மாகாணமும் தனித்தனியே சில வழிகளைக்கொண்டிருக்கும். பொதுவாக நாகரீகப்பான்மையும் ஆத்ம உணர்ச்சியும் ஒவ்வொரு மாகாணத்திலும் வித்தியாசமின்றியிருக்கும். பாஷையிலும் சிற்சில நடையுடைகளிலும், ஆசார அனுஷ்டானங்களிலும் பேதப்பட்டிருக்கலாம். ஆனால் தத்துவத்திலும் உபநிடதப்



பொருளிலும் வித்தியாசமென்பதே கிடையாது.
அகில இந்தியாமுழுதும் ஒரு குடும்பமே.

இந்தியா ஒத்துழைமை வழியில் இறங்கிவிட்டது.
ஹிந்துமுகம்மதியர்கள் ஒரு சமூகத்தினர்களாக ஆயி
னர். 'பிரித்து ஆள்' என்னும் தர்மம் பங்கப்பட்டது.
புண்டையில் இந்தியா ஏகமாய் ஒரு வழிப்பட்டிருந்த
தாகத் தெரியவில்லை. பூர்வ இந்தியாவிலுள்ள
உயர்ந்த ஸ்திதியை நான் கொண்டாடுகிறேன்.
பூர்வ இந்தியா நமக்கு இப்பொழுது ஒரு புதிய
உயிரைக் கொடுக்கிறது. என்றாலும் பூர்வ இந்தியா
துக்கடி துக்கடியாகத் தானிருந்தது. மகத இராச்
சியம், அந்நாளில் விசேஷ சிறப்புடன் இருந்தும்
இந்தியா ஏகமாய் இருந்ததாகச் சரித்திரத்தில் இல்லை.
அசோகன், சந்திரகுப்தன், அக்பர், ஔரங்கசிப்
முதலிய சக்கரவர்த்திகள் காலத்திலும் இந்தியா ஏக
மாகயில்லை. ஆனால் இந்தியா இப்பொழுது பல பிள
வுகள் பட்டிருந்தாலும் ஏகமாக இருக்கின்றது.
இதுவே நம் ஜாதிய உணர்ச்சிக்கு [illegible] டையாளம்.
இந்த ஜாதிய உணர்ச்சியினாலேயே நாம் [illegible] டிய சீக்
கிரத்தில் ஸ்வராஜ்யமடைவோம். இந்தியா [illegible] மதங்
களால் பிளவுபட்டும், பல பாஷைகளால் [illegible] க்கப்
பட்டும், பல ஆசாரங்களினால் வகுக்கப் [illegible] தும்
ஜாதிய உணர்ச்சியின் வழியே யு [illegible] சிய
உணர்ச்சியில் மட்டும் அ [illegible] ஏகமாய் [illegible] றது.
மாகாண அரசாங்க சுதந்தரத்துடனிருப் [illegible] போல
மத்திய அரசாங்கமும் சுதந்தரத்துடன் மா [illegible] ண அர
சாங்கங்களை அணைத்து ஆதரித்து இருக்கவேண்டும்.
இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த
பார்லிமெண்ட் சபைக்கு ஆஸ்திரேலியா பிரதிநிதியை

யனுப்புவதுபோல, கனடா தன் பிரதிநிதியை யனுப்புவதுபோல, ஆப்பிரிக்கா தன் பிரதிநிதியை யனுப்புவதுபோல இந்தியாவும் தனியே தன் பிரதிநிதியை யனுப்பும். இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு இந்திய நிர்வாகத்தைப்பற்றி அறிவித்த விளம்பரத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இராஜப் பிரதிநிதி அது விஷயமாகத் தன் பிரசங்கத்தில் கூறினதையும் நீங்கள் படித்திருப்பீர்கள். இந்த இரண்டு அறிக்கைகளின்றும் இந்தியாவிலுள்ள தலைவர்கள் அறிந்ததென்ன? 'கூடிய சீக்கிரத்தில் இந்தியா சுய ஆட்சி பெறுவதற்காக வேண்டிய உபாயங்கள் தேடப்படுவதால் நாம் தனியே ஒரு யாதாஸ்தைத் தயார் செய்து அனுப்புவோம்' என்பதேயாம். யாதாஸ்து தயாரிப்பதானால் அதிகாரிகள் பொது ஜனங்களுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்னும் அம்சம் மட்டும் பலமாகவே யிருக்க வேண்டும். அதிகார நிர்வாகமானது பொதுஜனப் பிரதிநிதிகளிடம் இல்லாமற் போனால் இந்தியாவில் சமாதான வாழ்க்கையும் ஒற்றுமை யுணர்ச்சியுமுண்டாகாது.

நாம் கிளர்ச்சி செய்கின்ற வழியில் நமக்கு பல இடையூறுகள் பல இருக்கின்றன. இந்திய கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் அறிவித்த விளம்பரத்தை அனுஷ்டானத்திற்கு வரவொட்டாமல் தடுக்க நம்நாட்டில் ஐரோப்பிய சங்கத்தைச் சேர்ந்த ஆங்கிலோ இந்தியர்கள் பெரும் பாடு பட்டு வருகின்றனர். இந்தியா கவர்ன்மெண்டைப் பொருத்தின மட்டில் அறிக்கையைத் தெளிவாகவே வெளியிட்டனர். ஆங்கிலோ இந்திய வர்க்கத்தார் விரோதமாகக் கிளர்ச்சி செய்தால் அக்கிளர்ச்சிக்கு



எதிர்க்கிளர்ச்சி யுண்டாக்கி நம் கோரிக்கையை நாம் நிறைவேற்ற வேண்டும். ஆங்கிலோ இந்தியர்கள் நம் தலைவர்களைத் தூஷித்து நம் இயக்கத்தைக் கண்டனஞ் செய்து வருகிறார்கள். அவர்கள் நம்மிடத்தே ஜாதி துவேஷத்தைப் பாராட்டியே வருகின்றனர். நாமென்ன சட்டத்திற்கடங்காத கிளர்ச்சிக்காரர்களா? நாம் சட்டத்திற்கு விரோதமாக நடப்பதாக எங்கேனும் கூறியிருக்கிறோமா? சட்டத்தை அவமதித்து நாம் நடந்ததுண்டா? ஆங்கிலேய இந்தியர்கள் நம்மீது அபாண்டமான வார்த்தைகளைக் கூறுகின்றனர். நாம் முரடர்களாகவும் இருக்கின்றோமென அவர்கள் கூறுகின்றனர். உண்மையில் நம் விஷயத்தில் ஆங்கிலோ இந்தியர்கள் முரடர்களாக விருப்பதுபோல் நாம் அவர்கள் விஷயத்தில் இருப்பது கிடையாது. நாம் அரசாங்கத்தைக் கேட்பதெல்லாங் கூடி நம் நாட்டில் நாம் சுதந்தரத்துடன் சுகமாகயிருக்கவேண்டுமென்பதே. 150வருட பிரிட்டிஷ் அரசாட்சியின் பரிபாலன முறையானது சொல்லொணாத விபரீத அதிகாரத்தைப் பற்றியது. இந்திய அபிவிருத்தி விஷயத்தில் அதிகாரவர்க்கத்தினர் போதுமான அக்கறை யெடுத்துக் கொள்ளாமல் உதாசீனமாகவே யிருந்தார்களென்பது உலகமறிந்த விஷயம். ஆகவேதான் இந்த அதிகாரவர்க்கத்தினரின் பரிபாலன முறையை நீக்கி மற்றொரு அதிகாரத்தை ஜனங்களுக்கு சௌகரியமாகவும் நன்மையாகவும் இருக்க ஏற்படுத்த வேண்டுமென்பது நம் நோக்கம். ஆங்கிலேய இந்தியர்கள் நம்மைத் தூஷிக்கையில் கடினமான வார்த்தைகளை அவர்கள் உபயோகப் படுத்தலாம். ஜாதிமத தூஷணையைச் செய்ய

லாம். நமக்குள் வேறுபாட்டையுண்டாக்கலாம். ஆனால் இந்தியத் தலைவரொருவர் அதிகாரவர்க்கத்தினரின் பரிபாலன முறையைக் கண்டித்தால் இராஜ நிந்தனை குற்றமென்று கூறி தண்டிக்கப் படுகின்றார். ஒரே சொல்லை ஒருவன் கூறினால் இராஜநிந்தனை யென்றும் மற்றொருவன் கூறினால் இராஜ பூஷணை யென்றும் அறிவிக்கப்படுகின்றது. இந்தியாவிலுள்ள ஆங்கிலோ இந்தியர்களும், இந்திய ஸிவில் உத்தியோகஸ்தர்களும் இராணுவ உத்தியோகஸ்தர்களும் ஒரே வர்க்கந்தான் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

மிஸ்டர் சார்டரும், ஸர்-வ. டப்ளியூ. பின்னிங்கும் கூறுவதென்ன? வியாபாரத்திலும், வர்த்தகத்திலும் அரசாங்க உத்தியோகங்களிலும் மற்ற வேலைகளிலும் இருக்கும் ஐரோப்பிய சமூகத்தினரின் பெயரால் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதுயாதெனில் ‘அரசாங்கத்துடன் எப்பொழுதும் எல்லா விதத்திலும் ஒருமைப்பட்டு உழைக்கத் தயாராயிருக்கிறோம்’ என்பதேயாம். நண்பர்களே! நம் நாட்டுப் பணத்தைக் கொண்டு நம்மைப் பரிபாலிக்கிற முறையில் வந்து அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இங்ஙனம் செய்வார்களானால் அதைப்பற்றி நாம் கூறுவதென்ன? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஜனங்களுக்காக என்ன செய்த போதிலும், மன்னர் பெருமான் ஜனங்களுக்கு என்ன செய்ய முன் வந்த போதிலும், ஆங்கிலோ இந்தியர்கள் கட்டுப்பாடாய் இந்தியர் அபிவிர்த்தியில் குறுக்கே நிற்பார்களென்பதை மேற்கண்ட வார்த்தைகளால் நமக்குப் புலனாகவில்லையா? ஆங்கிலோ இந்தியர்களுக்கு இந்தியா விஷயத்தில் இவ்வளவு சிரத்தையென்ன? இந்தியாவிலுள்ள வியா



பார வர்த்தகங்களின் சீரும் சிறப்பும் ஆங்கிலேயர்
களின் வசத்தில் இருப்பதால் அவர்களுக்கு இந்தியா
வைப்பற்றிய அக்கரை அதிக மென்று ஸர் ஆர்ச்சி
பார்க்மியர் கூறுகிறார். இதன் பொருட்டா பெரிய சமூ
கத்தின் அபிவிர்த்திக்குத் தடையாக நிற்கவேண்டும்.
ஆங்கிலோ இந்தியர்கள் சுகத்திற்காகவும் இலாபத்
திற்காகவும் இந்தியா பிணியினாலும் அடக்கு முறை
களினாலும் கஷ்டப்படவேண்டுமா? ஆங்கிலோ இந்
தியர்கள் இந்தியாவில் வியாபாரத்தில் முதல் வைத்
திருக்கிறார்களென்ற காரணத்தைக் கொண்டு இந்தி
யர்களுக்குச் சுய ஆட்சி கொடுக்க முடியாதென்பது
தர்மமாகுமா? பிரிட்டிஷ் நீதிமுறைக்கு அழகாகுமா?
இந்தியா தக்கபடி சுய ஆட்சி பெற்றால் ஆங்கிலோ
இந்தியர்களுக்கும் தக்க ஸ்தானமும் பிரதிநிதித்துவ
மும் கொடுக்கப்படுமென்பதை இவர்கள் அறியாமலி
ருப்பதேன்? ஆங்கிலோ இந்தியர்களின் வியாபார
முதலும் சுதந்தரமும் செல்வாக்கும் எக்காலத்தும்
இந்தியர்களினால் அழிக்கப்பட மாட்டாதென்பதை
நான் உறுதியாகக் கூறுவேன். சுய ஆட்சி யென்
பது இந்துக்களுக்கு மட்டு மல்ல; சுய ஆட்சி யென்
பது முகம்மதிய ஆட்சியுமல்ல: சுய ஆட்சி யென்
பது ஜமீன் ஆட்சியுமல்ல; சுய ஆட்சி யென்பது
ஜனங்களின் சம்மதங் கொண்டு ஜனங்களின் அபிப்பிரா
யத்தைப்பற்றி, ஜனங்களாலேயே பரிபாலிக்கப்படு
வதுதான். சுய ஆட்சியில் ஏற்றத்தாழ்ச்சி கிடையாது.
தாழ்ந்த வகுப்பினர்களுக்கும், ஸ்திரீ சாதிகளுக்
கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் தனித்தனியே
செல்வாக்கு உண்டு. சட்ட சபைகளில் அவர்களுக்
குத் தனித்தனி ஸ்தானம் இருக்கும். நாம் நம

நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களின் அபிவிர்த்
திக்காக உழைக்கிறோம். அவர்களுக்காகப் பாடுபடு
வர் யார் தான்? நான் என்னுடைய அபிவிர்த்திக்
காக, என் சுற்றத்தாருடைய அபிவிர்த்திக்காக, என்
அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் சுற்றத்திற்காக,
நான் பிறந்த நாட்டின் அபிவிர்த்திக்காக பாடுபடுகி
றேன். இது என்ன குற்றமா? நம் நாட்டில் நாம்
சுதந்தரத்துடன் பிணியன்றி பஞ்சமின்றி சுகத்
துடன் வாழவேண்டுமென்பது குற்றமா? ஒருநாளும்
இல்லை. இது நம்முடன் பிறந்த உணர்ச்சி, இவ்
வுணர்ச்சி ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாகவே
உள்ள உணர்ச்சி. ஆகவே, அவ்வுணர்ச்சி நமக்குள்ளே
நன்ருகப் பலப்படும்படி பகவான் நமக்குத் தேச
பக்தியையும் தைரியத்தையும் அளிப்பாராக!

---

## VIII. ஹிந்து முகம்மதீய மகாநாடு.

[1917-ம் வருடம், அக்டோபர் மாதம் 7-ந் தேதி
கல்கத்தாவில் கூடின மகாநாட்டில் ஸ்ரீயுத. சித்தரஞ்சன
தாஸ் பின்வருமாறு பேசினர்.]

கனவான்களே! இம் மகாநாட்டிற்கு நான்
அக்கிராசனம் வகிக்கவேண்டுமென்று என்னை இன்று
மாலை அக்ரஹான் கேட்டார். நான் இக் கடமையை
ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடாதென்று ஒத்துக்
கொண்டேன். இந்த மேடையின் மீது இந்துக்களும்
முகம்மதியர்களும் ஒருமித்து இருதிறத்தார்க்கும்
பொதுவாயிருக்கும் தேசகாரியத்தில் ஈடுபட்டுப்
போர்புரிய அவாகொண்டிருப்பதைக் காண என்
மனம் சந்தோஷமடைகின்றது. 1905-ம் வருடத்தில்



நம் நாட்டில் ஏற்பட்ட சுதேசிய இயக்கத்தால் ஹிந்
துக்களும் முகம்மதியர்களும் ஒருமைப்பட்டு உழைப்
பார்களென்றே நான் எண்ணியதை நம் நண்பர் பூாபு
விபின சந்திரபாலர் நன்கறிவார். அந்த ஒற்றுமை
யுணர்ச்சி இவ்வளவு சீக்கிரத்தில் உண்டாகும் என்
பதை நான் கனவிலுங் கருதவில்லை. இந்த சந்தர்ப்
பத்தில் எனது நண்பர் மிஸ்டர் ரஸூலின் மரணம்
எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இன்று அவர் இங்
கிருந்தால் என்னிலும் பன்மடங் கதிகமான சந்தோ
ஷத்தைக் கொண்டிருப்பார். ஏனென்றால் ஹிந்து
முகம்மதீய ஒற்றுமைக்காக அவர்பட்ட அரும்பாட்
டிற்கு எல்லையில்லை. வங்காளத்தில் பொது ஜனங்
களின் மதிப்பை இவர் பெற்றதுபோல் வேறெவரும்
பெறவில்லை. இவர் இறந்த செய்தி எனக்கு எட்டிய
வுடன் வங்காளத்தின் மகிமை குறைந்ததுபோலிருந்
தது. இந்தியாவில் இந்து முகம்மதீய ஒற்றுமையினு
லேயே அபிவிர்த்தி யேற்படுமென்பதை முதல் முதல்
அறிந்தவர் இவரே—இம் மகானின் ஆவிசாற்சாந்தி
யடையுமாறு நாம் பிரார்த்திப்போமாக!

நிற்க, அதிகாரவர்க்கத்தினர் நிஷ்காரணமாக
விசாரணையின்றி நம்மவர்களைச் சிறைப்படுத்துவதைப்
பற்றி நாம் இன்று கண்டனஞ்செய்யக் கூடியிருக்
கிறோம். சிறைப்பட்டவர்களின் மீட்சியையும் நாம்
கேட்கின்றோம். நீங்கள் இன்றெடுத்த துண்டு விளம்
பரத்தில் குறிக்கப்பட்ட பேர்வழிகள் யாவர்? துண்டு
பத்திரிகையில் குறிப்பிட்டவர்கள் இந்து முகம்மதியர்
களினால் நன்கு போற்றப்பட்டவர்கள். மௌலானு
முகமத் அலியின் பெயர் தெரியாத வீடே கிடை
யாது. நான் அவருடன் இருந்திருக்கிறேன்.

அவர் கல்கத்தாவில் இருந்தபொழுது அடிக்கடி நான் அவரைச் சந்தித்ததுண்டு. அவர் உத்தம தேசாபிமானி யென்று நான் திண்ணமாகக் கூறுவேன். அவருடைய தமையனார் மௌலானா ஷவுகத் அலியை எனக்கு நன்றாகத் தெரியாது. என்றாலும் எனது நண்பர் பலர் அவரைப்பற்றிப் புகழ்படக் கூறியிருக்கின்றனர். ஷவுகத் அலி சிறந்த பரோபகாரி யென்றும் இந்து முகம்மதியர்களுடைய ஒத்துமைக்கே உழைத்து வந்தாரென்றும் பலர் கூற நான் கேட்டிருக்கிறேன். ஆகவே இவ் விருவர்களையும் நாம் அவசியம் போற்றுதல் வேண்டும். மூன்றாவதாக நீங்கள் குறிப்பிட்ட பெயரோ பாபு சியாம சுந்தர சக்கரவர்த்தி. நான் இவரை நன்கு அறிவேன். பல சமயங்களில் நாங்களிருவரும் அளவளாவி யிருக்கிறோம். இவர் சிறைபடும்படியான குற்றத்தைச் செய்ய யோக்கியதை யற்றவரென்பது எனது துணிபு. இந்த மூன்று பெயர்கள் மாத்திரமல்ல. கீழ் வங்காளத்தில் ஒருவர் இருவராகிலும் சிறைபடாத குடும்பங் கிடையா—வீடுகளிலிருந்து அவர்கள் பலாத்காரமாக அதிகாரிகளினால் சிறைப்படுத்தப்பட்டவர்கள். உங்கள் பெயரால் இந்த அநீதிக்காக நான் கண்டனஞ் செய்கின்றேன். இந்த முறைமையானது பிரிட்டிஷ் நீதிக்குரியதல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எந்த இராஜநீதியினாலும் தர்மத்தினாலும் ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நீதிக்கும் தர்மத்திற்கும் விரோதமாக இந்தியாவில் அதிகாரவர்க்கத்தினரின் முறைமை பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. மானிட தர்மத்திற்கும் இராஜநீதி சாஸ்திரத்திற்கும் மாறுபாடான இந்த முறை மாற்றப்பட்டாலன்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்



தில் சமாதானமும் சீருஞ் சிறப்பு முண்டாகா. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்கள் புத்திக் கெட்டியபடி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பதற்கு ஏதாவது ஒருவகை ஜவாப்தாரித்துவமான அரசாங்கம் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று விளம்பரஞ் செய்திருக்கையிலும், சமீபத்தில் இராஜப்பிரதிநிதி யுத்தகாலத்தை முன்னிட்டு இந்தியாவில் அமைதியிருக்கவேண்டுமென்று கூறியிருக்கையிலும், அதிகார வர்க்கத்தினர் யோசனையின்றி அடக்குமுறை தொடுத்து பொது ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக அமைதியின்மையை யுண்டாக்குவதின் அர்த்தமென்ன? இத்தகைய அடக்கு முறையின் தாண்டவத்திற்குக் காரணம் யார்? ஒரு புதிய சட்டத்தை யேற்படுத்தி அதனால் விசாரணையின்றி சிறைப்படுத்துவதை இங்கிலாந்திலுள்ள சட்டநிபுணர்களும் கண்டனஞ் செய்கின்றனர். இங்கிலாந்திலுள்ள பிரபல நீதிபதிகள் அனைவரும் ஒரு முகமாக இத்தகைய சட்டம் அரசாங்க முறைமைக்கு ஏற்றதல்லவென்றும் கூறியிருக்கின்றனர். பொதுஜன சாவதானமென்று அதிகார வர்க்கத்தினர் நீதி வரம்புகடந்து செல்கின்றனர். அதிகார வர்க்கத்தினர் முகம்மத் அலியை ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கும்படி கேட்டனர். அவர், என் மதக்கோட்பாடுகளுக்கு உடன்பட்டிருக்கும் வழியாக எந்தமாதிரி வேண்டுமானாலும் கொடுக்கிறேன் என்றார். அதிகார வர்க்கத்தினர் அதற்கொப்பவில்லை. மதக்கோட்பாடுகள் எப்படியிருப்பினும் நான் ஒப்பந்தஞ் செய்துகொடுக்கிறேன் என்று சொல்லாமலிருந்தது தான் அவர் செய்த குற்றம். இதற்காக இன்னும் அவரை விடுதலை செய்யாது

சிறைப்படுத்தி வைத்திருக்கின்றனர். ஒரு மனிதனுடைய இயற்கையில் ஏற்பட்ட மதக் கோட்பாடுகளையும் அவன் உறுதியான எண்ணத்தையும் (அபிப்பிராயம்) விட்டுவிடும்படி கேட்பதற்கு அரசாங்கத்திற்கு என்ன அதிகாரமுண்டு. உலகத்திலுள்ள எந்த அரசாங்கத்திற்கும் இத்தகைய அதிகாரம் கிடையாது. அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினர் சொல்லியபடியெல்லாம் முகம்மத் அலி கேட்க வேண்டாமா? மதக் கோட்பாடுகளுக்கு அடங்கி நடப்பது அவர் கடமையன்றோ? நீங்கள் என்ன செய்தபோதிலும் என் மதக்கோட்பாடுகளைப் பின்பற்றித்தான் நான் நடப்பேன். நான் சுதந்தர மனிதன். நீங்கள் என் தேகத்தை வேண்டுமானால் சிறைப்படுத்தலாமே யொழிய என் ஆத்மாவைச் சிறைப்படுத்த முடியாதென்று சொல்வதல்லவா அவர் கடமை. இம்மாதிரியாகவே தான் மௌலானா முகம்மத் அலி அதிகாரிகளுக்குப் பதில் விடுத்தார். அவருடைய ஈமானுக்காக அல்லாகுத்த ஆலாவின் கட்டளைக்காக புனித க்ஷேத்திரங்களுக்காக சிறையிலிருக்கிறார். மற்ற கணக்கற்ற வாலிபர்களும் தேசாபிமான உணர்ச்சியின் பெருமயக்கத்தால் காராக்கிரகத்தில் கசிந்து வருகின்றனர். இவர்கள் செய்த குற்றம் தேசாபிமானமும் பரோபகார உணர்ச்சியுமேயாம்.

கனவான்களே! நமது இருதய கமலங்களினின்றும் புலப்படும் எண்ணங்களைத் தாராளமாக வெளியிடும் சுதந்தரமில்லாதபோது நம் வாழ்க்கையின் பிரயோசனமென்ன? நாம் ஜீவிப்பதில் ஏதேனும் அனுகூலமுண்டா? நாம் ஒருவருக்கொருவர்



அபிப்பிராயபேதங் கொள்ளலாம். நீங்கள் என் அபிப்பிராயத்தினின்றும் வேறுபடலாம். நான் உங்கள் அபிப்பிராயத்தினின்றும் வேறுபடலாம். உங்களுடைய அபிப்பிராயத்தை நீங்கள் ஸ்தாபிக்கும் சுதந்தரம், நான் என் அபிப்பிராயத்தை ஸ்தாபிக்கும் சுதந்தரம், ஒருவராலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல. இந்திய ஸிவில் சர்விஸ் குழுவினர் ஓர் அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கலாம். நாம் ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கலாம். இராஜப் பிரதிநிதி ஓர் அபிப்பிராயத்தையும் ஜார்ஜ் சக்கரவர்த்தி மற்றோர் அபிப்பிராயத்தையுங் கொண்டிருக்கலாம். அபிப்பிராய பேதங்கொள்வது குற்றமா? சரித்திரத்தில் அபிப்பிராய பேதப்படுவது குற்றம் என்று காணப்படுகின்றதா? கல்குல் குவிந்தகாலம் நீங்கிற்றென்று நாம் கருதினோம். இன்னும் நீங்கினதாகத் தெரியவில்லை. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் கொடுத்த போதிலும் 1858-ம் வருடத்திய காலஞ்சென்ற மகா ராணியாரின் விளம்பர சாஸனத்தை நாம் ஆதாரமாகக்கொள்ள நமக்கு உரிமையுண்டல்லவா? அந்த சாஸனத்தை நாம் ஜீவாதாரமான உயில் என்றே கருதுகிறோம். சாஸனம் கூறுவதென்ன? "கிறிஸ்துவமதத்தின் சத்தியக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு மத உணர்ச்சியையே துணையாகப்பற்றியிருக்கும் நாங்கள் எங்களுடைய பிரஜைகளின் எந்நிறத்தாரையும் எங்கள் அபிப்பிராய வழிக்குக் கட்டுப்படுத்தவோ அல்லது நிர்ப்பந்திக்கவோ மாட்டோம். மத விஷயத்தில் ஒருவர் அபிமானத்துடனும் மற்றொருவர் விரோதத்

டனும் பாராட்டாமல் சட்டத்தின் முன்பாக எல்
லோரும் சமத்துவத்தையே கொண்டிருக்க வேண்டு
வதே எங்கள் அரசாங்கத்தின் நோக்கம். அரசாங்
கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் எவரேனும்
அனுவசியமாக மத விஷயத்தைச் சேர்ந்த உத்
தியோகஸ்தர்கள் எவரேனும் அனுவசியமாக மத
விஷயத்தில் தலையிடுவார்களானால் அவர்களைப்பற்றி
அரசாங்கம் யாதொரு பொறுப்பும் வகிக்காததுடன்
அவர்களைக் கண்டிக்கும்." மேற்கூறின வார்த்தை
களை எத்தனை பேர்வழிகள் இந்த அரசாங்கத்தில்
மதிப்புடன் போற்றிவருகின்றனர். இந்த அரசாங்க
மேனும் இராஜப்பிரதிநிதியேனும் நிர்வாக அங்கத்தி
னர்களேனும் மற்றெவரேனுஞ்சரி அலிசகோதரர்
களிடமிருந்து மதவிஷயத்தை நிராகரித்து உடன்
படிக்கையொன்றுகேட்க அவர்களுக்குக் கொஞ்ச
மேனும் அதிகாரங் கிடையாது. இராஜப்பிரதிநிதி
இராஜ விளம்பரத்தைப்பற்றியறியாமலிருந்ததேன்?
அரசர் பெருமானுக்கு விரோதமாகப்போவது நா
மல்ல; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இராஜதர்மத்திற்கு
விரோதமாகப்போவதும் நாமல்ல. நம்மிடமிருந்து
நம் பிறப்புரிமையைப் பறிப்பவர்களே பொறுப்
பாளிகள். நம்முடைய முறையீடுகளை அரசாங்கம்
ஒருக்கால் கவனிக்கக்கூடும். ஆனால் அங்ஙனும் கவ
னிக்கவொட்டாமற் செய்பவருண்டு. அவர் ஐரோப்
பிய சங்கத்தைச் சேர்ந்தகுழுவினர். இல்பர்ட் பில்
கிளர்ச்சிகாலத்தில் ஆங்கிலோ இந்தியர்கள் என்ன
செய்யக்கூடும் என்பதை நாம் அன்று உணர்ந்தோம்.
பிரிட்டிஷ் அரசாங்கம் சுய ஆட்சியை ஒருவாறு
அங்கீகரித்ததும் ஆங்கிலோ இந்தியர்களின் கூக்குரல்



நிக்கக்கூடவில்லை. பணம் சம்பாதிக்கவந்த இவர்
கள், முதன்முதல் கையில் செப்புகாசுகூடயில்லாமல்
வந்த இவர்கள், பணம் நிறைந்தவுடன் நம் நாட்டுத்
திரவியத்தைக்கொண்டு போவதுடன் இந்தியாவின்
பெயரால் சிறைப்பட்டவர்கள் விடுதலை யடையக்
கூடாதென்று இந்த ஆங்கிலோ இந்தியர்கள் கூறு
கின்றனர். இவர்கள் விடுதலையடைந்து வெளிவந்
தால் சுயஆட்சி பெறுவதற்குரிய அரும்பாடுகளைப்
படுவார்களென்ற எண்ணத்தாலேயே ஆங்கிலோ
இந்தியர்கள் கூக்குரலிடுகின்றனர். இந்தியாவுக்குச்
சுயஆட்சி கொடுக்கப்படுமானால் இந்த ஆங்கிலோ
இந்திய வியாபாரிகளின் போக்கு என்ன? இந்தியர்
சுயஆட்சி பெறுவாரானால் ஜில்லாவிலுள்ள கலெக்
டர், மாஜிஸ்டிரெட் முதலானவர்களின் அதிகாரம்
குறைந்துவிடும். அங்ஙனம் குறைந்துவிடுமானால்
அந்த வியாபாரிகளின் இடநிலையும் காலநிலையும்
மனோநிலையும் எவ்வாறாகும். ஐரோப்பிய நிலக்கரி
சுரங்கத்தாருக்குத் தாராளமாக் இரயில் வண்டிகள்
அகப்படுகின்றனவென்றும் இந்தியர்களுக்கு அகப்
படுவதில்லையென்னும் கூக்குரலை நாம் பன்முறை
கேட்டிருக்கின்றோம். ஜனங்களால் ஆளப்படாமல்
அதிகாரவர்த்தினர்களால் ஆளப்படுவதால் இந்த
ஆங்கிலோ இந்தியர்கள் சகல சௌகரியங்களையும்
அடைகின்றனர். இதுகாரணம்பற்றியே அவர்கள்
நம்மீது பாய்கின்றனர். சுயஆட்சிக்கு விரோதமாக
வும் நாட்டின் அபிவிர்த்திக்கு விரோதமாகவும் பல
ஆங்கிலோ இந்தியர்கள் தாறுமாறாய்ப் பேசியிருக்
கின்றனர். அவர்களுள் ஒருவரான மிஸ்டர் ஆர்டன்
வுட் பின்வருமாறு ஓரிடத்தில் பேசியுள்ளார். "இங்

திய இராஜீய வாழ்க்கையில் ஜாதித்வேஷ உணர்ச்சி பலப்படுமானால் ஆங்கிலோ இந்தியர்களாகிய நாம் நாட்டைவிட்டுப்போகவோ அல்லது மீண்டும் தண்டோபாயஞ் செலுத்தி ஜெயிப்பதோதான் தகுந்த வழி". இவர் கூறிய வார்த்தை மிகவும் அசட்டுத்தனமானது. இந்தியாவில் இவர்களிருப்பது நஷ்டமாகயிருந்தால் வெகுதாராளமாக நாட்டைவிட்டுப் போகலாம். இந்நாட்டில் இருப்பது இலாபகரமாகயிருந்தால் அவர்கள் குதூகலமாகத் தங்கியிருக்கலாம். தண்டெடுத்து வெற்றி பெறுவதென்ற வார்த்தைமட்டும் மிகவும் அசட்டுத்தனமானது. இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஜெயித்தது தண்டோபாயத்தினாலல்லவென்பதை இவர் அறியார் போலும். இந்தியாவானது அன்பினாலும் உருக்கமான வாக்குத்தத்தங்களினாலும் நம்பிக்கையினாலும் ஜெயிக்கப்பட்டது. இந்தியா எப்பொழுதும் ஜெயிக்கப்படாதது. எக்காலத்திலும் ஜெயிக்கப்பட்டதல்ல. இந்தியாவானது அதனுடைய ஆத்ம உணர்ச்சியையும் நாகரீகத்தையும் கல்விகேள்விகளையும் உலகம் அறியும்படி போதிக்கும். ஜனநாயக ஆட்சியில் நபர் பந்தோபஸ்தும் சொத்து பந்தோபஸ்துமின்றியிருக்கும் என ஒருவர் கூறினார். இதன் அர்த்தமென்ன? இந்தியா சுய ஆட்சிபெற்றால் நாட்டில் சமாதானமும் சந்தோஷமும் இராதென்பதே அவர்களின் கருத்து. யாருடைய நபர் பந்தோபஸ்தும் சொத்துபந்தோபஸ்தும் இரா? முப்பது கோடி இந்தியர்களின் பந்தோபஸ்தா அல்லது ஸர் ஆர்ச்சி பர்க்மியர் குழுவினரின் பந்தோபஸ்தா? இந்தியா சுயஆட்சி பெறுவதால் ஸர் ஆர்ச்சி பர்க்மியர் சொத்தின்றி போவா



ரானால், அப்படியே போகட்டும். அதற்கென்ன? இவருக்காக இந்தியா வாழவில்லை. அல்லது உலகம் இவருக்காகத் தோன்றவில்லை. இந்தியா தனக்காக உயிர் வாழ்கின்றது. கல்கத்தாவில் சில பத்திரிகைகள் நம் உள்வாழ்க்கையில் புகுந்து நமக்கு அனுதாபப்படுகின்றன. வங்காளத்திலுள்ள தீவிரகட்சியினர்களைக் கண்டித்து மிதவாதிகளை அப்பத்திரிகைகள் ஸ்தோத்திரஞ் செய்திருக்கின்றன.

ஆங்கிலோ இந்தியர்களுக்கு நாம் சொல்வதென்னவென்றால் வங்காளத்தில் மிதவாதிகளும் அமிதவாதிகளும் எங்களுக்குள்ளே கிடையாதென்பதே. வங்காளத்தில் உள்ள முகம்மதியர்களும் அநேகமாக தேசிய வாதிகளே. அவர்கள் மிதவாதிகளுமல்ல, அமிதவாதிகளுமல்ல. அமிதவாதிகள் யாரென்று நான் கூறட்டுமா? ஆங்கிலோ இந்தியர்கள் தான் அமிதவாதிகள். நாட்டில் அமைதியுண்டாக வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள். நாட்டின் அமைதியைக் கெடுப்பதார்? ஆங்கிலோ இந்தியக் கிளர்ச்சிக்காரர்கள் தான் அமைதியைக் கெடுக்கின்றனர், ஐரோப்பிய சங்கத்தில் பேசின ஒவ்வொருவரும் ஆகிய இவர்கள் யாவரும் தான் இந்தியாவின் அமைதியைக் கெடுத்தவர்கள். நிலைமையை யறிந்து நாம் உஷாராக யிருக்கவேண்டும். வெகு காலத்திற்கு முன் இல்பர்ட் சட்டம் ஏற்படுங்காலத்தில் ஆங்கிலோ இந்தியர்கள் செய்த கிளர்ச்சியைவிட பன்மடங்கதிகமாகவே இப்பொழுது சுய ஆட்சி விஷயத்தில் செய்து வருகின்றனர். நாட்டிலோ இப்பொழுது ஜனநாயக உணர்ச்சி யுண்டாகத் தலைப்பட்டுவிட்டது. ஆங்கிலோ இந்தியர்களின் உருட்டலுக்கும் வெறட்ட

ளுக்கும் பசப்பு வார்த்தைகளுக்கும் இனி நாம் ப[illegible]
படமுடியாது. அன்னவர்களின் தூஷணையை நாம்
சகித்திருக்கவே முடியாது. நாம் சொல்லியுங் கேளா
மல் பிடிவாதமாய் நாம் அபிவிர்த்திக்குக் குறுக்
கே கிளர்ச்சி செய்வார்களானால் .அவர்கள் எப்படி
நடத்தப்படுவார்கள் என்பதை அவர்கள் அறியட்டும்;
பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நன்மைக்காகவே நாம்
கிளர்ச்சி செய்கிறோம். மன்னர் பெருமானுடைய
மந்திரிகள் கூறின அறிக்கையின் பேரிலேயே நாம்
போராடுகின்றோம். சக்கரவர்த்தியின் மதிமந்திரிகள்
கூறின விளம்பரத்தையும் இராஜப் பிரதிநிதி இந்தியா
வில் கூறின விளம்பரத்தையுமே ஆதாரமாகக்
கொண்டு பாடுபடுகிறோம். இந்தியாவிலுள்ள அ
சாங்கத்தில் ஆங்கிலோ இந்தியர்களுக்குரிய ஸ்தா
னத்தையேனும் செல்வாக்கையேனும் நாங்கள்
பறிக்க ஒரு காலத்திலும் எண்ணவில்லை. அவர்கள்
இந்தியாவுக்கு சுய ஆட்சி நன்மையல்ல வென்று
கூறின பொழுதே நாம் அவர்களுடைய தன்மையை
யறிந்து கொண்டோம். 30 கோடி ஜனத்தொகையின்
க்ஷேமத்திற்குதவாத சுய ஆட்சி இருந்தென்ன? இல்
லாமற் போயினென்ன ? நாம் சுய ஆட்சியைக் கேட்
கும் காலத்தில் தற்பொழுது இருக்கும் அதிகாரவர்க்
கத்தினருக்குப் பதிலாக மற்றொரு அதிகாரவர்க்
கத்தினர் வேண்டு மென்பதல்ல. மற்றும் ஒரு வகுப்
பார் ஆதிக்கஞ் செய்வதுமல்ல. அதிகாரவர்க்கமென்
பது அதிகாரவர்க்கமே. அது ஆங்கிலக் குழுவா
யிருந்தாலென்ன, இந்தியக் குழுவாருந்தாலென்ன ?
எல்லாம் ஒன்றே. நமக்கு சுய ஆட்சியே வேண்
டும். ஜமீன்தாராயிருந்தாலுஞ்சரி, பரம ஏழை



யாயிருந்தாலுஞ்சரி, உயர்ந்த ஜாதியாயிருந்தாலுஞ்
சரி, தாழ்ந்த ஜாதியாயிருந்தாலுஞ்சரி, படித்த வகுப்
பினராயிருந்தாலுஞ்சரி, படிப்பில்லாத வகுப்பினரா
யிருந்தாலுஞ்சரி ஒரே சமத்துவத்தைக் கொண்டு
வாழும் சுய ஆட்சியே தான் நமக்கு வேண்டும்.
அதுவே நம் பிறப்புரிமையாகும். சகல மதத்தின
ரையும் சகல வகுப்பினரையும் அனாதிகாலமாகப்
போற்றிவந்த இந்தியா இந்த ஆங்கிலோ இந்தியர்
களுக்கும் இடங்கொடுக்காமற் போகாதென்பதை
அவர்கள் அறியட்டும். நமது நாட்டில் பாரஸீகர்கள்
இருக்கின்றனர். தண்டெடுத்து ஜெயிப்பதற்காக
வந்த முகம்மதியர்கள் கடைசியாக இந்தியாவில்
தங்கி தங்கள் ஜன்மதேசமாக்கிக் கொண்டவுடன்
இப்பொழுது நாம் அவர்களை அணைக்கின்றோம்.
அவர்களும் நம்மை அணைக்கின்றனர். இருவரும் ஒரு
சமூகத்தினராக ஆயினோம். ஆங்கிலோ இந்தியர்
களும் அங்ஙனமே இந்தியாவைத் தங்கள் ஜன்மதேச
மாக்கிக் கொள்ள வேண்டுமென்றால் நன்று நச் செய்
யட்டும். நமது நாட்டிற்குவந்து, நம்பணத்தைக்
கொண்டுபோகும் எண்ணத்துடன் இருந்தால் அவர்
கள் நம்மைச் சேர்ந்தவர்களல்ல. இந்தியாவைப்
பற்றிய அக்கரை கொண்டவர்களல்ல. சுய ஆட்சி
விஷயமாக அவர்கள் பேசக் கடமைப்பட்டவர்களு
மல்ல. நம் நாட்டிற்கு வேண்டுமானால் அவர்கள்
வாட்டும். பணம் சம்பாதிக்கட்டும். நல்லபடியாகப்
போகட்டும் என்பதுதான் நான் கேட்பது. ஆகவே,
நம் பிறப்புரிமையையடைய மகத்தான கஷ்டங்களி
ருக்கின்றன. நாம் ஒத்துமையுடன் இருக்கவேண்டும்.
வெற்றி நம்முடையதேயாகும்.

## IX. சுய ஆட்சி

[1917-ம் வருடம் கல்கத்தாவில் கூடின பாரத ஜனசபையில் ஸ்ரீயுத. சித்தரஞ்சனதாஸர் சுய ஆட்சி தீர்மானத்தைப் பற்றிப் பின்வருமாறு பேசினார்.]

மாது அக்கிராசனாதிபதியே! ஸ்ரீமான்களே, ஸ்ரீமாட்டிகளே!! சற்று நிமிடங்களுக்கு முன்னர் நீங்கள் கேட்ட கீதமானது நம் இந்தியாவுக்கு வெற்றியும் சிறப்பும் உண்டாகவேண்டுமென்பதைக் குறிக்கின்றது. நாம் இந்தியாவின் ஜெயத்திற்காக இவ்வகண்ட மேடைமீது வீற்றிருக்கின்றோம். தீர்மான விஷயமாக நமக்குள் எவ்வளவு பலமான வித்தியாசங்களும் அபிப்பிராய பேதங்களும் இருந்தபோதிலும் பொதுவாகத் தீர்மானத்தின் ஆழ்ந்த உட் கருத்தை மட்டும் நாம் கவனிக்கவேண்டும். நம் பாரத மகா சமூகத்தின் அபிவிர்த்திக்கும் அப்யுதயத்திற்கும் காரணமாக நிற்பதே இந்த தீர்மானத்தின் இலட்சியமாகும். இது விஷயத்தில் நாம் அனைவரும் ஏகோபித்துள்ளோம். எங்ஙனம் அவ்வபிவிர்த்தியை யடைவதென்னும் விஷயத்தில்தான் அபிப்பிராய பேதங்கள் உண்டாகின்றன. வங்காளத்தின் உணர்ச்சியைப் பற்றினமட்டில் எனது நண்பர் பாபு விபின சந்திர பாலர் வெகு விசிதமாகக் கூறிவிட்டார். நான் என் முழுமனதுடன் அதை அங்கீகரிக்கிறேன். நான் கொண்ட உணர்ச்சிக்கும் இந்த தீர்மானத்தின் கருத்துக்கும் ஏதாவது வித்தியாசம் ஏற்பட்டிருந்தால் உங்கள் முன்பாக இந்த தீர்மானத்தை ஆதரிக்க நான் வந்திருக்கவே மாட்டேன். வங்காளமாகாண மகா.



நாட்டில் தீர்மானித்ததற்குக் குறைவாக இந்த தீர்மானம் போனதாக நான் எண்ணவேயில்லை. முதல் நோக்கமானது மாகாண சுதந்தரமே. இந்தியா கவர்ன்மெண்டின் அதிகாரம் முதல் முதல் அளவுடன் குறிப்பிடவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாகங்கள் பரிஷ்காரமாகக் கூறப்படவேண்டும். இவை நீங்கலாகமற்ற அதிகாரங்கள் யாவும் மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்தவை யாகும். இந்த உணர்ச்சியானது நம் பிரஸ்தாப தீர்மானத்திற்கு அன்னியதா? ஒருநாளுமில்லை. வங்காளத்தின் இலட்சியம் என்ன? மகாணத்தைச் சேர்ந்த அதிகாரப் பிரிவினைக்குரிய யாவும் ஜனப்பிரதிநிதிகள் கொண்ட சட்ட நிரூபண சபைக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும் என்பது. இந்த தீர்மானத்திற்கு மாறுபாடானதா என்பதை நீங்கள் கவனியுங்கள். வங்காளம் ஒருவழியாகச் சொன்னதை இத்தீர்மானம் வேறு வழியாகக் கூறுகிறது. உணர்ச்சியிலும் இலட்சியத்திலும் கொஞ்சம்கூட வித்தியாசங்கிடையாது. இந்த தீர்மானத்தில் பொக்கிஷத்தின் திறவுகோல் அல்லது நாட்டின் வருமானத்தைச் செலவு செய்யும் அதிகாரம் ஜனப்பிரதிநிதி கொண்ட சட்ட நிரூபண சபைக்கு இருக்கவேண்டுமென குறிப்பிட்டிருக்கிறது. இத்தீர்மானம் அங்கீகரிக்கப்படுமானால் அதின் அர்த்தம் என்ன? அதிகாரப் பிரிவினையானது சட்ட நிரூபண சபைக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்பதல்லவா? சட்ட நிரூபண சபைக்கு உட்பட்டிருக்காமற்போனால் வரும்படியை நிறுத்திவிடக் கூடுமல்லவா? பிரிட்டிஷ் பார்லிமெண்டார் அதை அங்கீகரிக்க மாட்டார்கள் என நீங்கள் கூறலாம். நாம் அதையா

யோசிக்கிறோம். அது வேறு விஷயம். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இதை ஜனப்பிரதிநிதிகளிடம் கொடுத்துவிடுங்காலம் வந்துவிட்டது. 150 வருட அதிகார வர்க்கத்தின் ஆளுகையில் நாம் பட்ட கஷ்டங்கள் போதும். அந்த அதிகார வர்க்கத்தினர்களின் நீதியற்ற ஆட்சி முழுமையும் போதும். ஆகவே அதிகாரவர்க்கத்தினர்களுக்கிருக்கும் அதிகார வழிகள் யாவும் நம்மிடம் வந்துவிட வேண்டுமென்பதே நம் இலட்சியம். ஆனால் பூஜ்யிதரான எனது நண்பர் லோகமான்ய திலகர் வங்காளத் தீர்மானத்தைக் காட்டிலும் பிரஸ்தாப தீர்மானம் ஒழுங்காகயிருக்கின்றது என்கிறார். அப்படியல்லவேயல்ல—தீர்மானமானது ஜவாப்தாரித்துவமான ஆட்சியைக் கேட்கின்றது. மத்திய அரசாங்கத்துக்கேனும் மாகாண அரசாங்கத்துக்கேனும் சுதந்தரங் கொடுத்தாலுஞ் சரி கொடுக்காவிட்டாலுஞ் சரி. பண விஷயமாக ஏற்படும் செலவு அதிகாரம் மட்டும் நம்மிடம் இருக்க வேண்டுமென்பதை நீங்கள் கேட்கிறீர்கள். இதல்லவா ஜவாப்தாரித்துவமான அரசாங்கம்? இதல்லாவா அதிகாரப்பிரிவினை சட்ட நிரூபணத்திற்குக் கீழ்பட்டிருப்பது? ஜின்னா கூறும் வார்த்தையை யான் அங்கீகரிக்கிறேன். கவர்ன்மெண்டானது சுத்தமாக ஒரு திட்டத்துடன் வரட்டும். நாம் பிறகு நம்முடைய திட்டத்தைத் தீர்க்காலோசித்து முன்வைப்போம். நாம் கடைசியாக வார்த்தைகளுக்கு வீணில் வாதாடுகின்றோம். நமக்குப் பூரண ஜவாப்தாரித்துவமான அரசாங்கம் வரும்வரை நாம் நம் கிளர்ச்சியை மட்டும் விடக்கூடாது. நான் ஒருவருடைய திட்டத்தையும் அங்கீகரிக்கேன். நான் என் பிறப்புரிமையைப்பற்றி



கிற்கிறேன். இங்கிலாந்து தேசத்தின் இராஜாங்க நீதியைப்பற்றியாகிலும், ஸ்விட்ஸர்லாந்து தேசத்தின் இராஜரீக அமைப்பைப்பற்றியாகிலும், ஆஸ்த்ரேலியாவின் இராஜரீக அமைப்பைப் பற்றியாகிலும் எனக்கு அவசியமில்லை. நான் வேண்டுவதெல்லாம் என் அமைப்பைப்பலப் படுத்துவதே. என்னுடைய அமைப்பை நன்கு திட்டப்படுத்தி நம் நடையுடை பாவனைக்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஒத்ததாகப் பலப் படுத்துவதையே யான் வேண்டுகிறேன். இதுவே நாம் வேண்டுவது. அரசாங்கத்தினுடைய அதிகாரம் யாவும் ஜனங்களுடைய ஆதீனத்திற்கு வருவதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். அதுவே நமது இலட்சியம். இதுவே நம் சுபாவம். இதுவே நமது பிறப்புரிமை. தாராளமாகத் தங்கு தடங்கலின்றி வசிப்பதும் வளர்வதுமே மனித ஸ்வபாவமாகும். இதுவே ஒவ்வொரு சமூகத்தின் இயற்கையுணர்ச்சியுமாகும். ஆகவேதான், நாம் அதைக் கேட்கின்றோம். அந்த உரிமை நம்மிடமிருந்து பறிக்கப்பட்டது. மீண்டும் அதைப்பற்ற நாம் வருந்துகிறோம். வாதாடுகிறோம். போர்புரிகிறோம். நாம் இதுகாறும் நித்திரையிலிருந்தோம். கடவுள் அனுக்கிரகத்தால் விழித்துக்கொண்டோம். இனி நாம் நம் பிறப்புரிமையைப் பெறமுயலுவதே நம் ஸ்வதர்மமாகும். இதுவே கடவுள் சம்மதமுமாகும்.

## ஸ்ரீமான். எஸ். கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் இயற்றிய நூல்கள்.

---

### உலக சிரேஷ்டர் யார்?

# மகாத்மா காந்தி.

மகாத்மா காந்தியடிகள் திவ்ய சரித்திரம், வெகு விரிவாகவும், அழகாகவும், உபதேசங்களுடனும் உபன்னியாசங்களுடனும் பிறப்பு முதல் இன்று வரையிலும் உள்ள விஷயங்கள் யாவும் நன்கு எழுதப்பட்டுள்ளது. இதுவரை இதுபோன்ற புத்தகம் வெளிவரவில்லை. மகாத்மாவுடன் ஒரு வருடகாலம் அவர் ஆஸ்ரமத்திலேயே யிருந்து பழகின ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களால் இது எழுதப்பட்டது.

அடங்கியிருப்பவை — அவையடக்கம்.


உபோத்காதம்.
பிறப்பெய்திய காதை.
நாடுகாண் காதை.
துன்பமுண்ட காதை.
கங்குல் குவிந்த காதை.
போர்காண் காதை.
உரிமை நீங்கிய காதை.
சிறைகோட்டக் காதை.
வினை தீர்த்த காதை.
உண்மை ஞானி.
சத்யாக்கிரக நிகழ்ச்சி காதை
பஞ்சாப் படுவதை நிகழ்ந்த காதை.
உதவி மறுத்தல் எடுப்பித்த காதை.
உதவி மறுத்தல் (தொடர்ச்சி.)
ஒப்பற்ற மருந்து.
ஸ்வராஜ்யம்.


விலை ரூபா 1—8—0

## பஞ்சாப் தலைவர்

# லாலா லஜபதிராய்

தேசத் தொண்டில் ஈடுபட்டு 1907-ம் வருடத்தில் நாடு கடத்தப்பட்ட வரும், இராஜீயக்கொள்கையில் தீவிர ஞானங் கொண்டவரும், தன் நாட்டின் பொருட்டு அமெரிக்காவிலிருந்து கிளர்ச்சி செய்தவருமான லாலாவின் ஜீவிய சரிதையும் உபதேச உபந்யாசங்களும் வியாசங்களும் அச்சிடப்பட்டுள்ளது. இது ஸ்ரீமான். எஸ். கிருஷ்ணஸ்வாமி சர்மா எழுதியது.

விலை அணா 8.

---

# சிவாஜி மகாராஜா

அன்னியப் பிரபுத்துவத்திற்குப் புறம்பாகத் தனி ஸ்வராஜ்ய மொன்று ஸ்தாபித்து நீதியுடனும் தர்மத்துடனும் பரிபாலித்த சிவாஜி மகாராஜாவின் சரித்திரம், இளமைப்பருவம், சத்துருசங்காரம், சுதந்தர நிர்ணயம், இராஜ்ய பரிபாலனம், தேச அமைப்பு முதலியவைகளை வெகு அழகாய்ப் பல சரித்திர முகாந்திரங்களைக் கொண்டு எழுதப்பட்டது. தற்காலம் இந்தியாவின் ஸ்வராஜ்யத்திற்குப் பாடுபடுவர்களுக்கு இது இன்றியமையாதது. இனி வரக்கூடிய ஸ்வராஜ்ய ஸ்தாபனத்திற்கு இது ஒரு வழி நூலாக வுள்ளது. தேசாபிமானத்தையும், ஜாதீய மரியாதையையும், தன் மதிப்பையும், தெய்வ பக்தியையும், ஒருங்கே புகட்டும் இப் புத்தகம், ஸ்ரீமான். எஸ். கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களால் எழுதப்பட்டது.

விலை ரூபா. 1—0—0

# ஸ்வராஜ்யம்

ஸ்வராஜ்யம் என்றால் என்ன? என்னுங் கேள்வியைப் பன்னிப் பன்னி கேட்பவர்களுக்குத் தக்க விடை யளிக்கும் இந்நூல் நல்ல ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டுள்ளது. இதில் ஸ்வராஜ்யத்தின் லட்சணம், வழிகள் முதலியனவும் காணப்படும். இதில், 1. ஸ்வராஜ்யமே சுகராஜ்யம், 2. பண்டை காலத்து ஸ்வராஜ்யம், 3. மொகலாய ஸ்வராஜ்யம், 4 ஸ்வராஜ்யம் வேண்டுவதேன், 5. ஸ்வராஜ்ய அமைப்பு முதலியவைகள் அடங்கியுள்ளன. ஸ்வராஜ்யத்திற்காகச் சிறை புகுந்த நம் ஸ்ரீமான். எஸ். கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதியது. விலை அணா 8.

---

## அச்சிலுள்ளவை.

1. மௌலானா ஷவுகத் அலி முகம்மத் அலி அவர்களின் சரிதையும் உபந்யாசங்களும் விலை ரூ 1.

2. சுதர்ஸன சக்கரம் (அல்லது) [illegible]ட்டினம் விலை அணா 8.

973

---

நாடகக் கம்பெனியார்களுக்கு ஒரு விருந்து

## துருவன்

மிக்க பக்தியும் சிறந்த வைராக்கியமும் ஒருங்கே அமையப்பெற்று, என்றும் அழியாத பெரும் பதவியை யடைந்த துருவனின் சரித்திரம் நாடகமாக இயற்றப்பட்டுள்ளது. இது கிருஷ்ணஸ்வாமி சர்மா [illegible]சல் எழுதப்பட்டது. விலை அணா 5.

புத்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்:—காங்கிரஸ் விளம்பர சபை

சௌகார்பேட்டை போஸ்டு,

சென்னை.